# கிராம நலம்

நவம்பர் '66





கிராம ஜனங்களுக்கு
வைத்திய வசதி.

# கிராமநலம்

கதிர் 12 நவம்பர், 1966 நெல் 2


## கிராமங்களில் வைத்திய வசதி

'' நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் ''

என்பது வள்ளுவர் வாக்கு. நோயின் தன்மையைக் கண்டறிந்து, அது வருவதற்கான மூல காரணங்களையும் ஆராய்ந்து, வந்த பிறகு அதைத் தீர்க்கும் மருந்து வகைகளைச் சேகரித்து, தக்க முறையில் வைத்தியம் செய்ய வேண்டும் என்பது இதில் காணப்படும் அனுபவ அறிவுரையாகும்.

நோய்களால் வருந்தும் மக்கள் படும் துன்பம் அளவிட முடியாதது. பிணிகளைத் தீர்க்கும் பணிகள் எப்போதும் பாராட்டுக்குரியனவாகும். எனவே, பிணி தீர்க்கும் டாக்டர்களுக்கும், வைத்திய சேவைக்கும், சமுதாயத்தில் விசேஷ மதிப்பும் மரியாதையும் உண்டு.

### வரவேற்கத்தக்க மாறுதல்

நமது மாநிலத்தில் உள்ள மாவட்டத் தலைநகரங்களில் பெரிய ஆஸ்பத்திரிகள் இருப்பது அனைவரும் அறிந்ததே. அவற்றை அடுத்து, தாலுகாத் தலைமையிடங்களில், தாலுகா ஆஸ்பத்திரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, முன்னிருந்த மாவட்டக் கழகங்கள் (District Boards) சார்பில், ஒருசில இடங்களில், மருந்தகங்கள் (Dispensaries) நடைபெற்று வந்தன. இவற்றோடு, சமுதாய நலத்திட்டம் நடைபெறத் தொடங்கிய வட்டாரங்களில், கிராம மக்களின் வைத்திய வசதிகளை முன்னிட்டு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) தொடங்கப் பட்டன. அதாவது, நோய் தீர்ப்பதற்கான வைத்திய வசதிகளோடு, நோய் வராமல் காப்பதற்கான தடுப்பு முறைகளையும் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ள வகை செய்யப்பட்டது. நோய்கள் வந்த பிறகு சிகிச்சை செய்ய வைத்திய இலாகா (Medical Department) நோய்கள் வராமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொதுச் சுகாதார இலாகா (Public Health Department) ஆகிய இரண்டும் தனித்தனியே செய்து வந்த சேவைகளில் மாறுதல் செய்யப்பட்டது. இந்த இரண்டு வகையான பணிகளையும் தக்க முறையில் ஒன்றாக இணைத்து, திறம்பட வேலை செய்வதே, ஆரம்ப சுகாதார நிலையங்களின் அடிப்படை நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அவற்றைச் சார்ந்த மகப்பேறு நிலையங்கள் (Maternity Centres), மற்ற மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றின் விவரம் வருமாறு:


| | |
|---|---|
| ஆரம்ப சுகாதார நிலையங்கள் .. .. .. .. .. .. | 167 |
| மகப்பேறு நிலையங்கள் .. .. .. .. .. .. .. | 2,186 |
| மானியம் பெறும் மருத்துவ நிலையங்கள் .. .. .. .. | 503 |
| பஞ்சாயத்து யூனியன் நடத்தும் மருத்துவ மனைகள் (Regular Dispensaries). | 244 |

பட்டம் பெற்ற டாக்டர் ஒருவரின் தலைமையில், ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், அதைச் சார்ந்து இனத்தொகையின் அளவுக்கேற்ப, மகப்பேறு நிலையங்களும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மலேரியா, காலரா போன்ற தொத்து நோய்களைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் சுகாதார அதிகாரிகள் மேற்கொள்ளும் ஏற்பாடுகளும், குடும்ப நலத்திட்டத்திற்கான நடவடிக்கைகளும் ஆரம்ப சுகாதார நிலையத்தின் மேற்பார்வையில் நடைபெறுகின்றன.

### ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணி

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான புதிய கட்டிடங்களும் அங்கு பணிபுரிவோர் வசிப்பதற்கான வீடுகளும் அமைக்கும் திட்டம் படிப்படியாக நிறைவேறிவருகிறது. டாக்டர்கள் காலை நேரங்களில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருகின்ற நோயாளிகளைக் கவனிக்கவும், மாலை நேரங்களில் வெளியே சென்று மகப்பேறு நிலையங்களை மேற்பார்வையிடவும், பள்ளிப்பிள்ளைகளின் ஆரோக்கியத்தையும் சுற்றுப்புற சுகாதார வேலைகளைக் கவனிக்கவும் ஏற்பாடாகி உள்ளது. மேலும், சுகாதாரத்திற்கேற்ற பழக்க வழக்கங்கள் பள்ளிப் பருவத்திலேயே குழந்தைகளுக்கு ஏற்படச் செய்யவும், கருவுற்றிற்கும் மாதர்களின் நலனைக் கவனிக்கவும், அவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவுப் பொருட்களை விநியோகிக்கவும், சில வட்டாரங்களில் விசேஷ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறாக, சமுதாய நலத் திட்டத்தின் விளைவாக உருவாகி வளர்ந்துள்ள மேற்சொன்ன நிறுவனங்களின் வாயிலாக, ஆயிரக் கணக்கான கிராமவாசிகளின் நோய்களைத் தீர்க்கவும், நோய்கள் வராமல் பாதுகாக்கவும் இடையறுமல் சிறந்த பணி நடைபெற்று வருகிறது.



கல்லூரி மாணவரின் கருத்தரங்கு:

# நமது திட்டங்களைக் குறை கூறுவோரின் கவனத்திற்கு.....


**திரு G. இராமச்சந்திரன், I.A.S.**

செயலாளர், நிதித்துறை, தமிழ்நாடு அரசாங்கம்


**பாரத நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய உண்மை விவரங்கள், அனைவரின் கவனத்துக்கும் உரியன. முக்கியமாக, இந்தத் திட்டங்களின் நோக்கமும், அவற்றை நெறிப்படுத்தி நிறைவேற்றும் முறைகளும், ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியன. குறிப்பாக, மாணவர் சமுதாயம் இந்த உண்மைகளை, தக்கமுறையில் அறிந்து, தமக்குள் கலந்து பேசி, கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது, மிகவும் அவசியம். இதற்கான சூழ்நிலையை உருவாக்கவே, எல்லாக் கல்லூரிகளிலும், திட்ட மன்றங்கள் (Planning Forums) நடைபெற்று வருகின்றன.**

**தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கல்லூரிகளிலும், திட்ட மன்றங்கள் திறம்படச் செயல்படுவதற்கு மாநில அளவில் முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அவர்களின் தலைமையில், 23 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவில், பல்கலைக்கழகத் துணை வேந்தர்களும், கல்லூரித் தலைவர்களும், அரசாங்கத்துறைகளின் தலைவர்களும், கிராமவளர்ச்சி நெறியாளர் உள்பட பல முக்கியஸ்தர்கள், பொறுப்பேற்றுள்ளனர். நமது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள், ஐந்தாண்டு திட்டங்கள் எனப் பொதுவாக வழங்கப்படுகின்றன. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏற்கனவே முடிவுற்று, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட சமயத்தில், 1965-ம் ஆண்டு நவம்பர் 13, 14 தேதிகளில் திட்ட மன்றங்களின் கருத்தரங்கு (Seminar) ஒன்று, சென்னை மாகாணக் கல்லூரியில் (Madras Presidency College) நடைபெற்றது. சென்னை, செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 17 கல்லூரிகளின் திட்ட மன்றப் பிரதிநிதிகள் அதில் பங்கு கொண்டனர்.**

**அச்சமயம், தமிழ்நாடு அரசாங்கத்தின் நிதித்துறை செயலாளர், திரு ஜி. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ். அவர்கள், அந்தக் கருத்தரங்கில் ஒரு சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தினர். நமது ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிப் பலர் கூறுகின்ற குற்றங்களை வகைப்படுத்தி, அவற்றைப் பற்றிய உண்மை விவரங்களை, சுருங்கிய முறையில், அவர் விளக்கினர். மாணவர்களிடையே நிகழ்த்தப்பட்ட அவர் பேச்சின் சுருக்கத்தைக் கீழே தந்துள்ளோம்.**

**திட்ட ஆய்வில் மட்டுமின்றி, செயல்முறையிலும் முக்கிய பொறுப்பேற்றுள்ள பஞ்சாயத்து நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகிய அனைவருக்கும் இவை பெரிதும் பயன்படும், ஏனெனில் அரசாங்கத் திட்டங்களைப்பற்றிக் குறைகூறுவோர், பலர், அடிப்படையான முக்கிய உண்மைகளை மறந்துவிடுகின்றனர். ஒரு சிலர் மறைக்க முயல்கின்றனர். மற்றும் பலர் மறுக்கப்பார்க்கின்றனர். ஆயினும், உண்மைகளை, யாராலும், எக்காலத்திற்கும், திரையிட்டு மறைக்க முடியுமா?—ஆசிரியர்.**

## நிதித்துறை செயலாளர் வெளியிட்ட கருத்துக்களின் சுருக்கம்

“நமது ஐந்தாண்டுத் திட்டம் ஒவ்வொன்றும், நமது நாட்டின் பொருளாதார வரலாற்றுப் பாதையில், ஒரு முக்கிய, சிறப்பு வாய்ந்த, மைல் கல்லாகும். அதிலும், ஒரு திட்டத்தின் ஆரம்ப காலமும், அது முடிவடையும் காலமும், நாட்டின் வாழ்வில் மிக விசேஷமானவை. தன்னிறைவு பெற்று, சுயபலத்தோடு இயங்கக்கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாம் அனைவரும், அவ்வப்போது ஏற்படும் விளைவுகளை தக்க வகையில் கணக்கிட்டு, சீர் தூக்கிப் பார்க்க வேண்டியது, மிகவும் அவசியம். உண்மை நிலையை எடுத்துக்காட்டும் நமது அபிவிருத்தியைப்பற்றிய உருவப்படத்தைக் கூர்ந்து நோக்கி, தேவைகளுக்கேற்ப, கொள்கை அளவுகளைச் சீர்திருத்தி அமைக்க முயல்வது, நலம். அந்த வகையில் பார்த்தால், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கும் இடை நிலைக்காலத்தை, நமது தேசத்தின் பொருளாதார வரலாற்றில், ஒரு முக்கிய பகுதியாகக் கருதவேண்டும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாவதற்கு முன்பே, தவிர்க்கமுடியாத சில மகத்தான பிரச்னைகள் தோன்றி விட்டன. கடந்த 15 ஆண்டுகளாக, நமது நாட்டு அபிவிருத்தித் திட்டப் பிரச்னை பற்றி மட்டுமே, நாம் கவனிக்க வேண்டியிருந்தது. ஆனால், இப்போதோ, எல்லாவற்றிற்கும் மேலாக, தேசப் பாதுகாப்பு (Defence) பிரச்னைகளே, முதலிடம் பெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, தேசப்பாதுகாப்புக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், திட்டத்தை எவ்வாறு மாற்றியமைப்பது என்பதே, இப்போதுள்ள பிரச்னை.

கடந்த 15 ஆண்டுகளாக, அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வந்ததின் பயனாக, திட்டமிடுவதின் அவசியத்தையும், நற்பலன்களையும் நாடெங்கிலும் உள்ள மக்கள் அனைவரும், அமோக அளவில் அறிந்து போற்றும் தேசிய உணர்வு, பெருகி உள்ளது. இயற்கை வசதிகள், பொருள் வளங்கள், பயிற்சி பெற்ற மனித சக்தி முதலியன, போதிய அளவு இல்லாத நமது நாட்டில், திட்டமிட்டுச் செயலாற்றுவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. கிடைக்கின்ற மூலாதாரங்களை வைத்துக்கொண்டு அதிக அளவுள்ள பலன்களை அடைவதற்கு, நாம் திட்டமிட்டு வருகிறோம். திட்டமிடுவது அவசியம் என்பதில், நமது நாட்டில் பெரும்பாலும் கருத்து ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. ஆயினும், அண்மையில் ஒரு சில ஐயங்களும் இடையூறுகளும் ஏற்படுகின்றன. அவ்வாறு கூறப்படும் குற்றம் குறைகளில் முக்கியமானவை பின்வருமாறு:—

1. திட்டங்கள் மிகப் பெரியவை; அளவு கடந்த பெரு வேட்கை கொண்டவை.

2. அதிகாரம் அனைத்தும் ஒரே இடத்தில் அதிகமாகக் குவிந்திருக்க, இந்தத் திட்டங்கள் வழி வகுக்கின்றன.

3. தனியார்த் துறைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில், பொதுத் துறைக்கே அளவுக்கு மீறிய முக்கியத்துவம் ஏற்பட, திட்டங்கள் முயல்கின்றன.

4. திட்டங்கள் தொழில் வளர்ச்சியை அதிகம் வற்புறுத்தியதன் பயனாக, விவசாயத்திற்கு பாதகம் நேரலாயிற்று.

5. திட்டங்கள் காரணமாக, கூடுதல் வரி ஏற்பட்டிருப்பதால், பொது மக்களுக்கு, பாரம் அதிகரித்துள்ளது.

6. விலைவாசிகள் மிக அதிகமாக உயர்ந்திருப்பதற்கு, திட்டங்களே வழிவகுத்துள்ளன:

இந்த விஷயங்கள், மாநிலச் சட்டசபைகளிலும் பாரத நாட்டுப் பாராளுமன்றத்திலும் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. ஆனால், அங்கே நடைபெற்ற விவாதங்கள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றில், அரசியல் கண்ணோட்டம், கலந்தே இருக்கும். தவிர, வாணிகச் சங்கங்களும் (Chambers of Commerce) சிவில் நிர்வாக அதிகாரிகளும், இத்திட்டங்களைப் பற்றி, தனித்தனியே தமக்குள் ஆராய்ந்து வருகின்றனர். ஆயினும், எதையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து, சுயமாகச் சிந்தனை செய்வதில் தக்க பயிற்சியும் வாய்ப்பும் பெற்றுள்ள மாணவர்களும், பேராசிரியர்களுமே, மேற்சொன்ன குற்றம் குறைகளைத் தக்கவகையில் கூர்ந்து நோக்கும், தகுதி பெற்றவராவார்.

### உண்மையான நிலை என்ன ?

முதலில் சொன்ன குறையைக் கவனிப்போம். திட்டங்கள் நிறைவேற்ற வேண்டிய இலக்குகளை நோக்கும் போது, அவை மிகப்பெரியனவாகவும்; அளவுக்கு மீறிய வேட்கையை வெளியிடுவனவாகவும் தோன்றும். ஆனால், உண்மை நிலை என்ன? மக்களின் தேவைகளைப் பார்க்கும்போது, இப்போதுள்ள திட்டங்

---

“பிரச்னைகளைத்தீர்ப்பதற்கான திறமை மக்களுக்கு உண்டு என்பதிலும், அவற்றை அவர்கள் தீர்த்து விடுவார்கள் என்பதிலும் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அவற்றை திடீரென்று தீர்க்க முடியாது. காலப் போக்கில் தான் தீர்க்க முடியும். அதற்கு உள்ளக்கண்ணோட்டத்தில் மாற்றம் தேவை. இந்த மாபெரும் பிரச்னைகளை விவேகத்துடனும், நம்பிக்கையுடனும் அணுகுவது முக்கியமானது. யாரிடம் நம்பிக்கை ? நம்மிடத்திலேயே. நம் மக்களிடத்தும், ஒன்று சேர்ந்து வேலை செய்யும் திறமையிலும், ஒன்றாகவே பெரிய பிரச்னைகளைத் தீர்ப்பதிலும் தான் நம்பிக்கை வேண்டும். நாம் வாதாடலாம். ஒருவர் மீது ஒருவர் வசைமாரி பொழியலாம் ; ஆனால், இந்த நம்பிக்கை, உறுதியாக இருக்கவேண்டும்.”

— அமரர் நேருஜி.

களை அதிக அளவானவை என்று சொல்ல முடியுமா? நான்காவது திட்டம் முடியும்போது, நமது நாட்டில் ஏற்படக்கூடிய சாதனைகள் பின்வருமாறு கணக்கிடப் பட்டுள்ளன. அதாவது, 4,500 பேருக்கு ஒரு டாக்டர், ஒரு லட்சம் பேருக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், (Primary Health Centre) ஆஸ்பத்திரியிலுள்ள எட்டு படுக்கைகளுக்கு ஒரு நர்ஸ்—இந்த அளவு மிகப்பெரியதா? அளவுக்கு மீறிய வேட்கையை உடையதா?

கல்வித் துறையில், நம்முடைய மாநிலம், போற்றத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அனைவரும் பாராட்டுகின்றனர். ஆயினும், அதன் விவரம் என்ன என்பதைப் பார்ப்போம். நான்காவது திட்ட முடிவில், 7 முதல் 14 வயதுள்ள குழந்தைகளில் 80 சதவிகிதம் பேருக்குத் தான், கல்வி வசதி எற்பட்டிருக்கும். அடுத் ததாக. 14 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50 சதவிகிதம் பேருக்குத்தான் கல்வி வசதி கிடைக்கும். இதையா. அளவுக்கு மீறிய வேட்கை என்று சொல்லுவது?

கிராமப் பகுதிகளுக்கு மின்சார வசதியும், நீர்ப்பாசன சவுகரியங்களும் அளிக்காவிட்டால், விவசாய உற்பத்தி எப்படி பெருக முடியும்? அவ்வாறு அளிக்க முயல்வது, அளவுக்கு மீறிய செயலாகுமா? எல்லை கடந்த வேட்கை எனலாமா? பல்வேறு துறைகளில் நடை பெறும் வேலைத் திட்டங்களுக்கு, ஓரளவு உதவி புரிந்து ஊக்கமளிப்பதற்காகவே, ஐந்தாண்டுத் திட்டங்கள் உரு வாக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு விசித்திரம் என்ன வென்முல், திட்டம் மிகப்பெரிய அளவில் உள்ளது என்று யார் குறை கூறுகிறுர்களோ, அவர்களே, மேலும் பள்ளிகள் வேண்டும், அதிகமான சாலை வசதிகள் வேண்டும், என்றெல்லாம் வற்புறுத்திக் கேட்கின்றனர்.

**நடைமுறையில் நடப்பதைப் பார்த்தால்..**

அதிகாரம் அனைத்தும் ஒரே இடத்தில் குவிந்து கிடக்க, திட்டம், வகை செய்கிறதென்பது, இரண்டாவது குறைபாடு. நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத் தின்படி, மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங் களும், சமஷ்டி முறையில் அமைந்திருப்பது உண்மையே இருந்தாலும், அவற்றிற்கிடையே வரையறுக்கப்பட்ட பொறுப்புகள், தெளிவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவற்றை, யாரும் மீற முடியாது. ஆயினும், மற்ற நாடுகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்ற நிலைகளையும் நிகழ்ச்சிகளையும், நாம் அடியோடு புறக்கணிக்க முடியுமா?

அமெரிக்க நாடு அதிகாரக்குவியல் முறைக்கு இடம் தரலாகாது என்ற கருத்துக்கே, முத லிடம் தந்து, செயலாற்றத் தொடங்கியது. ஆயினும், கடந்த சில ஆண்டுகளில், குறிப்பாக ஜனுபதி ரூஸ்வெல்ட் காலம் முதல், அதிகாரக் குவியல் முறையை நோக் கித்தான் நடைமுறைகள் இருந்து வருகின்றன. மத்திய அரசில் அதிகாரம் குவிந்திருப்பதால், ராஜ்ய அரசுகளின் ஆர்வத்தோடு பணியாற்றும் வேட்கைக்குத் தடை ஏற் பட்டதா? இல்லை என்று உறுதியாகக் கூறலாம். ஏனெ னில், திட்டத்தில் கூறப்பட்ட இலக்குகளுக்கு மேலா கவே, தமிழ் நாட்டில் இலவச ஆரம்பக்கல்வி அளிக்க வும், கிராமங்களுக்கு மின்சார வசதி விஸ்தரிக்கவும் முதலமைச்சர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு, எந்த விதமான தடையும், மத்திய அரசாங்கத்தால் ஏற்பட வில்லை.

தவிர, நடைமுறையில் பார்க்கும்போது, திட்டங்களின் விளைவாக, மத்திய அரசின் ஆதாரங்களும், வசதிகளும், மிகப்பெரிய அளவில், ராஜ்ய அரசுகளுக்கு மாற்றப் பட்டுள்ளன. நிர்வாக முறையில் பார்த்தாலும், அதி காரம் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதற்கும் பதிலாக, மக்களிடையே பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், பல்வேறு கட்டங்களில், அதிகாரம் பரவும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, திட்டங்கள், அதிகாரக்குவியல் முறைக்கு வழிசெய்கின்றன என்ற வாதம் கற்பனையே தவிர, உண்மை அல்ல என்பது விளங்கும்.

**அநுபவ உண்மை இதுதான்..**

தனியார்த் துறைக்கு விரோதமாக, பொதுத் துறைக்கே திட்டங்கள் அதிக முக்கியத்துவம் தருகின்றன என்ற குறையை, ஆராய்வோம். பொதுத் துறை என்பது என்ன? தனியார்த் துறையை, இச்சமயம் ஆராய்ந்து பார்க்கும்போது, பொதுத்துறை மிகச்சிறியதாகவே உள்ளது. அதாவது, மொத்த வருமானத்தில், 45 சத விகிதம், விவசாயப்பகுதியிலிருந்துதான், கிடைக்கின்றது. இந்த விவசாயப் பகுதி, தனியார்த் துறையைச் சார்ந் ததே. நான்காவது திட்ட முடிவில், பொதுத் துறைக் காகச் செய்யப்படும் நிதி முதலீடு, தனியார்த் துறையைப் பலப்படுத்தவும், அதற்குத் துணை புரியவுமே பயன்படும். இம்முதலீட்டின் பெரும்பகுதி, 50 சத விகிதத்திற்குக் குறைவாகவே இருக்கும். இவை, பெரும்பாலும் தொழில் வளர்ச்சிக்குரிய முதலீடாகவே அமையும், ஏனெனில், மின்விசைத் திட்டங்கள், சாலைகள் வளர்ச்சி, துறைமுகங்களின் அபிவிருத்தி முதலியவற்றை அதி கரிக்கும் வகையில், திட்டங்கள் உருவாகியுள்ளன.

---

"இந்தியக் குடியரசின் பிரஜைகளாகிய நாம், நிமிர்ந்து நிற்போம். நிமிர்ந்து நின்று, நமது கால்களை நிலத்தில் பதித்து வைத்துக்கொண்டு, வானத்தை நோக்குவோம். இந்நிலையிலே, பாரத மக்களை ஒன்று படுத்துவோம். அரசியல் ஐக்கியம் ஏற்கெனவே ஓரளவுக்கு ஏற்பட்டுவிட்டது. இந்திய மக்களிடையே உணர்வில் ஒற்றுமை தோன்றவேண்டும். நாமனைவரும் ஒன்று என்ற எண்ணம் ஏற்படவேண்டும். நமது மாறுபட்ட மரபுகளுக்கிடையேயும், வலிமை வாய்ந்ததொரு தேச உணர்வை தோற்றுவிக்க வேண்டும்."

—அமரர் நேருஜி.

இவை எல்லாம், பொதுத் துறையை விட, தனியார்த் துறைக்கே அதிகமாகப் பயன்படுபவை என்பது, அனுபவத்தில் காணக்கூடிய உண்மை.

**விவசாய வளர்ச்சி புறக்கணிக்கப்படுகிறதா?**

திட்டங்கள், தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதன் விளைவாக, விவசாய வளர்ச்சிக்கு, பாதகம் ஏற்படுகிறது என்று கூறுவது, மிகவும் தவறான வாதமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அதிகக் கிணறுகள் தோண்டுதல், பாசனத்திற்கு மின்சார வசதியளித்தல். உரங்களை விநியோகித்தல் முதலியவற்றின் மூலம், விவசாயிகளுக்கு உதவி அளிப்பதன் வாயிலாக, விவசாய உற்பத்தி பெருக, வழி செய்யப்படுகிறது. எனவே விவசாயத்துக்கு உரிய கவனிப்பு இல்லை எனக் கூறுவது, பொருந்தாது. விவசாய வளர்ச்சிக்குரிய பல்வேறு திட்டங்கள் உருவாகியிருப்பது, அனைவரும் அறிந்த உண்மையாகும். உர உற்பத்திக்கான தொழிற்சாலைக்கு முதலீடு செய்வது கூட, முடிவில் விவசாய வளர்ச்சிக்கே பயன்படுவதை, நாம் மறக்கக்கூடாது.

**குறைபாட்டில் உள்ள குறை**

திட்டமிடுவதன் காரணமாக, கூடுதலான வரிகள் விதிக்கப்பட்டு, பொது மக்களின் மீது வரிச்சுமை அதிகமாகிறது என்ற குறையை கவனிப்போம். மத்திய அரசாங்கம், ராஜ்ய அரசு ஆகிய இரண்டும் சேர்ந்து, நம் நாட்டில் விதிக்கும் வரியின் அளவு, தலைக்கு சராசரி, 50 ரூபாய் என்ற விகிதத்தில் உள்ளது. இந்த விகித அளவு, நமது தேசத்தை விட அபிவிருத்தி குறைவாகவுள்ள இலங்கை, மலேசியா போன்ற நாடுகளை விட, மிகவும் குறைவானதாகும். தவிர, நம்முடைய நாட்டின் தேசிய வருமானம், 13 சதவிகிதத்திலிருந்து, நான்காவது திட்ட இறுதியில் 17 சதவிகிதமாக உயர்த்த வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலும், நமது அண்டை நாடான பாகிஸ்தானோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். நான்காவது திட்ட முடிவில் நாம் அடைய இருக்கும் 17 சதவிகித தேசிய வருமான உயர்வை இரண்டாவது திட்டத்திலேயே, மேனாட்டாரின் அபரிமிதமான பொருளாதார உதவியைப் பெற்று, பாகிஸ்தான் அடைந்துவிட்டது. இந்த அளவை, நாம் நான்காவது திட்ட இறுதியில் தான், அடைய முடியும். நாமும் அதே மாதிரி மேனாடுகளின் உதவியைப் பெற முயல்வதோடு, அந்நியச் செலாவணி தேவைப்படாத தொழில்களிலே முதலீடு செய்வதில், அதிகக் கவனம் செலுத்த வேண்டியது, மிகவும் அவசியமாகும்.

## தமிழ் ஆட்சி மொழி

**கூடிய விரைவில் அரசாங்க அலுவலகங்கள் அனைத்திலும் தமிழை நிர்வாக மொழியாக்க வேண்டும் என்ற கொள்கையை ஒட்டி, 1966 அக்டோபர் 1-ம் தேதி முதல், செங்கல்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர், சேலம் மாவட்டம் ஓமலூர்; திருநெல்வேலி மாவட்டம்–நாங்குநேரி ஆகிய இடங்களிலுள்ள கிராமத் தொழில்கள் திட்ட அதிகாரி அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டுள்ளது.**

---

வருமான வரியும், செலவு வரியும (Expenditure tax) ஆகியவற்றின் விகிதாச்சார அளவு, நம் நாட்டில் அதிகமாக உள்ளது, என்று குறை சொல்வது சரியல்ல. ஏனெனில், நமது நாட்டில், விதிக்கப்படும் வருமான வரியின் அளவு, மொத்த வருமானத்தின் மீது வசூலிக்கப்படும் தொகையில், ஒரு சத விகிதமாகவே உள்ளது. செலவு வரி, இதைவிட இன்னும் குறைச்சலாகும். இவ்வாறு கணக்கிட்டுப் பார்த்தால், அத்தகைய வரிகளில், எட்டில் ஏழு பங்கு அளவு, பணக்காரர்களை நேரிடையாகப் பாதிப்பதில்லை. அதே போல், நிலவரி மூலம் கிடைப்பது 2·6 சதவிகிதமேயாகும். எனவே, நம் நாட்டிலுள்ள வரியின் அளவு அதிகம் என்று மிகைப்படுத்திக் கூறுவது, உண்மையல்ல. உயர்வு நவிற்சியேயாகும்.

**விலைவாசி உயர்வுப் பிரச்னை**

திட்டம் காரணமாக, விலைவாசிகள் உயருகின்றன என்று, சொல்லப்படுகிறது. ஆனால், விலைவாசி உயர்வு, இரண்டாவது திட்டக் காலத்தில்தான் ஏற்பட்டது. மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, நம் நாட்டின் விலைவாசி உயர்வு, மிகவும் அதிகம் என்று, சொல்ல முடியாது. விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட மந்தமான நிலையும், பண்டங்கள் குறித்த காலத்தில் மார்க்கெட்டுகளுக்கு வந்து சேருதலில் உள்ள குறைபாடுகளும், விநியோக முறை சீராக இல்லாததுமே, விலைவாசி உயர்வுக்குக் காரணங்களாகும். உணவு உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் போதாது; மார்க்கெட்டுகளுக்குப் பண்டங்கள வந்து சேருவதை ஒழுங்கு பெறச் செய்தலும், விநியோக முறை சீராக இயங்கச் செய்வதும், மிகவும் அவசியமானவையாகும். உற்பத்தியாகிற பண்டங்கள், மார்க்கெட்டுகளுக்கு நிலையாகவும், ஒரே சீராகவும் வந்து சேர்வதற்கான வழி வகுப்பதோடு, விநியோகம் சீராக இயங்குகின்ற முறையில், நடைமுறைத் திட்டம் ஒன்று உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

—0—

சாதனைக் குறிப்புகள் :

குப்பச்சிபாளையம் கிராமம், வான் பொய்க்கினும் தான் பொய்க்காத காவிரியின் கரையினை அடுத்து உள்ளது. இங்கே ஒரு வாய்க்கால் பாய்கிறது. அவ்வாய்க்காலின் பெயர் பாபுலர் முதலியார் வாய்க்கால். இவ் வாய்க்கால் தோட்டக்குறிச்சி என்ற கிராமத்துக்குக் கிழக்காகப் பாய்ந்து குப்பச்சி பாளையம் கிராமத்தின் அருகே வாங்கல் வாய்க்காலில் இணைகிறது. அப்படி இணைகின்ற இடத்தில் தண்ணீர் தேங்கி, சுமார் 100 ஏக்கருக்கும் மேலான நிலங்கள் அடிக்கடி பாழாகிக்கொண்டு வந்தன. குடிசை வாழ் மக்களும் மீண்டும் மீண்டும் தேங்கும் தண்ணீரால் அல்லல் பட்டனர். விளையும் நிலங்களுக்கும் போக்குவரத்துக்கும் இடைஞ்சலாக தண்ணீர் வேறு இடங் களுக்கு பாய வழியின்றி உபயோகமற்று இருந்தது. மக்களோ வருந்தினர். இதற்கு ஒரு விடிவு காலம் வராதா எனக் காத்திருந்தனர். இந்திய தேசிய ராணுவத்தில் பணிபுரிந்த திரு ராமசாமி என்பவர் இதற்கு ஒரு முடிவு கட்ட தீர்மானித்தார். கிராமத் தொண்டர் படை இயக்கம், அப்போதுதான் ஆரம்பமாயிற்று. இந்த இயக்கம் அவருக்கு ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியது. ஒவ்வொரு வீடாகச் சென்று ஒவ்வொரு நபராக சந்தித்து, இந்த அவல நிலையைப் போக்க ஆள் சேர்த்தார். ஆரம்பத்தில் அவருக்குத் தோல்வியே ஏற்பட்டது. இருப்பினும் கலங்கவில்லை.

"முயற்சி திருவினை ஆக்கும்" என்ற முதுமொழிக் கிணங்க மீண்டும் மீண்டும் முயற்சி செய்தார். அவ்வூர் பஞ்சாயத்துத் தலைவர் திரு ரெங்கராஜ் என்பவரைச் சந்தித்து நிலைமையை விளக்கினார். அவரும் இப் பணியில் ஈடுபட்டுப் பல இன்னல்களுக்கு இடையே ஒரு முடிவெடுத்தனர்.

கிராம மக்கள் ஒற்றுமையுடன், ஊரை உயர்த்தும் திருப்பணியில் தியாக உணர்வுடன் இறங்கினால், எந்தக் காரியத்தைத் தான் செய்ய முடியாது என்று சவால் விடுகிறது, திருச்சி மாவட்டம், கரூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள குப்பச்சிப்பாளையம் கிராமம்

# வாழ்வு தந்த வாய்க்கால்

எடுத்த காரியம் யாவினும் வெற்றி

கிராமத்திலுள்ள வயது வந்த ஆண்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து ஒரு படை திரட்டினர். அவ் இரு வாய்க்கால்களும் சேரும் இடத்தினருகே வாய்க்கால் ஒன்று வெட்டி, அவ் வாய்க்காலில் நீரை கொண்டு செல்ல தீர்மானித்தனர்.

அதன்படி, வாய்க்கால் வெட்ட பட்டா நிலச்சுவான்தார்களை அணுகி, வாய்க்கால் வெட்டும் அளவிற்கு நிலங்கள் கொடுக்கக் கேட்டுக்கொண்டனர். இருப்பினும் நிலச்சுவான்தார்களில் சிலர் மறுக்கத்தான் செய்தனர். கடைசியில் ஒரு பஞ்சாயத்து அமைத்து, வாய்க்கால் வெட்ட நிலச்சுவான்தார் களிடமிருந்து நிலம் பெற்று, மூன்று மைல் நீளத்திற்கும் வெட்டி விட்டனர். சிற்சில இடங்களில் 18 அடிக்கும் மேல் ஆழமாக வெட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அப்படி இருப்பினும், அவ்வூர் மக்கள் மனங்கலங்காது, மூன்று மைல் நீளம் வெட்டி முடித்தனர்.

இதனால், நாச மடைந்து கொண்டு வந்த 100 ஏக்கர் நிலங்கள் பாது காக்கப்பட்டதோடல்லாமல், மேட்டுப் பாங்கான இடத்தில் இருந்த சுமார் 250 ஏக்கர் நிலங்கள் நஞ்செய் நிலமாக்கப்பட்டன. இதனால், சுமார் ஆயிரம் மக்கள் வாழ்வு காண வழி ஏற்பட்டது. அவ்வூர் மக்கள் தற்போது அவ் வாய்க்காலை "வாழ்வு தந்த வாய்க்கால்" என்றே அழைக்கின்றனர்.

சீரிய தலைமை, உறுதி, நீடித்த முயற்சி, மக்கள் ஒற்றுமை ஆகியவற் றின் மூலம், சுய தேவையைப் பூர்த்தி செய்து இலட்சியத்தை அடைய முடியும் என்பதற்கு, இக் கிராம மக்கள் எடுத்துக் காட்டாக விளங்குகின்றனர்.

# சமுதாய மாற்றத்திற்கு

சமுதாயத்தில் அனைவரும் சரிநிகர்ச் சமானமாக வாழ, அண்ணல் காந்தி அடிகள் காட்டிய வழி பற்றி விளக்கப்பட்டுள்ளது, இக்கட்டுரையில். ஏமாற்றும் சூழ்ச்சியும் நிறைந்த உலகில், அன்பும் அகிம்சையும் நிலவ பாடுபட்ட அந்த உத்தமப் பெரியாரின் கோட்பாடு, அதில் பொதிந்து கிடக்கும் தத்துவம் என்ன என்பது பற்றியெல்லாம், தெளிவாகவும், அழகாகவும் விளக்கியுள்ளார், கட்டுரை ஆசிரியர். மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றிவைக்கப் பாடுபடும் உத்தமத் தொண்டர்களில் முதல் வரிசையில் வைத்து எண்ணப்படவேண்டியவர், இக்கட்டுரை ஆசிரியர். அவர் கூறும் அறிவுரை, எல்லோருக்கும், குறிப்பாக, நம் கிராம மக்களுக்கு அருமருந்தாகப் பயன்படும்— ஆசிரியர்.

# காந்தி வழி

(திரு கே. அருணாசலம், தலைவர், மாநில பூதான யக்ஞ போர்டு, மதுரை.)

சமூகம் ஒவ்வொரு விநாடியும் மாறியமைந்து கொண்டிருக்கிறது. இது உலக இயல்பு மட்டுமல்ல; வளர்ச்சியின் அறிகுறியுமாகும். சில சமயங்களில் திடீரென பெரும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

பெரும்பாலும் ரத்தம் சிந்தும் வன்முறைச் செயல்கள் மூலமே, சமுதாயத்தில் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், அத்தகைய ரத்தம் சிந்திய புரட்சிகளால் புதிய மனித உறவுகளோ, புதிய மதிப்பளவுகளோ உலகில் ஏற்படவில்லை. பிரஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி முதலியவெல்லாம் ரத்தக் களறியின் பின்னரே ஏற்பட்டன. ரத்தம் சிந்தாத சில புரட்சிகள் நடந்துள்ளதற்கும் சரித்திரச் சான்றுகள் இல்லாமலில்லை.

### பழைய ஏட்டைப் புரட்டினால்..

பரத கண்டம், பரந்த நிலப்பரப்பினை உடையது. கால வெள்ளத்தில் பல்வேறு மொழி பேசுவோர், பல்வேறு இனத்தவர், பல்வேறு மதத்தினர் இங்கு வந்து குடியேறினர். வேற்றுமை காரணத்தால் குழப்பங்களும் கலகங்களும் ஏற்பட்டுள்ளன. அவ்வப்போது மக்களைத் திரட்டி ஆங்காங்கே பெருநில மன்னர்களும் குறுநில மன்னர்களும் ஆட்சி புரிந்து வந்திருக்கின்றனர். இவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டுப் போர் புரிந்ததும் உண்டு. சிலர் வெளிநாட்டினரின் உதவியை நாடி, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து முடிவில் அனைவருமே அடிமையான கதையையும் காணலாம். ஆளும் அரசர்களின் தான்தோன்றித்தனத்தால், நாட்டில் பஞ்சமும் பட்டினியும் பரவலாக இருந்திருக்கின்றது. இதை எதிர்த்து மக்களும் வன்முறைகளைக் கையாண்டு, சில சமயம் வெற்றியும் பல சமயம் தோல்வியும் அடைந்துள்ளனர்.

ஆங்கிலேயர்கள் நாட்டின் பெரும்பகுதியை ஒரு குடைக்கீழ் கொண்டுவந்து, சமாதான ஆட்சி நிலவச் செய்து ஜனநாயக நிறுவனங்களின் மூலம் நிர்வாகம் நடத்தத் தொடங்கிய பின் இந்தியத் தலைவர்கள் சட்ட மன்றங்களின் மூலம் விரும்பும் மாறுதல்களைச் செய்து கொள்ளலாமென்று நினைத்தனர். திரு ராஜாராம் மோஹன் ராயின் அரும் முயற்சியால் 'சதி' போன்ற குரூரப் பழக்கவழக்கங்கள் ஒழிந்தன. திரு கோபால கிருஷ்ண கோகலேயின் பெரும் பணியால் வரிவசூல் துறையிலும் கல்வித் துறையிலும் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. இவையும் இவை போன்ற பிறவும் சமுதாய மாற்றங்கள் தாம். ஆயினும் இவை புரட்சிகரமான அடிப்படை மாற்றங்கள் அல்ல. ஆளுபவரும் ஆளப்பெறுவோரும் பழைய கோட்பாடுகளின் அடிப்படையிலேயே சென்றனர். காந்தியடிகள் நாட்டின் தலைமையை ஏற்கும் வரை மக்களுக்குத் தெரிந்த ஒரே வழி, வன்முறை தான்.

## புதிய சகாப்தம் உதயமாகியது

காந்தியடிகள் இந்திய அரசியல் வானில் 1915-ம் ஆண்டு தோன்றினார். சில ஆண்டுகள் இந்தியாவைத் தெரிந்து கொள்ள, நாட்டின் நாலா பக்கங்களுக்கும் சென்று ஆராய்ந்தார். மக்களையும் ஆள்வோரையும் ஆட்சி முறையினையும் நுணுக்கமாகக் கண்டறிந்தார். நாட்டில் நடந்தது அந்நியர் ஆட்சி. மக்கள் அறியாமையில் ஆழ்ந்திருந்தனர். உள்நாட்டு வெளி நாட்டுப் பிரச்னைகள் பல; மெஜாரிட்டி மைனாரிட்டியினருக்குள் பிணக்கு. ஹிந்து சமூகத்தில் தீண்டாமை என்னும் தீய பழக்கம்; அதனால் விளைந்த அநீதிகள். பொருள் இயல் உலகத்தில் சுரண்டல்; நிர்வாகத்தில் லஞ்ச ஊழல்; இவையும் இவற்றுடன் தொடர்புடைய நோய் நொடியும் வறுமையும் இந்த நாட்டைப் பிடித்த பீடைகளாக இருந்தன. இப் பிரச்னைகளுக்கெல்லாம் புரட்சிகரமான மாறுதல் தான் பரிகாரம் என்பதைக் காந்தியடிகள் உணர்ந்தார். பரவல் முறை, தருமகர்த்தா தத்துவம், எளிமை, ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் என்ற பஞ்ச அஸ்திரங்களின் மூலம் அடிப்படையான மாறுதல் செய்து சமூகத்தை சத்தியம், அன்பு என்ற நிரந்தரமான அடிப்படை மீது கட்டி மனித மாண்பை நிலைக்கச் செய்ய அவர் கருதினார்.

## காந்தி காட்டிய வழி

புரட்சிகரமான புதிய சமுதாயத்தினை நிறுவ, இந்தியா அடிமைத்தளையினின்றும் விடுபடவேண்டும். இந்திய விடுதலைக்காக பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தார். அருங்கலைவாணர் மெய்த்தொண்டர் தம் வழியான அறவழியே போர் வழியிலும் சிறந்ததென்று துணிந்து அறநெறியாகிய சத்தியாக்கிரக நெறியில் நாட்டை அழைத்துச் சென்றார். வெற்றியும் கண்டார். கத்தியும் ரத்தமும் இல்லாத இச்சத்தியப் போர் நிகழ்ந்த காலத்திலேயே அரசியல் அதிகாரம் பொருளியல் அதிகாரமும் மக்கள் கைக்குச் சென்று பரவலாகச் செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இது இன்னும் முற்றுப்பெறவில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு அவர் வகுத்த திட்டம் அரசியல் நிறுவனங்கள் அமைவதற்கு முன்மாதிரியாக இருந்தன. கிராமக் காங்கிரசும் அவற்றிற்கு உதவியாக ஜில்லா சபையும் மொழிவாரி மாநில நிறுவனங்களும் கொள்கைகளை வளர்க்க அகில இந்திய நிறுவனமும் அமைத்தார். சேவைக்காகவே அடிப்படை நிறுவனங்கள் இருப்பதனால், அவை மீது மக்கள் ஆதிக்கம் இருக்கும்படி பார்த்துக் கொண்டார். அதிகாரம் பணி செய்வதற்குத்தான்; அதனைத் தியாகத்தாலும் இடையறாத தொண்டாலுமே பெறலாம் என்பதை அவர் வற்புறுத்தினார். பதவியிலுள்ளவர்கள் ஆதிக்கம் செலுத்தாதவாறு அமைதி காத்தல் எங்ஙனம் என்பதைச் சிந்தித்து அன்பு ஆட்சிக்கு உகந்த மார்க்கங்களைக் கண்டறிய விழைந்தார். அவர் காலத்தில் அதனை முற்றும் கண்டறியவில்லையாதலால், அவர் "இதனை வருங்காலத்தில் எவராவது கண்டுபிடிப்பர்—கண்டுபிடிக்க வேண்டும். இல்லையேல் அன்பு சமுதாயம் அமைவது கடினம்" என்று தீர்க்கதரிசனம் சொல்லிப் போயிருக்கின்றார்.

## கிராமக் கூட்டுறவுக் குடியரசு

அன்பின் பலத்தால் நடைபெறும் தேசத்தின் அரசியல் கிராம ராஜ்யங்களைக் கொண்ட கூட்டுறவுக் குடியரசாகவே இருக்க முடியும் என்பது, காந்தியடிகள் கண்ட உண்மை. இதனைச் செயலாக்குவதற்கான திட்டம், கிராம ராஜ்ய இயக்கம். ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும் துணிமணிகளுக்கு வேண்டிய பருத்தியையும் உற்பத்தி செய்யும். இதுதான் அதனுடைய முதல் வேலை. அவசியமான காரியங்களில் கிராமங்கள் ஒன்றையொன்று சார்ந்திருக்கும். கிராமத்தில் ஐந்து பேரைக்கொண்ட பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கப்படும். இப் பஞ்சாயத்தின் மூலம் கிராம நிர்வாகம் நடைபெறும்.

## சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு பென்ஷன்

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மாதம் ரூ. 50 பென்ஷன் வழங்கும் திட்டத்தை, 1966 அக்டோபர் 1-ம் தேதி முதல் அமுலுக்குக் கொண்டுவர, தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நிதி உதவி அளிக்கும் விஷயத்தில் இதுவரை இந்திய அரசாங்க உள்நாட்டு அமைச்சகத்தில் யுக்தானுசார மானியத்திலிருந்து வழங்கும்படி, அரசாங்கம் சிபாரிசு செய்து வந்தது. விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டது மூலம், தேசப் பணியாற்றியவர்களுக்கு உதவியளிக்கும் விஷயம் கொஞ்ச காலமாகவே அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வந்தது. மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில்உள்ள திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குப் பென்ஷன் வழங்குவதென்று, அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. தேச விடுதலைஇயக்கத்தில் பங்கு கொண்டு மூன்றுமாதங்களுக்குக் குறையாமல் காவலில் வைக்கப்பட்டவர்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள், தூக்குதண்டனை அடைந்தவர்கள், துப்பாக்கிப்பிரயோகத்தினாலோ தடியடியினாலோ மாண்டவர்களுமான சுதந்திரப் போராட்ட வீரர்கள் விஷயத்தில். இந்த பென்ஷன் தரப்படும். தேசவிடுதலைக்கான கடைசியாக நடந்த இயக்கம் 1942.க்கும் 44-க்கும் இடையில் நடந்தாகும்.

நெருங்கிய உறவினர்கள் அளிக்கும் உதவி உள்பட எல்லா வழிகளிலும் சேர்ந்து, மாதம் ரூ. 100-க்கு மேற்படாத வருமானம் உள்ளவர்கள் மட்டுமே, இந்தப் பென்ஷனுக்கு உரியவர்கள். சுதந்திரப் போராட்டத்தில் இறந்து போயிருந்தால் மனைவிக்கு (அல்லது கணவனுக்கும்) மைனர் குழந்தைகளுக்கும் இந்தப் பென்ஷன் வழங்கப்படும். வாரிசாக இருப்பவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருந்தால், மொத்தம் கொடுக்கக் கூடிய தொகை 50 ரூபாயே ஆகும்.

சுதந்திரப்போராட்ட வீரர், தாமே இந்த உதவிப் பணம் பெறுபவராக இருக்கும் பட்சத்தில். அவரது ஆயுட்காலம் வரை பென்ஷன் தரப்படும். பென்ஷன் பெறுபவர், சுதந்திரப் போராட்ட வீரரின் மனைவியாக இருந்தால், அவரது ஆயுட்காலம் வரையில் பென்ஷன் கொடுக்கப்படும். மறு மணம் செய்து கொண்டால், மனைவிக்கு பென்ஷன் இராது. உதவி பெறுபவர் பையனாகவோ, மைனர் பெண்ணாகவோ இருந்தால், பையனுக்கு 18 வயது வரையிலும், பெண்ணுக்கு மணமாகும் வரை அல்லது 21 வயதாகும் வரை, இதில் எதில் முதலாவது நேருகிறதோ அதுவரை மட்டுமே பென்ஷன் தரப்படும்.

பென்ஷன் தவறான அடிப்படையில் கொடுக்கப்பட்டதாகவோ, அல்லது பென்ஷன் பெறுபவரின் பொருளாதார நிலை அபிவிருத்தியடைந்து விட்டதாகவோ தெரிந்தால், இந்தப் பென்ஷன் நிறுத்தப்படும். பென்ஷன் பெறுபவர் தமிழ் நாட்டில் மூன்று மாதங்களுக்குமேல் இல்லாமல் இருந்தாலும், பென்ஷன் ரத்தாக இடமுண்டு. பென்ஷன் பெறுபவர் திரும்பி வந்து, தமிழ்நாட்டில் வசிக்கத் தொடங்கினால், தக்க பரிசீலனைக்குப் பிறகு, பென்ஷனை திரும்பக் கொடுக்க வகை செய்யப்படும்.

இந்த விதிகளின்படி பென்ஷன் பெற, "அரசாங்க பிரதம காரியதரிசி, பொதுத்துறை, கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு மனுச்செய்ய வேண்டும். மனுவுக்கு கோர்ட்டு ஸ்டாம்பு எதுவும் ஒட்டவேண்டியதில்லை இந்த பென்ஷன் விதிகள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும், அரசாங்கத்தின் முடிவே இறுதியானது.

இந்த விதிகளின்படி அனுமதிக்கப்படும் பென்ஷன் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து கொடுக்கப்படும். மொத்தத்தொகையாக மாற்றித் தரப்படமாட்டாது.

பென்ஷன் பெறுபவர் காலமாகிவிட்டால், அவர் காலமாகும் நாள் வரை சேரக்கூடிய பென்ஷன் தொகையையும், கொடுபடாத தொகை இருப்பின், அதுவும் தரப்படமாட்டாது. ஆயினும், அசாதாரண சந்தர்ப்பங்களில் பாக்கித்தொகையைத் தர அரசாங்கம் இசையக்கூடும்.

பென்ஷன் பெறுபவர், மூன்று மாதங்களுக்குமேல் விலாச மாறுதல் இருந்தால் அரசாங்கத்துக்கும், சென்னை சம்பள கணக்கு அதிகாரிக்கும் பென்ஷன் பட்டுவாடா செய்யும் கஜானா உப அதிகாரிகளுக்கும் தெரிவிக்க வேண்டும்.

## கதர் விற்பனைக்கு விசேஷக் கழிவுத் தொகை

**தீபாவளியை முன்னிட்டு அக்டோபர் 28-ம் தேதி முதல் நவம்பர் 11-ம் தேதி வரை தமிழ்நாட்டில் அத்தாட்சி பெற்ற கதர் விற்பனை நிலையங்களில் கதர்த் துணிகளின் சில்லறை விற்பனையின் பேரில் 15 சதவீத கழிவுத் தொகை அளிப்பதென தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில்கள் போர்டு முடிவு செய்திருக்கிறது.**

---

அவசியமான அதிகாரமெல்லாம் இந்தப் பஞ்சாயத்துக்கு இருக்கும். இங்கு காரியங்கள் எல்லாம் அகிம்சை விதிப் படியே நடக்கும். உலகமெல்லாம் திரண்டுவந்தாலும், எதிர்க்கும் சக்தியுள்ளவர்களாக இருப்பார்கள், கிராமத் தார். கிராமப் பாதுகாப்புத் தொண்டர்கள் கட்டாயமாகச் சேவை செய்வார்கள். ஒவ்வொரு கிராம வாசியும் தனது மானத்தையும் கிராமத்தில் மரியாதையையும் காப்பதற் காகத் தமது உயிரையும் கொடுக்கத் தயாராக இருப் பார்.

### அண்ணலாரின் அடிச்சுவட்டில் . . .

சுதந்தரம் வந்தபின் காந்தியடிகளின் அரசியல் வாரி சான ஜவஹர்லால் நேருவின் தலைமையில் ஆட்சி முறையைப் பரவலாக்கும் நோக்குடன் பஞ்சாயத்து ராஜ்ய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மக்களுக்குச் சேவை செய் யவே பஞ்சாயத்து. இந்தியாவின் உண்மையான ஜன நாயகத்தின் முதலாவது தனி உறுப்பாக உள்ளது கிராமப் பஞ்சாயத்து. மத்திய அரசியல் இருபது பேர்கள் அமர்ந்து கொண்டு ஜனநாயகத்தை அமுல் நடத்தி விடமுடியாது: அது அடித்தளத்தில் ஒவ்வொரு கிராமத்திலுள்ள மக்க ளாலும் அமுல் நடத்தப் பெறவேண்டும். எனவே நாட்டை ஐந்து ஆயிரம் வட்டாரங்களாகப் பிரித்து ஒவ் வொரு வட்டாரத்திலும் பஞ்சாயத்து யூனியன்கள் ஏற் பட்டன. நாற்பது ஐம்பது கிராமப் பஞ்சாயத்துக்களைக் கொண்டது இந்த யூனியன்கள். இவற்றிற்குச் சட்ட பூர்வ மான அதிகாரங்களும் அவ்வதிகாரங்களைச் செயல்படுத்த வேண்டிய பிற வசதிகளும் கொடுக்கப் பெற்றுள்ளன. சென்ற சில ஆண்டுகளாக இவை செயல் பெற்று வருகின்றன. மக்களின் விழிப்பையும் ஆர்வத்தையும் பொறுத்தது இவற்றின் எதிர்காலம். பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களின் செயல்முறைகளில் குறைபாடுகள் சில இருப்பினும், எதேச்சாதிகார ஆட்சிக்கு மாற்றாக மக்கள் சக்தியை வலுவாக்கும் ஜனநாயக ஆட்சி தழைத்தோங்க கிராம ராஜ்ய இயக்கம் இன்றியமையாத தென்பது உண்மை. அரசாட்சித் துறையில் அதிகாரத்தை எப்படிப் பரவலாக்குவது என்பதற்கு பஞ்சாயத்து ராஜ்ய இயக்கம் ஓர் எடுத்துக்காட்டு.

### பரவலான பொருளாதார அமைப்பு . .

பொருளாதாரத்திலும் குவியல் முறை நிறுவனங்களால் வரும் கேட்டைத் தவிர்க்க கிராம அளவில் உள்ள உற்பத்தி விநியோக முறைகளுக்கு ஊக்கமளிக்க காந்திஜி விரும் பினார். பொருள் ஒருவரிடம் சேர்வதால் ஏற்படும் அதி காரக் குவியலை அவர் விரும்பவில்லை. ஆதலால் தான் முடிந்த அளவு பொருளாதார அமைப்பு பரவலாக்கப்பட வேண்டுமென்றார். முடியாதபோது பெரும் தொழிற்சாலை களும் பிற குவியல் முறை நிறுவனங்களும் தனி நபரால் நடத்தப்படுவதைவிட அரசாங்கத்தால் நடத்தப்பட வேண் டும். இவை அரசாங்க உடைமையாவதையே அவர் விரும் பினார்.

எவ்வளவுதான் அமைப்புக்களை மாற்றினாலும் இயல் பிலேயேயுள்ள அறிவு ஆற்றல் வித்தியாசங்களினால் பண மும் அதிகாரமும் ஒருசிலரை நாடுவது இயல்பு. இதனை மக்கள் உணர்ந்து தமது திறமைகளையும் உடைமைகளையும், தம்மைத் தரும கர்த்தாக்களென எண்ணி, ஏற்று பொதுநலனைக் கருத்தில் கொண்டு நடத்த வேண்டுமென விரும்பினார். மனிதன் மனத்தையுடையவன். அவன் மனத்தில் எழும் ஆசைகளும் எண்ணங்களும் உணர்வு களும்தான், பின்னர் செயலாக வெளிப்படுகின்றன. செயலில் தூய்மை வர மனம் புனிதமடைய வேண்டும். சமூகம் உயர்ந்த கருத்துக்களை ஏற்றுக் கொண்டு அவற்றைப் போற்றி வளர்த்தால் சமூகத்தில் உள்ள பெரும்பாலோர் தாமும் அதனை ஏற்பர். அதற்கு உறுதுணையாகக் கல்விச் சாலைகளையும் அமைக்க வேண்டும். இது நவீன மணநூலார் கருத்து. காந்தியடிகளும் இக்கோட்பாட்டின்படியே எதிர்காலசமுதாயம் புரட்சி கரமாக மாறியமைந்து சூழ்ச்சியும் சுரண்டலுமற்ற சம நீதியுடன் வாழ தருமகர்த்தா முறை தக்கதென உணர்ந்தார்.

### தருமகர்த்தா முறையின் தத்துவம்

தருமகர்த்தா என்னும் சொல் இன்று கோவில் சொத்தையோ அல்லது பிறர் சொத்தையோ நிர்வகிப் பவர்களைக் குறிக்கிறது. காந்தியடிகளின் கருத்து இதினின்றும் சற்று விரிவானது. ஒவ்வொருவரும் தம் சொத்திற்கும் தமக்குள்ள அறிவுக்கும் ஆற்றலுக்கும் தருமகர்த்தாவாக இருக்கவேண்டுமென்பதையே அவர் குறிப்பிட்டார். ஓர் ஆலை முதலாளி தனது ஆலையிலிருந்து வரும் வருமானத்திலிருந்து தனது அத்தியாவசியமான செலவுகளுக்கு மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். மிஞ்சிய அனைத்தும் சமூக நலனுக்காகத் திட்டமிட்டுச் செலவிட வேண்டும். தாம் எடுத்துக் கொள்வதும் தாம் இருக்கும் சமூகத்தில் உள்ளவர்களின் சராசரி வருமானத்தை ஏற்க்குறைய ஒத்ததாகவே இருக்க வேண்டும். சமூகத்தில் உள்ள பெரும்பாலோரைவிட அதிகச் செலவிற்கும் படாடோபத்திற்கும் இடமில்லை.

தருமகர்த்தாவாகத் தன்னைக் கருதும் முதலாளி, சமூகத்திற்கு வேண்டிய பொருளையே உற்பத்தி செய்வார். தமக்கு லாபம் தரும் ஏதாவதொரு பொருளைச் செய்து எப்படியாவது விளம்பரத் தந்திரத்தின் மூலம் விற்றுப் பணம் திரட்டுவதென்பது தர்மகர்த்தா சமுதாயத்தில் இராது. இந்த அடிப்படையில், காந்தியடிகள் அகில இந்திய நூற்போர் சங்கம் நிறுவி, அதனை இயக்கினார். இன்று அதன் வழி ஒழுகும் நிறுவனங்கள் பல பரவலாக இருக்கின்றன. அதில் உள்ள திறமை மிக்க நிர்வாகிகள் ஏறக்குறைய மற்ற முழுநேர ஊழியர்களின் வருமானத்தை ஒட்டியே சம்பளம் எடுத்துக் கொள்கின்றனர். உதாரணமாக, முழு நேரத் தொழிலாளியான ஒரு நெசவுக்காரருக்குக் கிடைப்பதைப்போல இரண்டு அல்லது மூன்று மடங்குக்குள் தான் அந்த நிறுவன நிர்வாகியின் சம்பளம் இருக்கும். இத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு நிர்ணயமானதொரு கூலியும் அதன் அடிப்படையில் அமைந்த சீரான விலையும்

---

**“ நம்முடைய குறிக்கோள் எது ? ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம், ஒரு பஞ்சாயத்து, பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவை இருக்கவேண்டும். இவ்வகையில் தான், நம்முடைய அரசியல், பொ ருளாதார, பண்பாடு வளர்ச்சிகளுக்கு அடிப்படை அமைக்கிறோம் ; பரந்த பாரதக் குடியரசின் அங்கங்க ளாகத் தன்னாட்சி கொண்ட குடியாட்சி உறுப்புகளைப் படைக்கிறோம்**

**உடனடியாக நம்முன் உள்ள நோக்கங்கள் என்ன ? வேளாண்மை விளைச்சல் பெருக்கம்—குறிப்பாக உணவுப்பொருட்களின் பெருக்கம் வேண்டும் ; கிராமக் கைத்தொழில்களும் சிறு தொழில்களும் பெருக வேண்டும். உணவு உற்பத்தி இன்றைய நிலையிலே மிகவும் உயிர் நாடி யானது. நாம் அண்மைக்காலத்திலே தீர்க்கவேண்டிய சிக்கல்களிளெல்லாம் பெரியது, உணவுப்பிரச்னையேயாகும். வேளாண்மை வளர்ந்தால் தான் தொழில்களில் வளம் பெருகும் ; நாம் விரும்புகின்றபடி கிராம வாழ்விலே வசதிபெருக வேண்டுமெனின், அதுவும் வேளாண்மை உற்பத்தியிலிருந்துதான் உண்டாகும்.”**

**— அமரர் நேருஜி.**



G.N.—3

இருக்கிறது. இதில் ஏதாவது லாபம் இருக்குமாயின், அது கூலியைக் கூட்டுவதற்கோ விலையைக் குறைப்பதற்கோ பயன்படுத்தப்படுகிறது. இந்த பரவல் முறை தர்மகர்த்தா கோட்பாடுகளின்மீது அமைந்த சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு இருக்காது. நிர்வாகத்தின் ஆதிக்கம் இராது. இத்தகைய பொருளாதாரம் அனைவரும் சரிநிகர் சமானமாக வாழ வழி வகுக்கும்.

### விவசாயத் துறையில் விநோபா காட்டிய வழி

தொழில் துறையில் தருமகர்த்தா தத்துவம் இயங்கக் காந்தியடிகள் வழி வகுத்த மாதிரியே விவசாயத் துறையில் இத்தத்துவம் இயங்கக் காந்தியடிகளின் சகாவும் சீடருமான விநோபாஜி வழி காட்டி வருகின்றார். சென்ற பதினைந்து ஆண்டுகளாக ஏகாக்ர சித்தத்துடன் கிராமப்புறங்களில் உள்ள நிலப் பிரச்னைக்கு அகிம்சை பரிகாரம் காண உழைத்து வருகின்றார் அவர். அவரது அயரா உழைப்பின் காரணமாகக் கிராமதான இயக்கம் தோன்றி வளர்ந்து வருகிறது. நிலம் படைத்தோர் தமது நில உடைமையை கிராமப் பொதுவிற்கு மனமுவந்து மாற்று கின்றனர். தமது நிலத்தில் இருபதில் ஒருபங்கை நிலமற்ற உழவர்களுக்குக் கொடுக்கின்றனர். கிராமச் சபை அமைத்து அதன் முடிவின்படி நடக்க முன் வருகின்றனர். தமது வருவாயில் நாற்பதில் ஒரு பங்கை ஊர்ப் பொதுநிதிக்குக் கொடுக்கத் தீர்மானிக்கின்றனர். இந்த செயல்கள் மூலம் தமது உடைமையை ஊர் நலனுக்கு உகந்ததாக்க வேண்டு மென்ற கருத்தை ஏற்கின்றனர். ஊராரின் நம்பிக்கைக்குப் பாத்திரவானாக நடப்பதே விழுமியது என்பதை ஏற்று அதன்படி ஒழுகுகின்றனர்.

### சரிநிகர் சமானமாக வாழ....

உடையவர் சிலர், வறியவர் பலர்; ஆளுபவர் சிலர், ஆளப்படுவோர் பலர்; கல்வி அறிவுடையோர் சிலர், கல்வி யறிவு கிட்டாதவர் பலர்; உயர்ந்தோர் எனப்படுவர் சிலர், தாழ்ந்தோராய் நடத்தப் பெறுபவர் பலர், உழைப்பவர் பலர், அனுபவிப்பவர் சிலர்; இப்படியாகப் பிரிந்து கிடக்கும் சமுதாயத்தை அடியோடு மாற்றி அனைவரும் சரிநிகர்ச் சமானமாக வாழ மகாத்மா கண்ட வழிகளில் எளிமை வாழ்க்கையும் ஒன்று. புலன் நுகர்ச்சியே பெரிதெனக் கருதி படாடோபமாக வாழ்க்கையைச் சிலர் வாழ விரும்புவதன் காரணம்தான், மேற்கண்ட பிரிவினைக்கும் அதன் பயனாக விளையும் குழப்பங்களுக்கும் காரணம். இதை அறிந்தே காந்தியடிகள் அனைவரும் பொறி புலன்களை நெறிபடுத்திய எளிய வாழ்வு வாழ வேண்டு மென்றார். தாமே அப்படி வாழ்ந்தும் காட்டினார். உடையில், ஊரில், குடியிருக்கும் வீட்டில் எங்கும் எளிய வாழ்வைப் போற்றி அதற்கு ஒரு தனி மரியாதையைச் சமூகத்தில் சம்பாதித்து கொடுத்தார். மக்கள் சமுதாயமே எளிமையைப் போற்றி வாழும்போது போட்டி, பொறாமைகள் குறைந்து அங்கு இன்பமும் மகிழ்ச்சியும் பெருகும்.

சமுதாய மாற்றத்திற்கு உதவும் இந்தப் பரவல் முறை, தர்மகர்த்தா தத்துவம், எளிமை போன்றவைகளை மக்களே மனமுவந்து ஏற்றால் நல்லது, இல்லையேல் என்ன செய்வது என்ற கேள்வி பிறக்கிறது. எதையும் அமுலாக்க அதிகாரம் வேண்டும், வன்முறையின்றி இது எவ்வாறு சாத்தியம்? காந்தியடிகள் இச் சங்கடத் திலிருந்து நம்மை மீட்கின்றார். "படிமிசைச் சாலவும் எளிதாம் படிக்கொரு சூழ்ச்சி" காந்தியடிகள் படைத்தார். அதுதான் ஒத்துழையாமை. அத்துடன் இணைந்த சத்தியாகிரகம். மக்கள் தம் நியாயமான, உண்மையான கோரிக்கைகளை அடைய அவசியமானால் ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் ஆகிய வழிகளைக் கடைப்பிடிப்பார்கள். வர்க்கப் போராட்டமில்லாமலும் இரத்த ஆறு ஓடாமலும் சமுதாயம் மாறி அமைந்து, நல்வாழ்வு வாழும்; சுபிட்சம் பெருகும்.

## வாக்காளர் பட்டியல் இறுதி பிரசுரம் பற்றி அறிவிப்பு

தமிழ்நாட்டிலுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளுக் கான வாக்காளர் பட்டியல்கள் அக்டோபர் முதல் தேதி முடிவாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த நாளி லிருந்து அவை அமுலுக்கு வருகின்றன.

இந்த முடிவான பட்டியல்கள், சம்பந்தப்பட்ட வாக் காளர் பதிவு அதிகாரிகள் அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை கார்ப்பரேஷன் ரெவின்யூ அதிகாரி, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள், சேலம், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் நகராட்சி கமிஷனர்கள், நீலகிரி கலெக்டர் உதவியாளர் ஆகியோர் இந்த வாக்காளர் பதிவுஅதிகாரிகள் ஆவார், தொகுதி முழுமைக்குமான வாக்காளர்கள் பட்டியல்கள் பொதுமக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கும். வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்திலிருந்து, வாக்காளர் பட்டி யல் சம்பந்தமான முழு விவரங்களையும் அறிந்து கொள்ள லாம்.

வாக்காளர் பட்டியல்களில், வாக்காளர் பற்றிய சரியான தகவல்கள் இடம் பெறுவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படிருக்கின்றன. எனினும், சில பிழைகள் நேர்ந்திருப்பதற்கு இடம் உண்டு. வாக்காளர்கள் தவறு எதுவும் கண்டால், அது சம்பந் தமாக, 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 22-வது பிரிவின்கீழ் 8-வது நமூனாவில், சம்பந்தப்பட்ட தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப் பித்துக் கொள்ளலாம்: அவர் அதனை விசாரித்தறிந்து, ஏற்ற திருத்தங்கள் செய்வார். வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு நபர், தம்முடைய பெயரை அதே தொகுதியில் வேறொரு இடத்திற்கு நமூனா மாற்றக் கோரி அவருக்கு விண்ணப்பிக்கலாம். இதற்கு நிர்ணயம் எதுவும் இல்லை. அவர் விசாரித்தறிந்து, வேண்டிய மாற்றங்கள் செய்வார். பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு பெயரை ஆட்சேபித்து, 7-வது நமூனாவில் விண்ணப்பிக்கலாம். மாற்றம், திருத்தம் அல்லது நீக்கம் கோரி, 22-வது பிரிவின்கீழ் செய்யும் விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரிக்குத் தான் செய்யப்பட வேண்டும்.

வாக்காளராகத் தகுதியிருந்து, பெயர் விடுப்பட்டுப்போ யிருந்தால், 23-வது பிரிவின்கீழ் அவரது பெயரைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். இதற்கு 6-வது நமூனாவில் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஒருவர் வாக்காளராகத் தகுதிபெறும் தேதி, 1966 பட்டியலுக்குரிய தேதியான 1966 ஜனவரி முதல் தேதியாகும்.

வாக்காளர் பதிவு அதிகாரி 22-வது, அல்லது 23-வது பிரிவின்கீழ் பிறப்பிக்கும் உத்தரவை எதிர்த்து, 'பிரதம தேர்தல் அதிகாரி, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9, என்ற விலாசத்திற்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

ஒரே சட்டமன்றத் தொகுதியில், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பெயரை மாற்றக் கோரும் விண்ணப்பம் தவிர, மற்ற விண்ணப்பங்களையெல்லாம் நிர்ணய நமூனாக்களில்தான் செய்யவேண்டும். வாக்காளர் பதிவு அதிகாரிகள், தாசில்தார்கள், நகராட்சி கமிஷனர்கள் ஆகியோரின் அலுவலகங்களில் அச்சிட்ட நமூனாக்கள் கிடைக் கும். அச்சிட்ட நமூனாக்களில்தான் விண்ணப்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நிர்ணய நமூனாக்கள் டைப் செய் யப்பட்டோ, சைக்லோஸ்டைல் செய்யப்பட்டோ அல்லது கையால் எழுதப்பட்டோ இருந்தாலும், அவை ஏற்றுக் கொள்ளப்படும்.

வாக்காளர்கள் பதிவு அதிகாரிக்குச் செய்யப்படும் விண் ணப்பத்திற்கு நிர்ணய கட்டணம் 50 காசும், பிரதம தேர்தல் அதிகாரிக்கு செய்யப்படும் அப்பீலுக்கு 3 ரூபாயும் ஆகும். விண்ணப்பம் அல்லது அப்பீல் செய்யும்பொழுது, அதில் இந்த மதிப்புக்கு நான்-ஜுடிஷியல் (Non-Judicial) ஸ்டாம்பு ஒட்டவேண்டும். இந்த ஸ்டாம்பு கிடைக்காவிட்டால், அதே மதிப்புள்ள நான்ஜுடிஷியல் ஸ்டாம்பு காகிதத்தில் அந்த விண்ணப்பத்தை அல்லது அப்பீலைசெய்யவேண்டும்.

மகாத்மாவின் ' இலட்சியக் கிராமம் ' என்றால் என்ன, அவர் கனவு கண்ட '' கிராம ராஜ்யம் '' மலருமா, நாட்டிற்கு காந்திஜி அளித்த நிர்மாணத் திட்டத்தினை எம் முறையில் நாம் நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்து தெளிவான முறையிலும், ஆக்க ரீதியாகவும் இக் கட்டுரையில், விளக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரை ஆசிரியையான திருமதி ஜெயா அருணாசலம் அவர்கள் மதுரை மாவட்டத்தில், ரெட்டியார்சத்திரம் வட்டாரத்தில், தம்முடைய நிலத்தில், புதிய விவசாய முறைகளையெல்லாம் கையாண்டு, சிறந்த விவசாயியாகத் திகழ்கிறார்.

சென்னை விவசாயிகள் மன்றத் (Farmers' Forum) தின் பொறுப்பாளருமாவார். ஆகவே, அனுபவத்தின் அடிப்படையில் சொல்லப்படும் அவருடைய கருத்துக்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவை என்று சொல்லத் தேவையில்லை.

—ஆசிரியர்.




(திருமதி ஜெயா அருணாசலம், பி.ஏ.)

"இந்தியாவும், இந்தியாவின் மூலம் உலகமும் உண்மையான சுதந்திரத்தைப் பெற வேண்டுமென்றால், மக்கள் அனைவரும் கிராமங்களில்தான் வாழவேண்டுமேயொழிய, நகர்ப்புறங்களில் அல்ல, குடிசைகளிலேதான் வாழ வேண்டுமேயொழிய, மாளிகைகளில் அல்ல, என்பதுதான் என் முடிவு. மாளிகைகளிலும், நகரங்களிலும் வாழும் கோடிக்கணக்கான மக்கள் அமைதியாக வாழ்வது என்பது இயலாத தொன்றாகும். அந்த நேரத்தில் அவர்களுக்குப் பலாத்காரத்தையும், பொய்மையையும் தவிர வேறு மார்க்கமே இருக்கப்போவதில்லை" என்றார் மகாத்மா.

கிராம வாழ்க்கையின் எளிமையிலே உண்மையும் அஹிம்சையும் இருந்தன என்பது அவரது தீர்க்கமான முடிவு. அவர் மீண்டும் கூறுகிறார். "நான் கூறுவதன் பொருள் என்னவென்றால் மனிதன், தனது முக்கிய அடிப்படைத் தேவைகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு தன்னிறைவுடன் வாழவேண்டுவது என்பது தான். இந்தத் தன்னடக்கம் (மன நிறைவு) இருந்தால் ஒழிய, தன்னை அவனால் காப்பாற்றிக்கொள்வது என்பது கடினம்."

**முடிவற்ற தேவையில் வாழும் மக்கள்**

கிராமங்களையும் கிராமிய மக்களையும் கொண்ட இலட்சியக்கனவே மகாத்மாவின் கனவாக இருந்தது. கிராமங்களின் நிலை மாறும் என்றுதான் அவர் திடமாக நம்பியிருந்தார். ஆனால் அவரது கனவு இன்று நிறைவேறும் நிலையில், நாம் நடந்துகொள்ளவில்லை.

நகர மக்களின் வாழ்க்கையின் தேவைகளுக்கு மேல் முடிவற்ற தேவைகளில் வாழ்கின்றனர், இன்றைய கிராமிய மக்கள். இதன் காரணம் என்ன? அவர்களின் தேவைகள் பெருகப்பெருக அரசாங்கத்தாலோ மற்ற ஸ்தாபனங்களிலோ அவர்களது தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் நிலைமை உருவாகி வருகின்றதா? இதற்கு நான் கூறும் பதில் இதுதான்.

மக்கள் விழிப்புறவேண்டும், தம்மால் இயன்றதைத் தாம் செய்து கொள்ள வேண்டும். அவர்களால் இயலாத பொழுது மற்ற ஸ்தாபனங்கள் அவர்களிடையே சென்று உதவி செய்ய முற்படவேண்டும்

**என்னை கவர்ந்த கருத்து....**

காந்திஜி அவர்கள் எழுதி வைத்த பகுதிகளில் "எனது இலட்சியக் கிராமம்" என்று அவர் கூறும் பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. என்னால் இயன்ற வரை எந்தக் கிராமத்தையாவது அப்படிச் செய்ய முடியுமா என்று சிந்தித்துச் சிந்தித்துப்பார்த்தேன். சிந்தனை சிதறியதொழிய, உருப்பெருவதற்கு வாய்ப்பில்லை.

வீடு கட்டும் பொருட்களில் இருந்து மற்ற எல்லாவற்றையும் ஐந்து மைல் விஸ்தீரணத்திற்குள் சுய தேவைகளை சுயமாகப் பூர்த்தி செய்ய முனைந்தார் காந்திஜி. அன்று கிராமங்களின் ஜனத்தொகை இன்று இருப்பதில் பாதிகூட இருந்திருக்காது. ஆனால் இந்த முயற்சியில் அன்றே முனைந்திருந்தால் ஒருவேளை இன்று கிராமங்கள் சீர்பட்டிருக்கலாம். இன்று காந்திய அடிப்படையில் கிராமங்களைச் சீர்திருத்துவது என்பது ஒரு சில குறிப்பிட்ட விஷயங்களில் தவிர, முழுவதும் இயலாது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டியவர்களே.

**கிராமங்களில் அதிக வாய்ப்புகள்**

கிராமத்துச் சுகாதார வசதிகளைப் பற்றி காந்திஜி கூறியபோது நமக்குப் புதுமையாக இருந்தாலும், நக

ரங்களைவிடச் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு அதிகமான வாய்ப்புகள் கிராமங்களில் இருக்கின்றன என இன்று நமது நகரங்களில் நாம் வசிப்பதன்மூலம் உணர முடிகின்றது. வீடு கட்டுதற்குரிய பொருட்கள் பனையும், தென்னையும் தான் என்பது தீர்மானமாக இருந்திருந்தால் நிச்சயமாக இன்று மரம் நடும் விழா, வனமகோற்சவம் இவைகளுக்குத் தேவையில்லை. கிராமத்தில் இருப்பவர்களே அவைகளை மேலும் மேலும் தேவைக்கேற்றபடி பயிரிட்டுப் பாதுகாத்திருப்பார்கள். அவர்களுடைய குடில்களுக்கு முன்னால் உள்ள சிறிய இடம், தங்கள் வீட்டு உபயோகத்திற்கு வேண்டிய காய்கறிகளையும் அவர்களது ஓரிரண்டு கால்நடைகளையும் பராமரிக்க உதவும். இதிலே நாம் அக்கறை செலுத்தியிருந்தால், இன்று காய்கறி அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடையே வலுக்கட்டாயமாகவும் அதி தீவிரமாகவும் புகுத்தத் தேவையில்லை. "பொதுவாக, கிராம மக்கள் அனைவரும் பொது விஷயங்களைக் கூடிப்பேச ஒரு பொதுவான இடமும், தெய்வ வழிபாட்டிற்கு ஒரு பொது இடமும் இருக்கவேண்டும்" என்றும் கூறினார். இந்தப் பழக்கத்தை அன்று கடைப்பிடித்திருந்தால், மக்களின் எண்ணிக்கை மிகக் குறைந்திருக்கும். சுதந்திரம் வந்தவுடன் அந்த நேரத்திலேயே மக்கள் இந்தத் திட்டங்களின் கீழ் வந்திருப்பார்கள். நகர வாழ்க்கையின் சிற்சில தீமைகள் அவர்களிடையேயும் பரவியூன்றிவிட்டதனால், இனி களைந்தெறிவது கடினம்.

### விவசாய-தொழிலியல் கல்வி முறை

"தொழில் கல்வியை மையமாகக் கொண்ட ஆரம்ப, உயர்தரப்பள்ளிகள் கிராமங்களில் இருக்கவேண்டும்" என்று அவர் கூறினார். இன்று அதன் பயனை நாம் பெற்றிருக்கமுடியும். கிராமத்தில் விவசாய, தொழில் கல்வி முறை இருந்திருக்குமானால், ஒவ்வொரு கிராமத்திற்கும் வேண்டிய பொருட்களைச் செய்துகொள்ளும் சிறு தொழில் நிலையங்கள் அங்கு உருவாகியிருக்கும். தவிர அந்தக் கிராமத்துப் பள்ளியில் பயின்ற பையன்கள் தமது வீடுகளில், கேணிகளில் உள்ள இறவை இயந்திரங்களைப் பழுது பார்க்கும் விஷயத்தில் அதற்கென்று உள்ள ஒருவனைத் தேடாமல், தானே அவற்றைப் பழுது பார்க்கும் நிலைமைக்கு வந்திருப்பான். தனது வீட்டுக்கு வேண்டிய கலப்பை மரம் சிறுசிறு விவசாய கருவிகளுக்குரிய பொருட்கள் இவைகளைத் தயார் செய்யும் நிலைக்கும் வந்திருப்பார்கள், தொழிற்கல்வி பயின்ற கிராம இளைஞர்கள்.

## வையமதை வாழவைப்பாய்!

[திருமதி லட்சுமி சந்தானம், திருநெல்வேலி.]

தாயொத்த தயைநிறைந்த
தன்னிகரில் தலைமகனே!

மாயப்பசிப் பிணிதீர்த்து
வையமதை வாழவைப்பாய்!

உழைத்துழைத்து உயர்ந்துநிற்கும்
உழவர்ப்பெருங் குடிமகனே!

உயிரினம் உய்யும்வழி
உனையன்றி யாரறிவார்?

உற்றமுறை பலஅறிந்து
உற்றதருண மென்றுணர்ந்து

உற்பத்தித் திறன்பெருக்கி
ஊக்கமுடன் உழைத்திடுவாய்!

முற்றியநல் விதைதூவி
முனைந்துஇளம் பயிர்காத்துச்

சுற்றிச்சூழ களைநீக்கிச்
சீராய்நீர் பாய்ச்சிடுவாய்!

நெற்குவியல் நவதான்யக்
கற்றைக்கதிர் மணிகண்டு

பற்றுக்குறை நிலைநீக்கிப்
பண்டம்மிகக் குவித்திடுவாய்!

மண்வளம் துணைக்கொண்டு
மனஉறுதி மிகக்கொண்டு

மலைத்துநிற்கும் மக்கள்பசி
மயக்கம்தனைத் தீர்த்திடுவாய்!

தன்னிறைவு எய்திடவே
தயக்கமின்றி திடம்பெறுவாய்!

எண்ணற்றோர் நல்லாசி
ஏற்பாய்நின் அரும்பணிக்கே!

பொறுமைஅணி கலன்பூண்டு
போர்க்கோலம் புனைந்துநிற்கும்

ஏர்முனைத் தோழர்படை
ஏற்றமுற வாழ்த்துவமே!

---

"இந்தியக் குடியரசின் பிரஜைகளாகிய நாம் இந்திய மக்களின் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவோம். அரசியல் ரீதியிலான ஒருமைப்பாடு ஏற்கெனவே ஓரளவுக்கு ஏற்பட்டு விட்டது. ஆனால், இன்னமும் ஆழ்ந்த ஒன்றை—உணர்வில் ஒருமையை—இந்திய மக்களிடையே வளர்ப்பதை நான் விரும்புகிறேன்; அப்போது தான், நாம் அனைவரும் வலிமை மிக்க ஒரே தொகுதியாக இணைந்தும், அதே சமயத்தில் வேறுவிதமான அம்சங்கள் உடையவர்களாகவும் வாழ முடியும்."

—அமரர் நேருஜி.

## நவபாரதத்தின் நான்கு தேவைகள்

"இப்பொழுது நம்மிடையே உள்ள மிகப் பெரிய சக்தி மின்சாரம். ஆற்றுப்பள்ளத்தாக்குத் திட்டங்களிலிருந்தும், நீர்வீழ்ச்சிகளிலிருந்தும், மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்கிறோம். இந்தியா பூராவுக்கும் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. உங்கள் கிராமத்திற்கு மின்சாரம் வந்தால்* உங்கள் கிராமமே புத்துணர்ச்சி பெறுகிறது..........

நாம் பல காரியங்களைச் செய்கின்றோம். ஆனால், சமீபகாலமாக, நான் நான்கு விஷயங்களைப்பற்றி முக்கியமாக எடுத்துச்சொல்லி வருகிறேன், அவற்றை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன் முதலில், கல்வி—ஆரம்பக் கல்வி முதல் தொழில் கல்வி வரை ; இரண்டாவது, சக்தியைப்பெருக்குதல்; மின்சாரசக்தி, மற்றசக்திகளைப் பெருக்குதல்; மூன்றாவது, பஞ்சாயத்து ஆட்சி ; இதனுள் விவசாயமும் அடங்கும் ; கடைசியாக, ஆனால், மிகவும் முக்கியமாக நான் குறிப்பிட ஆசைப்படுவது, கூட்டுறவு.

இந்த நான்கினுள் நாம் செய்ய வேண்டியதெல்லாம் அடங்கும்...."

—அமரர் நேருஜி.

(1961-ம் ஆண்டு அக்டோபர் 8—9 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற மாநில பஞ்சாயத்து மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து).

கடைசியாக "அங்கு ஏற்படக்கூடிய பூசல்களைத் தீர்த்துவைக்கும் பஞ்சாயத்துக்கள்..." என்று காந்திஜி கூறினார். நம்மிடையே உள்ள குறைகளை நாமே ஒப்புக் கொள்ளுவதுதான் முன்னேறுவதற்கு வழி. இன்று பஞ்சாயத்துகளே பூசல்களின் பிறப்பிடமாகவும் உறைவிடமாகவும் காணப்படுவதை நினைக்கும் பொழுது மிகவும் விந்தையாக இருக்கின்றதல்லவா ?

"இதுதான் எறக்குறைய நான் குறிப்பிடும் ஒரு இலட்சியக் கிராமம். கிராம மக்களிடையே ஒத்துழைப்பு இருக்குமானால், குடில்களைத் தவிர இந்தத் திட்டத்தின் பகுதிகள் அனைத்தையும், அவர்களின் வசதிக்கு ஏற்ற செலவிலேயே அரசாங்கத்தின் உதவி இல்லாமலே நிறைவேற்றிவிட முடியும். அரசாங்கத்தின் உதவி இருந்தாலோ, இந்தக் கிராம மறுமலர்ச்சியின் திட்டத்தின் வெற்றிக்கு எல்லை காணவே முடியாது."

இன்று அரசாங்கமும் பூரணமாக அவர்களுடைய எந்தத் தேவைகளையும் எடுத்து பூர்த்தி செய்வது என்பது இயலாத காரியம். எனவேதான் "அரசாங்கத்தின் உதவி இல்லாமல்" என்று காந்திஜி கூறினார்.

"பொது நிலத்திற்குத் தமது உழைப்பை நல்கும் ஒத்துழைப்பும் தம்முடைய முயற்சியிலேயே முன்னேறும் வாய்ப்பும் திறனும் கிராம மக்களிடையே எவ்வளவு தூரம் இருக்கின்றன என்பதைக் கண்டறிவதே என் முயற்சி" என்றும் கூறினார் அவர்.

### இலட்சியத்தை அடைவதில் சிக்கல்கள்

இந்தியாவைப்போன்ற ஜனத்தொகை மிகுந்த நாட்டில் கிராமங்களின் வளர்ச்சிக்கு ஏற்படும் முட்டுக்கட்டைகள் பல. கிராம வளர்ச்சி என்னும்பொழுது, விவசாயப் பெருக்கத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் போதாது. சிறு தொழில்கள் பள்ளிகள், பயிற்சி நிலையங்கள், பொதுச் சுகாதாரம், ஜனத்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் இவையனைத்தின் வளர்ச்சிகளுமே முக்கியமாக இன்று கருதப்படுகின்றன. இருபது சதவிகிதம் மக்கள் வாழும் நமது கிராமங்களின் நிர்வாகத்தைப்பொறுத்ததுதான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பதை ஏற்கெனவே நாம் உணர ஆரம்பித்து விட்டோம். எனவே, இந்திய ரீதியில், இந்தியாவின் மக்களுக்கென ஒரு கட்டுப்பாடும் ஒழுங்கும் மிகுந்த அரசியல் நிர்வாகமும், பொருளாதார வளர்ச்சியும் வேண்டுமென நினைத்தால், நமது கிராமங்களில் நிகழ்வது என்ன என்பதை நாம் கூர்ந்து கவனித்தகவேண்டும். கிராமங்கள் மீண்டும் செழிக்கக் கிராமப்புறங்களில் அதிவேகமான முன்னேற்றம் என்பது கடினமே. காரணம், கிராமச் சமூகங்கள் பழமையான சிந்தனைகளில் ஊறித்திளைத்தவை என்பதுடன் அவை வேகமான மாறுதலை விரும்பவும் மாட்டா. எனினும் மக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே அறிந்து அதற்குத் தாமே முயற்சி செய்யும் வழக்கம் மக்களிடையே ஏற்படவேண்டும். கிராமங்கள் தோறும் சிறு சிறு கூட்டங்களாகக் கூடி, தங்கள் தேவைகளையும் தங்கள் பிரச்னைகளையும் பற்றித் தாங்களே கூடிப்பேசி ஒரு முடிவு காணும் முயற்சி அவர்களிடையே ஏற்பட வேண்டும். தங்களை மீறிய பிரச்னைகளுக்குத்தான் அரசாங்கத்திடமோ மற்ற அமைப்பு முறைகளிடமோ செல்ல முயலவேண்டும். தேவையறிந்து அதனை அவர்கள் விரும்பிக்கோரி, அரசாங்கமும் அதனை அவர்களுக்குச் செய்யும்பொழுது தான் அரசாங்கத்தின் செயலுக்கு மக்களிடையே மதிப்பு ஏற்படுகின்றது. இங்குதான் ஜனநாயகத்தின் பணி தொடங்குகின்றது.

### மக்கள் தலைவர்கள் :—

மேற்கூறிவந்த முறையில் மக்களை உருவாக்கும் தலைவர்களே பஞ்சாயத்து நிறுவனங்களின் தலைவர்களாக இருக்கவேண்டும். அரசியல் முன்னேற்றத்தை விட, பொருளாதார முன்னேற்றமே, அரசியல் முன்னேற்றத்தின் அசையாத அடிப்படை என்பதை அவர்கள் உணரவேண்டும்.

### நிரந்தரமான நிர்மாணத் திட்டங்கள் :—

கிராமங்களில் வாழும் மக்களிடையே கிராமத்தின் பொருட்களைக்கொண்டு வீடு கட்டும் வழக்கத்தை மீண்டும் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்துமானால், நமது கிராமங்கள் நிச்சயமாகத் தன்னிறைவுடன் வாழ்வது சாத்திய மாகும் என்பது எனது நம்பிக்கை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு வீட்டுப் பிரச்னையைப்பற்றி நினைப்பானேன் என்று நீங்கள் கருதலாம். எனினும் இந்தச் சிறு சிறு பிரச்னைகளே நாளடைவில் பெரும்பெரும் பிரச் னைகளாகிவிடுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். காரணம், இந்த வீடுகளை ஓரிரண்டு ஆண்டு களுக்குப்பின் மீண்டும் புதுப்பித்துக்கொள்ளலாம். நம் போன்ற ஜப்பான் முதலிய கீழை நாடுகளில் மக்கள் செய்யும் முறை இதுதான். காற்று, மழை முதலிய வற்றால் வீடு சேதமடைந்து விட்டாலும்கூட, அதிகப் பணம் வீணாகாமல் மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொள்ளலாம், என்பதே. இதற்குரிய முறையில் காந்திஜி கூறியபடி ஐந்து மைல் விஸ்தீரணத்திற்குரிய பொருட்களைக்கொண்ட ஒரு மாதிரி வீட்டைப் பஞ்சா யத்து யூனியன்களில் செய்து வைத்திருப்பதுடன், அதனை நடைமுறையில் செய்வதற்குரிய முறைகளையும் கிராமநல ஊழியர்கள் நன்கு தெரிந்துகொள்வது நலமே. கிராம மக்களுக்கு அவரே சென்று உதவி செய்யலாம்.

### கிராம இன்ஷ்யூரன்ஸ் :—

ஒரு கிராமத்தில் நிலமேதும் இல்லாத விவசாயக் கூலி ஒருவன் இறந்துவிட்டால் வருமானமே இல்லாது ஆட்டம் கண்டு அவன் மனைவியும் குழந்தைகளும் நின்று தவிக்கும் நிலையில், அவனுக்குக் குறைந்தது ஒரு 500 ரூபாய் கிடைக்கும் வகையில் அவன் வேலை செய்யும் பண்ணையில் இருந்தோ, பஞ்சாயத்திடமிருந்தோ வருடாந்தரப் பங்குத் தொகையை வசூல் செய்து இத்தகைய கொடிய துன்பத்திற்கு அவன் ஆளாகும்பொழுது, அவன் குடும்பத்திற்கு உதவ முயலவேண்டும்.

### கிராமக் கல்வி :—

கிராமக் கல்வியின் பெரும் பங்கு கிராமத்துச் சின்னஞ் சிறு குழந்தைகளுக்குப் பயன்படும் முறையில் சிசு பாலன விடுதிகளாகவும், ஆரம்பப் பள்ளிகளாகவும் அமையவேண்டும். கூடியமட்டும் அந்த வயதிலேயே நல்ல பழக்கங்களுக்கு அடிகோலும் இல்லமாக அவைகள் அமையவேண்டும். இல்லம் என்று நான் கூறும்பொழுது அவர்களுடைய வீட்டிலே அவர்களுக்குக் கிடைக்காத வசதிகூட —அன்பும் ஆதரவும் பிறவும்— கிடைக்கும் சிறந்த இல்லமாக அது அமையவேண்டும். இதன் பொறுப்புகள் கிராம நல சேவகியரை (முக்கிய சேவகியரை) சேர்ந்தது. இதே போல் தொழிற் கல்வி வசதிகளுக்கு, அங்குள்ள பள்ளிகளிலேயே புதிய வாய்ப்புகள் கொடுத்து தொழிற்கல்விக்கு முக்கியப் பங்கு வகிக்கும்படி செய்வது கிராம சேவக்கின் பங்கு.

### கிராமக் கூட்டுறவுகள்:—

தங்களுடைய தேவைகளை, தமக்குரிய முறையில் முயற்சி செய்து கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யும் ஸ்தாபனங்கள் கூட்டுறவுகளாகத்தான் இருக்க முடியும். கூடி வாழும் பண்பு இந்த நாட்டிற்குப் புதிதல்ல. ஆனால், அதற்கு மீண்டும், மறுமலர்ச்சி வேண்டு மென்றால், கூட்டுறவுதான் அதற்குச் சிறந்த வழி. இன்று அதன் முக்கிய தேவைக்கு ஒரு சிறிய உதாரணம் கூறுவேன். கிராமத்தின் ஜனத்தொகையில் குறைந்தது பாதிக்கு மேல் தினசரிக் கூலிகளாகவேதான் இருக் கின்றனர். அவர்களுடைய வருமானம் நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய்க்கு மேல் இருக்க முடியாது. கிராமத்துக் கடையில் உள்ள பொருட்கள் அனைத்தும் நகரத்தில் இருந்து கொண்டுவந்து விற்கப்படும் பொருட்கள் எனப்படுவதால் நகரத்தில் வசிப்பவரைவிட அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர் கிராமத்து மக்கள். எனவே, அவர்கள் சம்பாதிக்கும் பணம் அனைத்தையும் உணவுப் பண்டத்திற்கோ தேவையான மற்ற பொருட்களுக்கோ கொடுத்துவிடும் நிலைதான் ஏற்படுகிறது. அன்றையச் சம்பளம் அன்றையச் செலவிற்குக்கூடப் போதுமானதாக இருப்பதில்லை. கிராமத்தில் அவர்களுடைய ஊதியத்தை ஏற்றும்பொழுது அதற்கேற்ப பொருளின் விலையும் ஏறுகின்றது. எனவே கிராமங்களில்தான், கூட்டுறவுகள் மிகமிகத் தேவை என்பதை அவர்கள் உணரும்படிக் கூறி அவைகளை அமைக்க வேண்டும்.

### பசுந்தழை உரமும் மண்வளப் பாதுகாப்பும்:—

பசுந்தழை உரமும், மண்வளப் பாதுகாப்பும் இன் றுள்ள ஜனத்தொகைப் பெருக்கம் மிகுந்த நெருக்கடியான நிலையில் மிகமிக அவசியமானவை. கிராமத்தில் உள்ள நிலங்கள் அனைத்திலும் பசுந்தாள் உரப் பயிர்களைப் பயிர் செய்யும் ஒரு சிறு பழக்கத்திற்கு கிராம மக்களைப் பழக்க வேண்டும். அந்தக் கிராமத்தில் நிலங்கள் அனைத்திலும் ஒரு நாலைந்து நபர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு ஒரு மழை பெய்தவுடன், பயிரிடப்போகும் வயல்களில் மூன்று மாதங்களுக்கு முன்பு பசுந்தாள் உர விதையை விதைப்பது ஒரு சமூக சேவையைப் போல ஒவ்வொரு கிராம சேவக்கும் செய்ய வேண்டும். கிராமப் பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கும் பரிசோதனை நிலப்பகுதிகள் தவிர, ஆங்காங்கே புதிய முறைகளைச் சோதனை மூலம் விளக்கிக் காட்ட சிறு பகுதிகளைப் பயன்படுத்தவேண்டும். விவசாயிகளில் சிலர் அவர்களே பரிசோதனை செய்து பார்க்கும்படி அவர்களுக்கு உதவினால், ஒருவர் செய்வதை முன்னிட்டுப் பிற விவசாயிகளும் அவ்வாறே செய்வார்கள். தாங்களே செய்ய வேண்டுமென்றும் விழிப்பும், துடிப்பும் அவர் களிடையே இதனால் ஏற்படும். அதுவே அவர்கள் புதுமுறைகளைப் பழகிக்கொள்ளத் தகுந்த வழியும் ஆகும்.

### கிராமச் சுகாதாரம்:—

கிராமங்களின் சுகாதாரத்தைப்பற்றி காந்திஜி கூறியவை நமக்குப் புதுமையாகத் தோன்றினாலும், நடைமுறையில் இதனை நிறைவேற்றுவது கிராமங்களில் மிகமிக எளிது. கிராமங்களில் முக்கிய சேவகிகளைப் போன்ற ஒரு பெண்மணியினால் இதனை நிச்சயமாகச் சாதிக்க முடியும். கிராமத்துப்புறங்களில், கிராம சேவகிகள் அடிக்கடி சென்று, அவர்களுடன் பழகும் முறையிலேயே அவர்களிடம் பல காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாம். கிராமச் சுகாதாரம் மிக மிக முக்கியம். அது முக்கிய சேவிகாவின் சாதனையாகத்தான் இருக்க முடியும் என்றும் நான் கூறுவேன். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டங்களை நிறைவேற்றி, ஜனத்தொகைப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டும். இதன் பயங்கர விளைவுகளையும் துன்பங்களையும் விளக்கும் முறையில் சிறந்த செய்திப் படங்களை அவர்களிடையே அடிக்கடி திரையிடவேண்டும்.

### இதயத்தில் வளரும் நம்பிக்கை:—

கிராமங்கள் மீண்டும் தழைக்க வேண்டும் ; கிராமங்கள் மீண்டும் தழைக்க முடியும். ஆனால் கிராமமக்களிடையே விழிப்பு ஏற்படுமானால்..........காந்திஜி கனவு கண்ட இலட்சியக் கிராமத்தைப் போல் ஏறக்குறைய தமிழ்நாட்டில் மட்டும் ஒரு முப்பது இலட்சியக் கிராமங்களாவது காந்திஜியின நூற்றாண்டு விழாவிற்குள் ஏற்படுத்த வேண்டும். கிராம வளர்ச்சித் திட்டத்தின்மூலம் இதனை நடைமுறையில் கொண்டு வந்தோமானால், அவரது கனவில் ஒரு பகுதியையாவது, நாம் நிறைவேற்றிய வர்களாவோம். கிராம சேவக்குகளும், முக்கியச் சேவகி களும், அரசாங்கமும் பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதிகள் கொண்ட ஸ்தாபனங்களும் ஒன்று கூடி உழைத்தால் இது சாத்தியம் என்பதில் ஐயமே இல்லை. இந்தியக் கிராமங்கள் அனைத்துமே இலட்சியக் கிராமங்களாக மாறும் என்ற நம்பிக்கை என் எண்ணத்தில் எழுகின்றது.

# பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத் திட்டம்

[திரு. சி. வி. வெங்கடாசலம், திரு ஜி. தாசரதி.]

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பார்கள். அதிலும், பள்ளி செல்லும் குழந்தைகள் நோய்வாய்ப் படாமல் இருக்கவேண்டியது அவசியம். அப்பொழுது தான், அவர்கள் இடையில் படிப்பை நிறுத்திவிடாமல், தொடர்ந்து படிக்க முடியும். இலவசக் கல்வி, மதிய உணவு அளித்தல் ஆகியவை, கல்வி வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது, பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத் திட்டமும். இத்துறையில், தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சியை, இக்கட்டுரை விளக்குகிறது—ஆசிரியர்.

பள்ளிகள் தாம் நாட்டின் வருங்காலக் குடிமக்களை உருவாக்கும் புனித நிலையங்கள். பள்ளிகளில் குழந்தைகள் பெறும் கல்வியின் வெற்றியைப் பொறுத்தே சமுதாயத்தின் முன்னேற்றமும் நாட்டினுடைய வளர்ச்சியும் பெருமளவு சார்ந்துள்ளன. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தான், பள்ளி வயது வந்த எல்லாக் குழந்தைகளும் கல்வியறிவு பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு மத்திய, மாநில அரசாங்கங்கள் பெரும் தொகையைச் செலவிட்டு வருகின்றன. இவ்வுயரிய நோக்கத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதில், நம் தமிழ்நாடு அரசாங்கம் பல புதிய திட்டங்களை அமுல் நடத்தி, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக இருந்து வருகிறது. இலவசக் கல்விமட்டுமல்லாமல், மதிய உணவு, பள்ளிச்சீருடைகள், புத்தகங்கள் முதலியன இலவசமாக விநியோகித்தலின் காரணமாக, பள்ளி வயது வந்த குழந்தைகளில் சுமார் 90 சதவிகிதத்துக்கும் மேல் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

### பள்ளியில் இறுதிவரை படிக்க..

ஆனால், பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்த்து விடுவதால் மட்டுமே குறிக்கோள் நிறைவேறி விடுவதில்லை. பள்ளியில் சேரும் குழந்தைகள் முழுக் கல்வியறிவு பெறுதல் வேண்டும். ஆனால், அவர்கள் படிப்பை இடையிலேயே நிறுத்தி விடுவதால், கல்விக்காகச் செலவிடும் தொகையில் பெருமளவு வீணாவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்திய தேசியக் கல்வி ஆராய்ச்சிக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ள 1964-ம் ஆண்டு தகவல் புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது :—‘ஒன்றாவது வகுப்பில் பதிவு செய்யப்படும் 100 குழந்தைகளில் 26·9 சதவீதக் குழந்தைகள் தாம் ஐந்தாவது வகுப்பு வரை படிக்கின்றனர். 12·3 சதவீதக் குழந்தைகள் மட்டுமே எட்டாவது வகுப்பு வரை செல்கின்றனர்.”

### இதற்கு என்ன காரணம் ?

இவ்வாறு நடுவிலேயே படிப்பை நிறுத்திக்கொள்வதற்குப் பள்ளிக் குழந்தைகளின் பிற்போக்கு நிலையே முக்கிய காரணமாகும். இதற்கு அவர்களின் பெற்றோர்களின் பொருளாதார பின் தங்கிய நிலை காரணமாயினும், குழந்தைகளின் ஆரோக்கிய குறைவு, தொத்து வியாதிகளினால் அடிக்கடி அவர்கள் துன்புறுதல், குடல்வாழ் புழுக்களின் தொல்லை முதலியன முக்கிய காரணங்களாகும். ஆரோக்கியக் குறைவின் காரணமாகப் பின் தங்கிய குழந்தைகள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் தோல்வியைக் கண்டு, கண்டனம், தண்டனைக்குட்பட்டு, தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கிறனர். இதனால் அவர்கள் பள்ளியை வெறுக்கவும், பள்ளிக்குச் செல்லாமல் தப்பித்துக் கொள்ளவும் முயல்வதில் ஆச்சரியமில்லை.

பள்ளிக் குழந்தைகளின் உடல் ஆரோக்கியமாய் இருக்க வேண்டியது மிக அவசியம். ஏனெனில் இள வயதில் உடலும், மனமும் ஒருங்கே வளர்வன. உடல் வளர்ச்சியற குழந்தைகள் மன வளர்ச்சியுமின்றி பின் படிப்பிலும் பின் தங்கியவர்களாகின்றனர். எனவே, சீரான கல்வி முன்னேற்றத்திற்கு, நலமான உடல் வளர்ச்சி முதன்மையாகும். “சுவரை வைத்துத் தான் சித்திரம் வரைய வேண்டும்” என்ற தமிழ் முதுமொழியும், “A sound mind in a sound body” என்ற ஆங்கிலப் பழமொழியும் இதைத்தான் வலியுறுத்துகின்றன.

### தமிழக அரசின் திட்டம்

கல்வி முன்னேற்றத்திற்கு இன்று நடைமுறையில் உள்ள திட்டங்கள் யாவும் வெற்றியடைய வேண்டுமெனில், பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும் என்பதை உணர்ந்து, நம் தமிழ்நாட்டு அரசாங்கம் பள்ளிக்குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பராமரிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்து, குறிப்பிட்ட சில வட்டாரங்களில் அமுல் நடத்தி வருகின்றது. பொதுச்சுகாதாரத்துறையினரால் நிர்வகிக்கப்படும் இத்திட்டம், 1965-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது கீழ்க்கண்ட 12 ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமாகச் செயல்பட்டு வருகின்றது :—

மதுராமங்கலம்—செங்கல்பட்டுமாவட்டம்,
ஒரத்தூர்—தென்னார்க்

காடு மாவட்டம்; களம்பூர்—வடார்க் காடு மாவட்டம்; பெரியநாயக்கன் பாளையம்—கோயமுத்தூர் மாவட்டம்; நத்தம்—மதுரை மாவட்டம்; பத்த மடை—திருநெல்வேலி மாவட்டம்; இடைக்கோடு — கன்னியாகுமரி மாவட்டம்; பிரான்மலை—இராமநாத புரம் மாவட்டம்; நெடுகுலா—நீலகிரி மாவட்டம்; ஆக்கூர் — தஞ்சாவூர் மாவட்டம்; திருவரங்குளம்—திருச்சி ராப்பள்ளி மாவட்டம்; மேக்கலச் சின்னம்பள்ளி—சேலம் மாவட்டம்.

**திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் :**

1. குழந்தைகளுடைய வியாதிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து, அவற்றைப் போக்க மருத்துவ வசதி யளித்தல்.

2. பள்ளியில் பயிலும் ஒவ்வொரு குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சி யைப் பதிவு செய்தல்.

3. குழந்தைகளுக்குச் சரி விகித உணவு, உடல் சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம், தொத்து நோய்களி னின்றும் காத்துக்கொள்ளும் முறை கள் போன்ற சுகாதார வழி முறை களைப் போதித்தல்.

4. தேசிய சுகாதார தினம், ஈ ஒழிப்பு வாரம், தேசிய பெரியம்மை ஒழிப்பு வாரம் போன்ற சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களைப் பள்ளிகளில் கொண்டாடுவதன் மூலம், குழந்தைகளிடையே சுகாதார விழிப் புணர்ச்சியை ஏற்படுத்துதல்.

5. சுகாதாரக்கல்வியின் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் களிடையே ஆரோக்கிய வாழ்வின் மேம்பாட்டை உணர்த்துதல்.

6. வீட்டிலும், சமுதாயத்திலும் சுகாதாரப்பொறுப்புணர்ச்சியை ஏற் படுத்தி, அதன் மூலம், சுகாதாரப் பழக்க வழக்கங்களை மனத்தில் பதிய வைத்தல்.

(18-ம் பக்கம் பார்க்க)

*கடைசி அட்டைப் பட விளக்கம் :*

## மேட்டூர் குடைவரை நீர் மின்நிலையம்—இந்திய சோவியத் நேச ஒத்துழைப்பின் எடுத்துக்காட்டு

மேட்டூர் அணைக்கட்டு, இந்தியாவில் உள்ள பிரம்மாண்டமான அணைக் கட்டுகளில் ஒன்று. அண்மையில் காலமான மிகச் சிறந்த நிர்வாகி எனப் புகழ்பெற்ற டாக்டர் சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் இந்த அணைக்கட்டைக் கட்டுவதற்கு முக்கிய காரணமாக இருந்தார்கள். மேட்டூர் அணைக்கட்டு, அவர் நினைவுக்கு ஓர் அழியாத சின்னமாகும். இந்த அணைக்கட்டில் இரண்டு லட்சம் கிலோவாட் ஆற்றலுள்ள குடை வரை நீர் மின்நிலையம், சோவியத் தொழில் நுட்ப உதவியுடன் அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவின் மிகப்பெரிய மின் நிலையம் இது. நான்கு மின் உற்பத்தி இயந்திரத் தொகுப்புகளும் பூர்த்தியாகி, இயங்கத் தொடங்கி விட்டன. ஒவ்வொன்றும் 50,000 கிலோவாட் ஆற்றலுள்ளது. இவை உற்பத்தி செய்யும் மின்விசை, சென்னை மின்சார கிரீட்டில் சேர்ந்து, தொழில் நிலையங்களுக்கும், விவசாயப் பண்ணைகளுக்கும், பொது மக்க ளுக்கும் போய்ச் சேருகிறது. இந்திய சோவியத் நேச ஒத்துழைப்பின் நற்பலன்களுக்கு மற்றொரு எடுத்துக்காட்டு, மேட்டூர் குடைவரை மின் நிலையம்.

நான்கு மின்விசை உற்பத்தித் தொகுப்புகளும் பூர்த்தியாகி இயங்கத் தொடங்கியுள்ளதைக் கொண்டாடுவதற்காக, கடந்த செப்டம்பரில், மேட் டூரில் விழாக் கூட்டம் நடைபெற்றது.

மேட்டூரில் தமது வேலைகளை முடித்துக்கொண்டு, சோவியத் யூனியனுக் குத் திரும்பிய சோவியத் தொழில் நுட்ப நிபுணர்களுக்கு நல்வாழ்த்தும் நன்றியும் கூறி பேசிய, மாநில மின்சார போர்டு தலைவர் திரு. வி. பி. அப்பாதுரை அவர்கள், "மேட்டூர், நெய்வேலி மின்விசைத் திட்டங்களுக்கு தாராள உதவி அளித்து, தமிழ்நாட்டில் மின் விசைத் துறையின் வளர்ச்சிக்கு சோவியத் யூனியன் மிகப்பெரும் சேவை புரிந்துள்ளது" என்றார். மேட்டூர் குடைவரை மின் நிலையத்தின் சிறப்புகளை அவர் விளக்கிக் கூறி, இந்த முக்கிய திட்டம் வெற்றிகரமாய் நிறைவேறுவதற்காக தன்னலங் கருதாது உழைத்த சோவியத் நிபுணர்களைப் பாராட்டி, "இவர் கள் திரும்பவும் தமிழகத்திற்கு வந்து, தூத்துக்குடி அனல் மின்நிலைத் திட்டம், ஹோகனேகல் நீர்மின் திட்டம் போன்ற புதிய பல மின்விசைத் திட்டங்கள் நிறைவேறுவதற்குத் துணை புரிய வேண்டுமென்பது என் விருப்பம்" என்றார்,

சோவியத் துணைக்கான்சல் திரு. ஷெக்லோவும் சோவியத் வர்த்தகக் கமிஷனர் திரு. கிளாஸ்னேவும் ஓங்கி வளர்ந்து வரும் இந்திய சோவியத் கலாச்சார, வர்த்தக உறவுகளை எடுத்துக்கூறி, "அண்மையில் இரு அரசாங் கங்களும் கையொப்பமிட்டுள்ள புதிய ஒப்பந்தம், இவ்வுறவு மேலும் பல மடங்கு வளர வழி வகுத்திருக்கிறது" என்றனர்.

---

"ஒவ்வொரு அரசாங்கமும், நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியத்துவ மளிக்க வேண்டும். பாதுகாப்பு என்றால் என்ன ? பாதுகாப்பு என்றால் ஏராளமானவர்கள் துப்பாக்கிகளைத் தாங்கிக்கொண்டு இங்குமங்கும் அணிவகுத்துச் செல்லுவதுதான் என்று பலரும் கருதுகிறார்கள். ஆயுதம் தாங்கிய ஆட்களும் யந்திர சாதனங்களும் பாதுகாப்புக்குத் தேவை என்பது உண்மை தான். ஆனால், இவை மட்டும் போதாது. பாதுகாப்புக்கு வேறு எத்தனையோ அம்சங்கள் தேவை. நாட்டின் தொழில் திறன், நாட்டு மக்களின் மனோதைரியம்—இப்படி எத்தனையோ. இவை யெல்லாம் நாட்டின் வசதிகளுக்கேற்ப அமைந்திருக்க வேண்டும். சமச்சீராக இருக்க வேண்டும். இதை மாற்ற முடியாது. ஆதலால், மனோதைரியத்தை வளர்த்து, எந்த அபாயம் நேர்ந்தாலும் அடிபணியப் போவதில்லை என்று உறுதி பூண்டால், இதன் மூலம் பாதுகாப்பை வலுப்படுத்த முடியும்."

—அமரர் நேருஜி.

திட்ட ஆய்வு.

# கிராம வளர்ச்சிக்குப் பணி புரியும் ஆர்வம் தழைக்க...

ஜனநாயக முறையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றை நிறை வேற்றுவதில் மக்களையும் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்பதை, நம்நாடு ஏற்றுக் கொண்டுள்ளது. கடந்த மூன்று திட்டங்களின் வாயிலாக, சாலைகள் அமைத்தல், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனை போன்றவற்றை நிறுவுதல் ஆகியவைகளில் கிராமங்களில் நல்லதொரு முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். நமது மாநிலத்தில் 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. வட்டார வளர்ச்சிக்குரிய முதல் மூன்று திட்டங்களும் அரசாங்கத்தால் வகுக்கப்பட்டன. ஆனால், நான்காவது திட்டத்தில் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் செய்யப்பட்டன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், ''அதன் வளர்ச்சிக்கான உடனடி தேவைகள் என்ன ? எவ்வகையான திட்டங்கள் அமைத்தால் பிரச்சனைகள் தீர்ந்து எதிர் பார்க்கும் பலன் கிடைக்கும்?'' என்பனவற்றைக் கருத்தில் கொண்டு, தனது தேவை களுக்கேற்ப திட்டமிட வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களின் நிலையி லிருந்து திட்டங்கள் தயாரிப்பதென்பது, சோதனையானதொரு முயற்சி யேதான்.

பஞ்சாயத்து யூனியன்களின் நிர்வாக அமைப்பைப் பற்றி குறிப்பிட வேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவர் அதிகாரப் பற்றற்றவர். பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்களும் அவ்வாறே இருக்கின்றனர். பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் என்ற பெயரில் பதவி வகிப்பவரே அதிகாரியாவார் இவர் வட்டார வளர்ச்சி அதிகாரி என்றும் அழைக்கப்படுகிறார். இவரே பஞ்சாயத்தின் யூனியன் மன்றத்தின் செயலாளர். அந்தந்த வட்டாரங்களின் அதிகாரப் பற்றற்றவர்களின் ஆர்வமும், அதிகாரிகளின் அனுபவமும் கொண்டதொரு அமைப்பை ஏற்படுத்த இவர்கள் முயன்று வருகிறார்கள். விவசாயம், கல்வி, பஞ்சாயத்து போன்ற பல்வேறு துறைகளையும் சார்ந்த வளர்ச்சி அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு, வட்டார அபிவிருத்தி அதிகாரிக்கு உதவியாக இருந்து வருகிறது. அரசாங்கத்திடமிருந்து அதிகாரங் களைப் பெற்று, அவற்றைப் பகிர்ந்து கொள்வதில், அதிகாரிகள் அல்லாத உள்ளூர்ப் பிரதிநிதிகளிடம் அதிக ஆர்வம் காணப்படுகிறது. ஆனால், அதே போன்று, தாங்கள் பெற்ற அதிகாரங்களை விவசாயிகளோடு பகிர்ந்து கொள்வதில் அவர்கள் தயங்கத்தான் செய்கிறார்கள். தங்களது சுயநலங் களைப் பெரிதெனக் கொள்ளாமல், மக்களுடைய நலனையே முன்வைத்து தங்களுடைய சேவை மக்களுக்கு அர்ப்பணிப்பதற்காகவே என்ற சேவா உணர்வுடன், மக்கள் தலைவர்கள் திட்டத்தின் நன்மைகளை ஒவ்வொருவரும் பெறச் செய்தாலன்றி, ''திட்டங்களினால் பயன் கிடைத்துள்ளது'' என்பதை ஏட்டளவில்தான் கூறிக்கொள்ள முடியுமே தவிர, வேறு எவ்விதமான திருப்தியும் இருக்கவே இயலாது.

[20-ம் பக்கம் பார்க்க]

### பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத் திட்டம் :

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

பள்ளியில் பயிலும் போதே குழந்தைகள் சுகாதார வழிமுறைகளை அறியும் பொருட்டு, ஒவ்வொரு பள்ளியிலும் சுகாதார பூர்வமான கக்கூஸ்களும், சிறுநீர் கழிக்குமிடங்களும் கட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது. மாணவர்கள் அவற்றை உபயோகிக்கவும், துப்புரவாக வைத்துக்கொள்ளவும் பழகுகின்றனர். பள்ளிக்கு அருகாமையில் உள்ள கடைகளில் விற்கப்படும் தின்பண்டங்களும், பானங்களும் தூசு படியாதவாறும் அவற்றை ஈக்கள் மொய்க்காமல் இருக்க பாதுகாப்புச் செய்யும்படியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுகாதாரம் என்பது ஏதோ தனிப்பட்ட ஒருவருடைய கவனிப்பைப் பொறுத்தது என்ற நிலை மாறி, சுகாதாரம் வளர வேண்டுமானல் அதற்குச் சமுதாயம் முழுவதுமே பொறுப்புடையதாகும் என்ற அறிவை எல்லோரிடமும் ஏற்படுத்துவதே, இதன் நோக்கமாகும்.

### ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆற்றும் பணி

அந்தந்த வட்டாரங்களில் அமுல் நடத்தப்படும் இத்திட்டத்திற்கு, அந்த வட்டாரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரி பொறுப்பேற்று நடத்தி வருகிறார். அவருக்கு இதில் உதவியாக, ஒரு பள்ளிச் சுகாதாரப் பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஆரம்பப்பள்ளிகளை ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட நாட்களில் மருத்துவ அதிகாரி பார்வையிட்டு பள்ளிகுழந்தைகளை மருத்துவப் பரிசோதனை செய்கிருர். பள்ளியை மருத்துவ அதிகாரி பார்வையிடும் நாள் முன்னதாகவே தெரிவிக்கப்படுவதினுல், குறிப்பிட்ட நாளில் சம்பந்தப்பட்ட வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒன்று சேருவது சாத்தியமாகிறது. வகுப்பு ஆசிரியர், பெற்றோர் ஆகியோர் முன்னிலையில் மருத்துவப் பரிசோதனை செய்வதன் மூலம், குழந்தையின் ஆரோக்கியக்குறைவைப் போக்கத் தொடர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள, ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் எதுவாகிறது. ஒவ்வொரு பள்ளிக்குழந்தையும் கவனமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களின் நோய்களும், ஆரோக்கியக்குறைவிற்கான காரணங்களும், பதிவேட்டில் குறிக்கப்படுகின்றன. நோய் தீர்க்க மருந்துகள், மாத்திரைகள், களிம்புகள் முதலியன இலவசமாக விநியோகிக்கப்பட்டு, அவற்றை உபயோகிக்கும் விதமும் விளக்கப்படுகிறது. கடுமையான வியாதிகள் கொண்ட அல்லது தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டிய குழந்தைகள், மருத்துவ நிபுணர்களின் விசேடப் பரிசோதனைக்காக, மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். பொதுவாக நுரையீரல் சம்பந்தமான கோளாறுகள் உள்ள குழந்தைகளை எக்ஸ்-ரே படம் எடுப்பதற்கும், சொத்தையான பற்களை நீக்குவதற்கும், தொண்டைச் சதைக்கு அறுவைச் சிகிச்சை அளிக்கவும் குழந்தைகள் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு இலவசமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர். கிராமப்பள்ளிகளில் பயிலும் ஏழைக்குழந்தைகளுக்கு இது போன்ற விசேட மருத்துவ வசதியளித்து இருப்பது உண்மையிலேயே கிடைத்தற்கரிய வாய்ப்பாகும்.

பள்ளிகளுக்கு மருத்துவ அதிகாரி பரிசோதனைக்காகச் செல்லும்பொழுது சுகாதார ஒழுக்கத்தின் வழிமுறைகளைப் பற்றிய அறிவைப் பரப்பவும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. சுகாதார வழிமுறைகள் மாணவர்கள் மனத்தில் பதியும்படி படங்கள், சுவரொட்டிகள் முதலியன பள்ளிகளில் காட்சிப்பொருட்களாக வைக்கப்படுகின்றன.

[அடுத்த பக்கம் பார்க்க]

### நேரு சமாதானப் பரிசு

உலக சமாதானம், சர்வதேச ஐக்கிய உணர்வு ஆகியவற்றிற்காக சீரிய பணியாற்றுபவர்களுக்கு அளிக்கப்படும் நேரு சமாதானப் பரிசு, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செக்ரடரி-ஜெனரல் திரு ஊதாண்ட் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. நேரு பரிசு அளிக்கப்படுவது இதுதான் முதல்தடவை. இந்தப்பரிசு 1 லட்சம் ரூபாய் ரொக்கமாகும்.

நேரு சமாதானப் பரிசை ஏற்க, ஐ. நா. காரியதரிசி ஊதாண்ட் சம்மதித்துள்ளார். இந்தப் பரிசில் ரூ. 1 லட்சம் ரொக்கம் அளிக்கப்படும். இத்தொகையை, நியூயார்க்கில் உள்ள ஐ. நா. சர்வதேசப் பள்ளிக்கு நன்கொடையாக அளிப்பதென்று, ஊதாண்ட் தீர்மானித்துள்ளார்.

"இந்தப் பரிசு அளிக்கப்படுவது தமக்கு வழங்கப்படும் பெரிய கௌரவமாகும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊதாண்ட் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் "நேரு சமாதானப் பரிசை எனக்கு அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதைக் குறித்து, பெருமைப்படுகிறேன். காலஞ்சென்ற நேருவிடம் நான் பெரும் மதிப்பு கொண்டவன். அவரை நான் பலமுறை சந்தித்திருக்கிறேன். கொழும்பு, பாண்டுங், பெல்கிரேட் ஆகிய இடங்களிலும் இந்தியாவுக்கு விஜயம் செய்த போதும், பர்மாவுக்கும் ஐ. நா.வுக்கும் அவர் வந்தபோதும் சந்தித்திருக்கிறேன்" என்று அவர் கூறினர்.

"குழந்தைகளிடமும் இளைஞர்களிடமும் காலஞ் சென்ற நேரு அன்பு கொண்டிருந்தார். ஆகவே, அதற்கு அடையாளமாக ஐ.நா. சர்வதேசப் பள்ளி நிதிக்கு, இந்தப் பரிசுத் தொகையை நன்கொடையாக அளிப்பதே பொருத்தமாகும்" என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

---

"ஜனநாயகம் என்பது அரசியலோ பொருளாதார முறையோ மட்டு மல்ல; அது மனித உள்ளத்தில் ஓர் அம்சம். இறுதியில் எல்லாமே உள்ளத்தோடு இணைந்தவை தாம். அரசியல், பொருளாதாரத் துறைகளில் எல்லோருக்கும் இயன்ற அளவுக்கு சம வாய்ப்புக் கொடுப்பதே ஜனநாயகம். தனி நபர்களின் திறமை தடையின்றி, வளர்ந்து, சுதந்திரமாக முன்னேறும் சந்தர்ப்பம் கொடுப்பதே ஜனநாயகம். மற்றவர்கள் நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்ளவில்லை யெனினும் அவர்களையும் அவர்களது கருத்துக்களையும் பொறுமையுடன் சகித்துக்கொள்வது, ஜனநாயகத்தின் முக்கிய அம்சம்."

—அமரர் நேருஜி.

## பள்ளிக் குழந்தைகளின் அரோக்கியத் திட்டம்:

(முன்பக்கத் தொடர்ச்சி)

பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் இவ்வாறு சுகாதாரக் கல்வியைப் பரப்பும் பணியில் உதவியாக அங்குள்ள விஞ்ஞான மன்றமும் ஒத்துழைத்து வருகின்றன. சுகாதார வழிமுறைகளைப்பற்றிய சொற்பொழிவுகள், செயல் விளக்கங்கள், படக்காட்சிகள் முதலியன பள்ளிகளில் அடிக்கடி நடத்தி அவற்றின் மூலம் சுகாதாரக் கல்வியைப் பரப்புவதில் விஞ்ஞான மன்றம் உதவி வருகிறது. மேலும் பள்ளி மாணவர்களின் இரத்தம், சிறுநீர், மலம் போன்றவைகளை இலவசமாக மருத்துவ பரிசோதனை செய்யும் விஞ்ஞான மன்றம் இத்திட்டத்திற்கு உதவுகிறது.

பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில், இத்திட்டத்தின் கீழ் இதுவரை 15 ஆரம்பப்பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 2,500 குழந்தைகள் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். பரிசோதிக்கப்பட்ட மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கையில் 51 சதவிகிதம் குழந்தைகளுக்கு, மருத்துவச் சிகிச்சை தேவையாக உள்ளது எனக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பரிசோதனை செய்யப்பட்ட குழந்தைகளிடையே காணப்பட்ட முக்கியமான குறைகளும் நோய்களும் பின்வருமாறு :—

**நோய் பீடிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.**

(சதவிகிதத்தில்)

| | |
|---|---|
| 1. வைட்டமின் குறை நோய்கள். | 42 |
| 2. பல்வியாதிகள் | 22 |
| 3. தொண்டையில் சதை வளர்தல். | 14 |
| 4. சரும வியாதிகள் | 8 |
| 5. கண் வியாதிகள் | 2 |
| 6. நுரையீரல், இருதயம் சம்பந்தப்பட்ட குறைபாடுகள். | 1·5 |
| 7. காது சம்பந்தமான நோய்கள். | 1 |

**அவசியமான திட்டம்**

மேற்கண்ட புள்ளி விவரங்களின் மூலம், பள்ளியில் பயிலும் குழந்தைகளில் பெரும்பலோர் ஆரோக்கியக் குறைவு உடையவர்களாக உள்ளனர் என்பது நன்கு தெரியவருகிறது. ஆகவே பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் திட்டம் மிகவும் அத்தியாவசியமானது என்று சொல்லத் தேவையில்லை.

# அகில இந்தியக் கூட்டுறவு வாரம்

கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம். "பள்ளிக்கூடம், பஞ்சாயத்து, கூட்டுறவுப் பண்டகசாலை" இம் மூன்றும் கிராமத்தின் அவசியத் தேவைகள் என்பது, அமரர் நேருஜியின் கருத்து. கூட்டுறவு இயக்கத்தின் வெற்றி, அதன் தத்துவங்களைப் பொது மக்கள் நன்கு உணர்ந்து செயலாற்றுவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

கிராமப் பொருளாதாரத்தை வளம்பெறச் செய்வதில், பஞ்சாயத்தும், கூட்டுறவு இயக்கமும் பெரும் பணி ஆற்றிவருகின்றன. கூட்டுறவுச் சக்தியின உணர்ந்து, அந்த இயக்கத்தைப் பரவச் செய்வதில் மக்கள் மிகுந்த ஆர்வம் கொள்ளவேண்டும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு, அகில இந்தியக் கூட்டுறவு வாரம் ஆண்டுதோறும் நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டிலும், இவ்விழா நவம்பர் மாதத்தில் 5—11—1966 முதல் 11—11—1966 வரை ஒரு வாரம், அகில இந்தியக் கூட்டுறவு வாரமாகக் கொண்டாடப்படும்.

இவ்வாண்டு கூட்டுறவு வாரம் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்படும். சமுதாயத்தில் எல்லா வகையான மக்களும் இவ்விழாவில் பங்குகொண்டு பணியாற்றுகின்ற முறையில், தமிழகத்தில் இக்கூட்டுறவு வாரம் கொண்டாடப்படும். கீழ்க்கண்ட முறையில் இந்த வாரம் கொண்டாடப்பட வேண்டுமென, தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் கேட்டுக்கொள்கிறது :—

| | |
|---|---|
| 5—11—1966 | ஆரம்ப தினம். |
| 6—11—1966 | உபயோகிப்போர் தினம் (Consumers' Day) |
| 7—11—1966 | உற்பத்தியாளர், தொழிலாளர் தினம். |
| 8—11—1966 | பால் பெருக்கு நாள். |
| 9—11—1966 | மாணவர்—மாதர் தினம். |
| 10—11—1966 | சங்கத்தினர் தினம். |
| 11—11—1966 | சிக்கனத் திருநாளும்—சிக்கன தினமும். |

"கூட்டுறவே நாட்டுயர்வு". இன்றைய நிலையில் உணவு உற்பத்தி பெருக, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கூட்டுறவு நிறுவனங்கள் உறுதுணையாக அமையவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் பணி, நோக்கம், முக்கியம் ஆகிய அம்சங்களைப்பற்றி மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். கூட்டுறவு ஒரு மகத்தான சக்தி. இச் சக்தியின் உட்பொருளை, தத்துவத்தை, மக்கள் உணர வேண்டும். இதை வலியுறுத்தும் வகையில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் அகில இந்திய கூட்டுறவு வாரமானது—இவ்வாண்டு சமுதாயத்தின் பல்வேறு வகையினரையும் உள்ளடக்கிச் செல்கின்ற நிலையில் கொண்டாடப்படுவது, குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

இவ் வாரத்தை எப்படி கொண்டாட வேண்டும் என்பது பற்றிய விரிவான விளக்கங்களை, தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பியுள்ளது. பஞ்சாயத்து நிறுவனங்கள், இக் கூட்டுறவு வார விழாவினைச் சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில் ஆவன புரிய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

*கிராம வளர்ச்சிக்குப் பணிபுரியும் ஆர்வம் தழைக்க:*

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் எண்ணங்கள்மாற வேண்டும். திட்டங்களின் நன்மைக ளெல்லாம் ஒவ்வொரு விவசாயிக் கும் பூரணமாகக் கிடைக்கவேண்டும். மக்களுக்கு நல்லது செய்ய, நம்முடைய சேவையை அவர்களுக்கு அர்ப்பணிக்கவேண்டும் என்ற சேவா உணர்வு உள்ளூர்ப் பிரதிநிதிகளிடம் இருத்தல்வேண்டும். உள்ளூர் தலைவர் களும் அவ்வுணர்ச்சியால் உந்தப்பட்டு, அதிகாரிகளும் தங்கள் கடமையை உணர்ந்து பணியாற்றும்போது, சமு தாய நலத்திட்டம் நிச்சயமாக வெற் றியே பெறும். கிராமங்களில் நிலவும் ஏழ்மையை அகற்றுவதுதான், சமு தாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். கிராமங்களிலேயே புதிய சமுதாயத்தைத் தோற்றுவிப் பதில், ஆர்வமிக்க, அறிவொளி வீசும் மாணவர்கள் பெரும் பங்காற்ற வேண்டியுள்ளது. எனவே, மாண வர்கள் கல்வி கற்பதில் முழு கவனம் செலுத்தி, பின்னர், அறிவு, அன்பு என்னும் ஒளி விளக்குகளைக் கிராமங் களுக்கு எடுத்துச் சென்று, விவசாயப் பெருமக்களின் வாழ்வை மலரச் செய்யவேண்டும். ஏனெனில், அவர் களின் நல்வாழ்விலேதான், இந்தி யாவின் வருங்காலம் உறுதியான அடித்தளத்தில் அமைய முடியும்.

[சென்னையில் 1965 நவம்பரில் நடைபெற்ற கல்லூரித் திட்ட மன்றங் களின் (Planning Forums) கருத்தரங் கில், கிராம வளர்ச்சி நெறியாளர் திரு கா. திரவியம், ஐ. ஏ. எஸ். அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

**உலகப் பேரறிஞர்களின் புகழ் அஞ்சலி:**

# நேரு வட்டமேஜை மகாநாடு

'புத்துயிர் பெற்றெழுந்துள்ள நாடுகளின் தலைவர்' என்றும், உலக சமாதானத்துக்காகப் பாடுபட்ட அஞ்சாநெஞ்சம் படைத்த 'தொண்டர்' என்றும், 'அடிமை மக்களின் விடுதலைக்காகப் போராடிய வீரர்' என்றும் உலக மக்களால் போற்றிப் புகழப்படும் அமரர் நேருஜியின் நினைவாக, புதுடெல்லியில் கடந்த செப் டம்பர் 26-ம் தேதி முதல் 29-ம் தேதிவரை, "நேரு வட்டமேஜை மகாநாடு" ஒன்று நடைபெற்றது. இம் மகாநாட்டை, யுனெஸ்கோ (UNESCO) நிறுவனமும், பாரத அரசாங்கமும் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தன.

இம் மகாநாட்டில் "ஜவாஹர்லால் நேருவின் இலட்சியங்களும், செயல்திறனும்", "இன்றைய உலகில் ஜவாஹர்லால் நேருவின் பங்கு", "யுனெஸ்கோ சம்பந்தமாக ஜவாஹர்லால் நேருவின் கொள்கை", "ஜவாஹர்லால் நேரு—'இரு கலாச்சாரங்களின் பிரதிநிதி' "அகில உலகப் பிரஜை ஜவாஹர்லால் நேரு தேச சுதந்திரத்துக்காகவும், சர்வதேச சமாதானத்துக்காகவும் நடத் திய போராட்டம்" என்னும் பொருள்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவ் வட்டமேஜை மகாநாட்டை, ராஷ்டிரபதி டாக்டர் இராதா கிருஷ்ணன் செப்டம்பர் 26-ம் தேதி, புதுடெல்லியில் ஆரம் பித்து வைத்தார். அதையடுத்து, மகாநாடு தனது அலுவல்களை ஆரம்பித்தது.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த பேரறிஞர் கள் விவாதங்களில் பங்கு கொண்டனர். மகாநாட்டில் பங்கு கொண்ட அறிஞர்கள் அமரர் நேருஜியின் சிறப்பியல்புகளை பல்வேறு கோணங்களிலிருந்து ஆராய்ந்து, அந்தப் பெருந் தலைவரைப் பற்றி கருத்தாழம்பொதிந்த சொற்பொழிவுகள் ஆற்றினர்.

1937-ல் நேருவைச் சந்தித்த ஜான் கந்தர் இவ்வாறு கூறினர்: "நேரு, மேலை நாட்டவராகிவிட்ட ஒரு இந்தியர்; சமூகவாதியாகிவிட்ட ஒரு செல்வந்தர்; மாபெரும் மக்கள் தலைவ ராக ஆன ஒரு தனி நபர்".

உலகப் புகழ்பெற்ற உத்தமத் தலைவர்களில் ஒருவரான அமரர் நேருஜியின் சிறப்பியல்புகளை, "நேரு வட்டமேஜை மகாநாடு" சீரிய முறையில் எடுத்துக்கூறியதின் மூலம், அப்பெருந் தலை வருக்கு சிறந்த முறையில் தன் அஞ்சலியைச் செலுத்திக் கொண்டது எனலாம்.

## நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தும் பஞ்சாயத்து யூனியன்கள்

பஞ்சாயத்து யூனியன்களில் விவசாயத்திற்கு டிராக் டர்களைப் பயன்படுத்துதல் பிரபலமாகிக் கொண்டு வரு கிறது. நவீன இயந்திரங்களைக் கொண்டு விவசாயத் துறை யில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி, கிராமப்புறங்களில் தோன்றியுள்ளது வர வேற்கத் தக்க ஒன்றாகும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், திருவரங்குளம் பஞ்சாயத்து யூனியனில், நீர்ப்பாசன வசதியைப் பெருக்கு வதற்காக, சுமார் 10 ஆயிரம் ரூபாய் விலையில் விசை யினால் இயங்கும் போரிங் இயந்திரம் ஒன்று அண்மையில் வாங்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில், இந்த இயந்திரத்திற்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டுள்ளது. திருவரங்குளம் பஞ்சாயத்து யூனிய னில் உள்ள விவசாயிகள் இதை வெகுவாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நீர்ப்பாசனக் கிணறு தோண்டுவதைவிட, போரிங் கிணறு சிக்கனமாக உள்ளதே இதற்கு காரணம்.


இந்த இயந்திரமானது, விவசாயிகளுக்கு 25 அடி ஆழத்திற்கு ரூ. 1–50; 50 அடிக்கு ரூ. 2–00; 100 அடிக்கு ரூ. 2–50; 150 அடிக்கு ரூ. 3–00; 200 அடிக்கு ரூ. 3–50; 250 அடிக்கு ரூ. 4–00 என்று சகாய வாடகை யில் கொடுக்கப்படுகிறது. இயந்திரத்திற்கு வேண்டிய எண்ணெய், போக்குவரத்துச் செலவு, இயந்திரத்தை இயக்கும் மெக்கானிக்குக்கு தினசரி பேட்டா பணம் எல்லாம், விவசாயிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். கொத்தக்கோட்டை, கீரனூர், பெருமண்டு, அரிமளம், காத்தக்குரிச்சி, தட்சிணாபுரம் ஆகிய கிராமங்களில் இவ்வியந் திரமானது விவசாயிகளினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

படம் 1.—சிறந்த நிர்வாகியும் அறிஞருமான சர். சி பி. இராமசாமி அய்யர், 26-9-66-ல், லண்டனில் காலமானார். சென்னைக்கு கொண்டுவரப்பட்ட அவருடைய சடலத்தின் மீது. தமிழக ஆக்டிங் கவர்னர் திரு உஜ்ஜல் சிங் மலர் வளையம் வைக்கிறார்.

படம் 2.—1-10-66-ல், சென்னையில், மாநில உள்நாட்டுப் பாதுகாப்புப் பயிற்சி நிலையத்தை, தமிழ்நாடு அரசாங்கத்தின் தலைமைச் செயலாளர் திரு ஸி. ஏ. இராமகிருஷ்ணன், ஐ. ஸி. எஸ், குத்துவிளக்கேற்றி, துவக்கிவைத்தார்.

படம் 3, 4.—செங்கல்பட்டு மாவட்டம், வாலாஜாபாத் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பரந்தூர் பஞ்சாயத்தில், பிரதம சுகாதார நிலையத்தை, 8-9-66-ல், கிராம வளர்ச்சி நெறியாளர் திறந்து வைத்தார். பரந்தூர் பஞ்சாயத்துத் தலைவர் திறப்பு விழாவில் பேசுகிறார். படம் 4. அவ்விழாவினை ஒட்டி நடைபெற்ற வில்லுப்பாட்டு கலை நிகழ்ச்சி


படங்கள் 5. 6.—வட ஆர்க்காடு மாவட்டக் கல்லூரிகளின் திட்டமன்றக் குழு நடத்திய கல்லூரி மாணவர் முகாமினை செய்யாறில் 17-9-66-ல்; முதலமைச்சர் துவக்கிவைத்தார். கல்லூரி திட்டமன்றங்களின் மாநிலக் கமிட்டியின் உப-தலைவர் திரு பி. இராமச்சந்திரன் எம். எல். ஏ. தலைமை வகித்தார்.


1


2



4


3






# நாடோடி மக்களான நரிக்குறவர் சமுதாயம் நல்வாழ்வு வாழ வசதிகள்...



1





2



4



3

படங்கள் 1–3.—'கிராம தான'த் துறையில் புகழ்பெற்ற [illegible] கிராமத்தின் அண்மையில்....

படங்கள் 4–6.—புதிய குடியிருப்பு—அரசாங்கம் வழங்கியுள்ள நிலங்களில் வீட்டு வசதியும், விவசாய முன்னேற்றமும்:

குடிநீர்க் கிணறு வசதி..
காய்கறி, பழச்செடிகள் சாகுபடி....
பள்ளிக்குச் சென்று படிக்கின்ற நரிக்குறவர் குழந்தைகள்....

[சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில்]






5






6










படம் 1.—திருநெல்வேலி மாதா கூட்டுறவுப் பண்டகசாலையை, 4–9–66-ல், முதலமைச்சர் துவக்கிவைத்து, பண்டகசாலைத் தலைவியும் மாவட்ட ஆட்சித் தலைவரின் மனைவியுமான திருமதி சுசீலா இராஜேந்திரன் அவர்களிடம் முதன் முதலாக விற்பனையை ஆரம்பித்து வைக்கிறார்.

படம் 2-ம், 4-ம்.—செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியை, 19–9–66-ல் முதலமைச்சர் துவக்கி வைத்தார். படம் 4.—கல்லூரியின் எழில் தோற்றம்,

படம் 3.—அண்மையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட சென்னை அயோத்தியக்குப்பம் மக்களுக்கு உள்துறை அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் ஆடைகள் விநியோகம் செய்கிறார். அப்பகுதியைச் சேர்ந்த மார்வாரி சமூகத்தினர் அவற்றை நன்கொடையாக அளித்தனர்.



**சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் இந்தியக் கிராமப் பெண்களை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறது? அதில் அவர்களுடைய கடமைகள் என்னென்ன? அவற்றை யெல்லாம் கிராமப்பெண்கள் உணர்ந்து நற்பணியாற்றி வருகிறார்களா ?**

# சக்தி மிகுந்த சமுதாயம்

ஆம். திட்டம் துவங்கிய நாள் முதலே பெண்கள் தீவிரமாக இதில் ஈடுபட்டு, நாட்டின் நல்வாழ்விற்காக பாடுபட்டு வருகிறார்கள். பெரும் பாலான கிராமங்களில் மாதர் சங்கங் கள் உண்டாகி நன்முறையில் செய லாற்றி வருகிறது.

ஆந்திராவில், ''பண்டித வில்லுரு ஆதர்ஸமஹில மண்டலி'' யை இதற்கு ஒரு சான்றாகக் கொள்ளலாம். இது ஆரம்பித்து நான்கு ஆண்டுகளே ஆயிற்று என்றாலும், கிராம வேலை கள் பலவற்றையும் இது மேற் கொண்டு இயங்கிவருகிறது.

### ஆண்களின் எதிர்ப்பு

இந்த மஹில மண்டலியை துவக்கு வதற்கு பெண்கள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போதே, அதற்கு ஆண்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு இருந்தது. ஆண்களை எதிர்த்து தைரியமாகப் போராடி, இறுதியில் மஹில மண்டலியை நிறுவி விட்டார்கள், இக்கிராமப் பெண்கள். 1963-ம் ஆண்டில் இந்த மஹில மண் டலியில் இருந்த உறுப்பினர் 70 பேர் களேயாவர்; ஆனால் இன்றோ 140 உறுப்பினர்களிருக்கின்றனர். இது 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் பதிவு செய்யப்பட்டது.

இந்த மஹில மண்டலி செய்த முதல்காரியம் பெண்களிடையே அறி யாமையைப் போக்கியதுதான். முதி யோர் கல்வி நிலையம் ஒன்று ஆரம் பிக்கப்பட்டு அதில் 37 பேர்களுக்கு கல்வியறிவு அளிக்கப்பட்டது. இதில் ஒரு முக்கிய அம்சம் என்னவென் றால், இவ்வகுப்புக்களை நடத்துபவர் மண்டலியின் ஒரு உறுப்பினரேயாவர்.

### எத்தனை எத்தனை பணிகள்....

குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு, மண்டலி அநேக திட்டங்களை வகுத்துள்ளது. அம்பர் சர்க்காவில் நூல் நூற்பதற்காக பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டு, அந் நிலையத்தின் மூலம் 35 உறுப்பினர் களுக்கு போதிய பயிற்சியளிக்கப்பட் டுள்ளது. ஒவ்வொருவரும் இப்போது தினம் ரூ. 2 சம்பாதித்து வருகின் றனர்.

ஒரு தையல் நிலையமும் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. தையற்கலையில் 77 பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள் ளது. தையற்பணி ஆசிரியருக்கான ஊதியம், மண்டலியின் பொது நிதி யிலிருந்து கொடுக்கப்படுகிறது.

பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதிலும் மண்டலி தவறுவதில்லை. சிறுமிகளுக்காக சங் கீதமும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் பஜனை நடைபெற்று வருகிறது.

### குழந்தைகளுக்கு பிஸ்கட், பால்

32 குழந்தைகள் கொண்ட ஒரு பால் வாடியையும் இம்மண்டலி நிர்வகித்து வருகிறது. இதற்காக மாதத்திற்கு ரூ. 125 செலவாகிறது. மக்களிட மிருந்து நன்கொடைகளைப்பெற்று, அதன் மூலம் இப்பால்வாடி நடந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் குழந் தைகளுக்கு பிஸ்கட்டும், பாலும் கொடுக்கப்படுகிறது.

புத்தகம் படித்து நற்பயன் அடை யும் பழக்கத்தை பெண்களிடையே உண்டாக்குவதற்காக, ஒரு நூலகத் தையும் ஏற்படுத்த இம்மண்டலி தவற வில்லை. இதில் சுமார் 300 புத்த கங்கள் இருக்கின்றன. இவையெல் லாம் உறுப்பினர்களால் அன்பளிப் பாக அளிக்கப்பட்டவை.

### அலுவலகக் கட்டிடம்

ஆதர்ஸ மஹில மண்டலிக்குச் சொந் தமாக கட்டிடம் எதுவும் கிடையாது. இக்குறையைப் போக்க, திருமதி கஸ் தூரி மங்கம்மா என்ற ஒரு நன் கொடையாளரை உறுப்பினர்கள் அணுகி, கட்டிடத்திற்காக நிலமளிக் கும்படி வேண்டிக்கொண்டனர். அவ ரும் ரூ. 2,000 மதிப்புள்ள ஒரு நிலத்தை அன்பளிப்பாக அளித்தார். மண்டலியின் தலைவரான திருமதி போப்பா ராமலக்ஷ்மமா என்பவர் அந் நிலத்திற்கு அருகாமையிலே யுள்ள தன் நிலத்தையும் நன்கொ டையாக அளித்தார். இது ரூ. 1,600 மதிப்புள்ள நிலம். கட்டிடத்திற்கா கும் செலவு முழுவதையும் மண்டலி யின் தலைவியே ஏற்றுக்கொள்ள முன் வந்தார். கட்டிட வேலைகளில் பாதி பூர்த்தியாகிவிட்டது.

[27-ம் பக்கம் பார்க்க.]




**உ**ணவு உற்பத்தியைப் பெருக்குவதில் கிராமங்களிலே இப்போது ஒரு வித புரட்சியே அமைதியாக நடந்து கொண்டு வருகிறது எனலாம். இதற்கு உறுதுணையாக நின்று, விவசாயிகளுக்கு அரும் பெரும் உதவிகளைச் செய்து வருவது தீவிர விவசாய ஒலிபரப்பு நிகழ்ச்சிகளே யாகும். இந்த ஒலிபரப்புகள் ஒரு விதத்தில் இரு வழிப்பாதையைப் போன்று பயன்பட்டு வருகிறது. விவசாய ஆராய்ச்சிகளையும், நுணுக்கங்களையும் விவசாயிகளுக்கு தெரிவித்து, அதன் மூலமாகவே அவர்களுடைய கஷ்டங்களையும், பிரச்னைகளையும் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்கிறது. அதைத்தொடர்ந்து நிபுணர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில், அவர்களின் கருத்துக்களும் விவசாயிகளுக்கு எடுத்துச்சொல்லப் படுகின்றன.

கிராம வானொலி மன்றமானது நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறது. இன்றளவில் 12,918 மன்றங்கள் இந்தியாவில் இருக்கின்றன. விவசாய முன்னேற்றத்தில் விவசாயிகளுக்கு கை கொடுத்து உதவும் பங்காளிகள், இந்தக் கிராம வானொலி மன்றங்கள். இதைப் போன்ற மற்றொரு நிகழ்ச்சியே தீவிர விவசாய ஒலிபரப்பு (Farm & Home Broadcasts) நிகழ்ச்சியுமாகும். தீவிர விவசாய உற்பத்தித் திட்டத்திற்கு உதவுவதற்காகவே, இவ்வாண்டு ஜூன் மாதம் இது தோற்றுவிக்கப்பட்டது.

ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அகில இந்திய வானொலியின் 34 தலைமை நிலையங்கள், 4 துணைநிலையங்களிலிருந்து, இந்நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வருகின்றன. அவ்வப்போது ஆங்காங்கே நடைபெற்றுவரும் விவசாய காரியங்களுக்கு ஏற்ப தகவல்களைச் சேகரித்து, விவசாயிகளுடைய பிரச்னைகளையும், தேவைகளையும் அறிந்து, அவர்களுடைய உள்ளங்களுடன் உறவாடுதலே இந்த நிகழ்ச்சியின் முக்கிய குறிக்கோளாகும். சான்றாக 'டாய்ச்சுங் நேடிவ்' விதை நடப்படும் தருவாயில், அது பற்றிய எல்லாத் தகவல்களையும் முன்னதாகவே அந்தப் பிராந்திய வானொலி நிலையம் சேகரித்து ஒலிபரப்புகிறது. விதைகள் எங்கெங்கே கிடைக்கும், எவ்வாறு விதைகளை பண்படுத்தி, விதைப்பது போன்ற பிரச்னைகளெல்லாம் தெளிவாக அந்நிலையத்தால் காலம் தாழ்த்தாது ஒலிபரப்பப்படுகின்றன.

### இரண்டு லட்சம் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது

குறிப்பிட்ட தினத்தில் ஒலிபரப்பாகும் பொருள் பற்றி, ஏற்கெனவேயே தகவல் அளிக்கப்பட்டு விடுகின்றன. இதனால் மன்ற உறுப்பினர்கள், அப்பொருள் பற்றி விவாதிக்க நல்ல வசதியேற்பட்டு விடுகிறது. மன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் தினத்தன்று, உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றுகூடி, அன்று ஒலிபரப்பாகவிருக்கும் பொருள்பற்றி, தீவிரமாக விவாதிக்கின்றனர். ஒலிபரப்பு முடிந்தவுடன்கூட, இவ்விவாதம் தொடருகிறது. மன்ற அமைப்பாளர், உறுப்பினர்களின் சந்தேகங்கள், கஷ்டங்கள் பற்றிய தகவல்கள் எல்லாவற்றையும் சேகரித்து, அவற்றை உடனே தபால் மூலம் வானொலி நிலையத்துக்கு அனுப்பி விடுகிறார். அங்கே அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள், இவ் விதக் கேள்விகளுக்குத் தகுந்த பதில்களை அளிக்கின்றனர். அந்த பதில்கள் அடுத்த வாரமே ஒலி பரப்பப்பட்டு விடுகின்றன. விவசாயிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் கேள்விகளில் பெரும்பாலானவை, உரம், கிருமிநாசினி போன்றவை பற்றியே இருக்கும். இவை பற்றி யில்லாவிட்டால், எப்படி மகசூலை அதிகரிப்பது என்பது பற்றிய கேள்வியாக இருக்கும்.


1964–65-ம் ஆண்டில் மட்டும் கிராம வானொலி மன்றங்கள் 1,79,867 கேள்விகள் அனுப்பியிருந்தன. அகில இந்திய வானொலி நிலையம், இவையனைத்திற்குமுரிய பதில்களை ஒலிபரப்பு மூலம் அளித்திருக்கிறது. இந்த 1,79,867 கேள்விகளில் 80 சத வீதத்திற்கு மேற்பட்டவை விவசாய சம்பந்தப்பட்டவையே; மற்றவை சுகாதாரம். உடல்நலம் பற்றியவையாயிருந்தன. ஒலிபரப்புபவருக்கும், விவசாயிக்குமிடையே ஏற்படும் இந்த உரையாடலின் வாயிலாக விவசாயிகளின் பொருளாதாரமும் சமூக நலமும் மேம்பாடடைந்துள்ளன என்பதற்கு அனேக சான்றுகளிருக்கின்றன. இரண்டை இங்கே கூறலாம்.

### வானொலி மன்றம் விளைவித்த நன்மைகள்

குண்டூர் மாவட்டத்தின் நுடக்கி என்ற கிராமத்திலுள்ள ஒரு விவசாயி கிராம வானொலி மன்ற நிகழ்ச்சியைக் கேட்டு, அதன்படி கிருமிநாசினியைப் பயன்படுத்தியதில் அவருடைய மிளகாய்ப் பயிர் பெரும் சேதத்திலிருந்து காப்பாற்றப்பட்டது. அதனால் அவருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 1,800 வருமானம் கிடைத்தது. ஒரு கிராமத்தில் மலேரியா ஜுரம் பரவி வருவதை முதன் முதலாக ரேடியோ மூலம் கேட்டு ஊருக்குத் தெரியப்படுத்தியவர் ஒரு கிராம வானொலி மன்ற அமைப்பாளரே! இதனால் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அநேக உயிர்கள் பிழைக்க உதவியது, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சி!

குறிப்பிட்ட காலங்களில் விவசாய நிபுணர்கள் வயல்களுக்குச் சென்று எவ்வாறு நவீன கருவிகளை உபயோகிப்பது என்பது பற்றி விளக்குவதுடன் விவசாயிகளின் இன்னல்களுக்கு அங்கங்கேயே தகுந்த தீர்வுகளையும் அவர்கள் சொல்லிக் கொடுத்து உதவி வருகிறார்கள்.

ஆகவே இவ்வாறு வானொலி மன்ற நிகழ்ச்சிகளைக்கேட்டு, பின்பு விவாதித்து, செயலில் முனைந்து, வெற்றி காணும் ஓர் இயக்கம், உற்பத்தித் துறையிலேயே ஒரு மகத்தான சேவையைச் செய்து வருகிறது.




தீவிர விவசாயத்திட்டம் அமுலில் இருந்து வரும் மாவட்டங்களில் எல்லாம், இதுவரை 10 நிலையங்கள் இத்துறையில் செயல்பட்டு வருகின்றன. அவை டெல்லி, வாரணசி, ஜலந்தர், சம்பல்பூர், பாட்னு, ராய்ப்பூர், விஜயவாடா, பூனு, திருச்சிராப்பள்ளி, திருச்சூர் ஆகிய இடங்களிலிருக்கும் வானொலி நிலையங்களாவன. மேலும் 6 இடங்களில் இவ்வித நிகழ்ச்சிகளை சீக்கிரமே துவக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

நுட்பமான பிரச்னைகளெல்லாம் நன்கு ஆராயப்பட்டு, தெளிவான, எளிய முறையில் விவசாயிகளுக்கு, அப் பிரச்சினைகள் விளக்கப்படுகின்றன. தீவிர விவசாய முறைப்படி வேளாண்மை நடைபெறும் இடங்களில், விவசாயத்தின் ஒவ்வொரு நிலையிலும் ஏற்படும் பிரச்னைகள், கஷ்டங்களை ஆராய்ந்து அதற்கேற்ப நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டு, உடனுக்குடன் ஒலிபரப்பப்படுகின்றன.

அகில இந்திய வானொலியைச் சார்ந்த நிருபர்கள், விவசாயிகளை, அவரவர்களின் வயல்களிலும், வீடுகளிலும் சந்தித்து, உரையாடுகின்றனர். அவர்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளைத் தெரிவிக்க அவர்களுக்குப் போதிய உற்சாகம் அளிக்கப்படுகிறது. அவர்கள் கேட்கும் கேள்விகள், எழுப்பும் சந்தேகங்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. அவற்றிற்கு நிபுணர்கள் அளிக்கும் பதில்கள் பிறகு இந்நிகழ்ச்சிகளின் வாயிலாக ஒலிப்பரப்பபடுகின்றன. தேர்ந்த, அனுபவமிக்க விவசாயிகளெல்லாம் வானொலி நிலையத்திற்கு அழைக்கப்பட்டு, அவரவர்களின் அனுபவங்களையும், சாதனைகளையும் சக விவசாயிகளுக்கு ஒலிபரப்பு மூலம் கூற ஏற்பாடு செய்யப்படுகிறது.

### கிராமத்திற்கொரு வானொலிப் பெட்டி

அதே நேரத்திலேயே, எல்லாக் கிராமத்திலும் வானொலிப் பெட்டியிருக்கிறதா என்பதும் கவனித்துக் கொள்ளப்படுகிறது. ஏற்கனவே 2,00,000 வானொலிப்பெட்டிகள் வழங்கப்பட்டு விட்டன. நான்காவது திட்டகால முடிவில், 5,60,000 கிராமங்களுக்கு வானொலிப் பெட்டிகள் அளித்து விட வேண்டுமென்பது திட்ட இலக்காகும். வானொலிப் பெட்டிகளில் சில சரிவர இயங்குவதில்லை என்ற குறை தற்போது இருந்து வருகிறது. சமீபத்தில் கூடிய, செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில், ஒவ்வொரு வானொலிப் பெட்டியும் சரிவர இயங்கும்படி பார்த்துக்கொள்ளுதல் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. 'யூனெஸ்கோ' பரிசுக்கூப்பன் திட்டப்படி 6,000-க்கும் மேற்பட்ட கிராம சேவக்குகளுக்கு வானொலிப்பெட்டிகள் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நவீன நுட்பங்களை அறிந்து கொண்டு, அதன்பேரில் விவாதங்கள் நடத்துவதை ஊக்குவிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.




### சக்தி மிகுந்த சமுதாயம்

(25-ம் பக்கம் தொடர்ச்சி)

ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் 25 பைசா சந்தா செலுத்துகின்றனர். மண்டலியின் வருவாயைப் பெருக்குவதற்காக, உறுப்பினர்களெல்லாம், தாங்களாகவே முன்வந்து உழைப்புத் தானம் செய்கின்றனர். வயல்களுக்குச் சென்று அறுவடை செய்து அதன் மூலம் கிடைத்த சம்பளத்தைக்கூட மண்டலிக்காக அளித்து விடுகின்றனர். இவ்வகையில் சென்ற ஆண்டு மண்டலிக்கு கிடைத்த வருமானம் ரூ 200 ஆகும். விசேஷ சந்தர்ப்பங்களில் நிதி வசூலிக்க கிளம்பி விடுகின்றனர். இவை தவிர, ஒரு சமுதாய காய்கறித் தோட்டத்தையும் மண்டலி உண்டாக்கி, அதன் மூலம் மேலும் வருவாயை பெருக்கிகொள்கிறது. பஞ்சாயத்து அளித்த 7 செண்ட் நிலத்தில் இந்த காய்கறித் தோட்டம் அமைந்துள்ளது. சென்ற ஆண்டு, வாழைத் தோட்டத்தின் மூலம் மட்டுமே ரூ 100 லாபம் கிடைத்துள்ளது-

ஆதர்ஸ மஹில மண்டலி இதுவரை எந்த உதவி வேண்டியும் அரசாங்கத்தையோ, மத்திய சமூக நல போர்டையோ அணுகியதில்லை.

### எல்லாம் எதனால்?

பண்டித வில்லூரு கிராமப் பெண்கள் சுபிட்சப்பாதையை வகுத்து அதில் முன்னேறி வருகின்றனர். எல்லாம் எதனால்? தங்களின் திறமையில், ஊக்கத்தில் அவர்கள் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். நாட்டிலுள்ள பிற பெண்களுக்கு அவர்கள் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். திருமதி போப்பா ரோமலக்ஷ்மம்மா அவர்களின் தலைமை, முக்கிய சேவிகாவான குமாரி முரளி கிருஷ்ணவேணியின் தளராத உழைப்பு, உறுப்பினர்களின் ஆதரவு ஆகியவையே இம்மண்டலியின் வெற்றிக்கு அடிப்படையானவை.

—o—

ம்ஹாபூர் கிராமம், உத்தரப் தேசத்திலுள்ள பாராகோவன் என்ற வட்டாரத்திலிருக்கிறது. இக்கிராமத்தில் 104 குடும்பங்களேயிருக்கின்றன. இவர்களெல்லாம் ஒற்றுமையுடன், திரு ஜய்ஸ்ரீ பிரசாத் என்ற பஞ்சாயத்துத் தலைவரின் கீழ் அரும்பாடுபட்டு, தங்கள் கிராமத்தின் நிலையை வெகுவாக உயர்த்தியுள்ளனர். இன்று அந்த கிராமம் சுயதேவையை பூர்த்திச் செய்துக் கொள்ளும் கிராமமாகவும், ஒரு மாதிரிக் கிராமமாகவும் காணப்படுகிறது.

இங்கு சாகுபடிக்கேற்ற நிலம் 125 ஏக்கர்கள் மட்டுமே. இதில் அவர்கள் விவசாய உற்பத்தியை வெகுவாக பெருக்கியுள்ளனர். ரசாயன உரங்கள், கிருமி நாசினிகள், பொருக்கு விதைகள், நவீன விவசாயக் கருவிகள் ஆகியவற்றை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகின்றனர். இதனால் 50 சதவீதம் உற்பத்தி அதிகரித்துள்ளது. நெல், சோளம், கோதுமை, பார்லி, உருளைக் கிழங்கு, கரும்பு, காய்கறிகள் ஆகியவற்றை இவர்கள் பயிரிடுகின்றனர்.

தங்களுடைய பிரச்னைகளை தாங்களே தீர்த்துக் கொள்கின்றனர் கம்ஹாபூர் மக்கள். தங்களுடைய வயல்களுக்கு பாசன வசதி செய்துக் கொள்ள 14 கிணறுகளை அவர்களே அமைத்துக் கொண்டுள்ளனர். ஆண்டொன்றிற்கு ரூ. 15,000 மதிப்புள்ள ரசாயன உரங்களை அவர்கள் உபயோகித்தாலும், கம்போஸ்ட் உரங்களில் அவர்கள் செலுத்தும் கவனம் சற்றும் குறையவில்லை. 48 கம்போஸ்ட் குழிகள் இங்கு வெட்டி நிரப்பப்பட்டு வருகின்றன.

அனேகமாக எல்லா குடும்பங்களுமே சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக யிருக்கிறது என்று சொல்லக்கூடும். கூட்டுறவுச் சங்கம் இதுவரை ரூ. 14,000 குறுகிய கால கடனாகவும், ரூ. 7,000 மத்திய காலக் கடனாகவும் அளித்துள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரங்களையும் இக்கூட்டுறவுச் சங்கமே விநியோகிக்கிறது. சங்கத்திற்குச் சொந்தமாக ஒரு கிடங்கு இருக்கிறது. அதில் உரங்கள் பாதுகாக்கப் படுகின்றன. விவசாயிகள் கடனை ஒழுங்காக திருப்பிச் செலுத்தி விடுகின்றனர். 85 சதவீதம் வரை, கடன்கள் வசூலிக்கப்பட்டுவிட்டன.

### வரிப் பாக்கியே இல்லை

பஞ்சாயத்துத் தலைவர் திரு ஜயஸ்ரீ பிரசாத். உறுப்பினர்கள் 15 பேர். வரிப்பாக்கி என்ற பேச்சே இங்கு கிடையாது. ஒரு மைல் நீளத்திற்கு சாலை கப்பிப் போடப்பட்டுள்ளது. ஒரு பஞ்சாயத்துக் கட்டிடம், ரசாயன உரத்திற்காக ஒரு துணைக் கிடங்கு, ஒரு துவக்கப்பள்ளி கட்டிடம், ஒரு குளம், குடிநீர் வழங்கும் நான்கு கிணறுகள், ஒரு சிறுவர் பூங்கா ஆகியவற்றை பஞ்சாயத்தே கட்டியுள்ளது. இவ் வளர்ச்சி வேலைகளுக்காக அரசாங்கம் ரூ. 17,250 மட்டுமே அளித்துள்ளது. எஞ்சிய தொகை முழுவதும் கிராமவாசிகளால் நன்கொடையாக அளிக்கப்பட்டவையே; சிரம தானம் செய்யவும் கிராமவாசிகள் தவறவில்லை.




அறியாமையை அகற்றும் பணியையும் சிறப்புற செய்து வருகிறது கம்ஹாபூர் பஞ்சாயத்து. மூன்றில் ஒரு பங்கு மக்களே எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். பஞ்சாயத்து ஒரு துவக்கப் பள்ளியை நிறுவியிருப்பதுடன், ஒரு முதியோர் கல்வி வகுப்பும், துவக்கப்பட்டுள்ளது. வாசகசாலையும், நூல் நிலையமும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராம வானொலி மன்றமும், சமுதாய கேள்வி நிலையமும் இங்கு இயங்கி வருகின்றன.

இளைஞர் மன்றம், கிராமத்திற்கு அரும்பணியாற்றி வருகிறது. கிராம வளர்ச்சி பற்றிய எல்லாத் திட்டங்களிலும் இம்மன்றம் ஈடுபட்டு சேவை செய்து வருகிறது. மன்றத்தில் 20 உறுப்பினர்களிருக்கின்றனர்.

இவ்வாறாக கம்ஹாபூர் கிராமம் பல்வேறு துறைகளிலும் வெகு வேகமாக முன்னேறி வருகிறது.

# புதிய திருப்பம்



இந்திய ஏழை விவசாயி பல்லாண்டுகளாகவே நசுக்கப்பட்டு வாழ்ந்தவர். வறுமையே அவரது இடையறாத துணைவன்; மனத்துக்கமே அவரது அன்றாட வாழ்க்கை; தலைமுறை தலைமுறையாக இந்த வறுமையையும், துக்கத்தையும் தாங்கி, தாங்கி, தன் சந்ததியினருக்கு அளித்துவிட்டு இறப்பவர்தான், இந்த விவசாயி. அவர் பிறந்தார்; வறுமையுடன் வாழ்ந்தார்; வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளாமலேயே மாய்ந்து போனார்; விதியை நொந்து, அதற்கு அடிபணிந்து வாழ்ந்ததே அவர் வாழ்க்கை.

சுதந்திரம் மலர்ந்தது; இந்திய விவசாயின் வாழ்க்கையை உயர்த்த அரசாங்கம் தீவிரமாக செயலில் முனைந்தது. 1952-ம் ஆண்டு துவக்கப் பட்ட சமுதாய நலத்திட்டம், இந்திய கிராம மக்களின் வாழ்க்கையையே அடியோடு மாற்றி வருகிறது. கிராமப் புறங்களிலே சுபிட்சம் மலர்ந்து வருகிறது.

இருப்பினும், ஏழை மக்கள் இன்னும் முழுப்பயனையும் அடையவில்லை. அவர்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்த அரசாங்கம் நிறைவேற்றி வரும் திட்டங்களெல்லாம், அவர்களைப் பொருத்தவரையில் போதுமான பலனளிக்கவில்லை.

### மஹாராஷ்ட்ரா வழி கண்டுள்ளது

ஏழைக் குடியானவர்களுக்கு உதவுவதற்கென்றே மஹாராஷ்டிரா அரசாங்கம் ஒரு திட்டம் துவங்கியுள்ளது. இத் திட்டம் ஆரம்பித்து ஓராண்டே முடிந்துள்ளதென்றாலும், வெற்றியின் அறிகுறிகள் தெரிகின்றன. விவசாயிகளும் இத்திட்டம் குறித்து மகிழ்வடைந்து வருகின்றனர்.

மஹாராஷ்ட்ரா சட்ட மன்றத் தலைவர் திரு வி. எஸ். பேஜ் அவர்கள்தான் இத் திட்டத்தினை துவக்க உதவியவர். மஹாராஷ்டிரா அரசாங்கத்துடனும் திட்டக் குழுவோடும் கலந்து விவாதித்தபின் இத்திட்டம் துவக்கப் பட்டது. இவர் சில கிராமங்களை சர்வே செய்து, 47 சத வீத குடும்பத்திற்கு 5 ஏக்கர்கள் வரை நிலமிருப்பதாக

வும், சராசரியாக கணக்கெடுப்பின் குடும்பத்திற்கு 3 ஏக்கர் நிலம் கூட இல்லையென்றும் கண்டுபிடித்தார். பழங்கால விவசாய முறைகளைக் கையாண்டு விவசாயம் செய்தால் ஒரு ஏக்கருக்கு ரூ. 100 முதல் ரூ 150 வரை வருமானம் கிடைக்கக்கூடும். அதன்படி ஒரு சிறிய நிலச்சுவான் தார் 2-3 ஏக்கர்கள் மூலம் ஆண் டொன்றிற்கு ரூ 300-தான் வரு மானம் பெறமுடியும்.

திரு பேஜ் அவர்களும், மற்ற "சர்வேயர்"களும் மேலும் ஆய்வு செய்தனர்; அதன் விளைவாக 5-6 பேர்கள் கொண்ட ஒரு குடும்பம் சாதா ரண நிலையில் வாழவேண்டுமாயின் ஆண்டிற்கு ரூ 1,800 தேவை என்ற முடிவிற்கு வந்தனர். பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, சமுதாய நலத் திட்டம், பஞ்சாயத்து ஆட்சி நிறு வனங்கள், கூட்டுறவு போன்றவை மூலம், இந்த நிலங்களையே நல்ல வரு வாய் தரும் நிலங்களாக மாற்ற வேண்டுமென்ற யோசனை பிறந்தது.

### விவசாயிக்கு பயிற்சி

இத் திட்டத்தின்படி பழங்கால வேளாண்மை முறைகளெல்லாம் படிப் படியாக ஐந்தாண்டுகளுக்குள் ஒழிக் கப்பட்டு, நவீன விவசாய முறைகள் புகுத்தப்படவேண்டும். இந்த நிலைக்கு மாற, பயிர் செய்வோருக்கு, அதிக அளவில் உரம், விதைகள் போன் றவை தேவைப்படுவதோடு, அவரும் மண்வளப் பாதுகாப்பு போன்றவற் றில் பயிற்சி பெற்றவராய் இருக்க வேண்டும். இத்திட்டத்தை நிறை வேற்றுவதற்காக, மூன்று அல்லது நான்கு அதிகாரிகள் கொண்ட ஒரு குழு ஒவ்வொரு வட்டாரத் துடன் இணைக்கப்பட்டுள்ளது. இவர் கள் ஒவ்வொரு இடமாகச் சென்று பார்வையிட்டு, திட்டங்களின் மூலம் என்னென்ன நன்மைகளை அளிக்க முடியும் என்றும், அதுவும் போதா விட்டால், இதற்கென ஒதுக்கப் பட்டுள்ள நிதியிலிருந்து என்ன உத விகள் செய்யமுடியும் என்பது பற்றி யும் முடிவு செய்வார்கள். இவ்வா றெல்லாம் ஒருங்கிணைந்து செயலாற்று வதன் மூலம், ஐந்தாண்டுகளில் ஒரு ஏக்கருக்கு மேலும் ரூ. 100/- அதிக வருவாய் கிடைக்க வழி கிடைக்கும். இதற்கு வேண்டிய நிதியுதவி, இதற் கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை யிலிருந்து கிடைக்கும்.

### கறவை மாடுகள் வழங்கப்படுதல்

மேற்சொன்னவாறு வருவாய் பெருகிய போதிலும், 2—3 ஏக்கர் களைக்கொண்ட ஒரு குடும்பத்தின் ஆண்டு வருவாய் ரூ. 600 ஆகத் தான் இருக்கும்; இன்னும் சொல் லப்போனால் 5 ஏக்கர் நிலமுள்ள ஒரு குடும்பத்தின் ஆண்டு வருவாய் ரூ. 1,000-க்கு மேலிருக்காது. மேலும் வருவாயைப் பெருக்குவதற்கு கால் நடைகள், கோழிப்பண்ணை, மீன ளம் மிகவும் துணை செய்யும். 4-5 ஏக்கர் நிலம் கொண்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும், (பஞ்சாப், ராஜஸ் தான் அல்லது மேற்கு உத்தரப்பிர தேசத்திலிருந்து நல்ல கறவை பசுக் கள் தருவிக்கப்பட்டு) 2 பசுக்கள் அளிக் கப்படும். பசுக்கள் அல்லது எருமை கள் சாதாரணத் திட்டங்கள் மூலமே இவர்களுக்கு கிடைக்கும் அப்படி அந்த திட்டத்திலும் நிதிப்பற்றாக் குறையிருப்பின், இதற்கென உள்ள நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டு இவை வாங்கித்தரப் படும். இதைப் போன்றே ஒவ்வொரு குடும்பத்திற்கும் 50 கோழிகள் அளிக் கப்படுகின்றன. ஒவ்வொரு பசுவி லிருந்து ரூ. 300-ம், கோழிப்பண்ணை யிலிருந்து ரூ. 300-ம் ஆண்டொன் றுக்கு வருமானம் கிடைக்கும். 1 முதல் 3 ஏக்கர்கள் மட்டுமே கொண்ட குடும்பங்களுக்கு, கூடுதலாக இன் னொரு பசு அல்லது எருமை, மேலும் அதிகப் பறவைகள் அளிக்கப்படுகின் றன; இவற்றால் இக்குடும்பங்களின் வருவாய் மேலும் பெருக வாய்ப்பிருக் கிறது. கால்நடைகள் நோய்வாய்ப் பட்டு இறந்துவிட்டால், அதன் நஷ் டத்தை விவசாயி சமாளித்துக் கொள்ள, அதற்கென ஏற்படுத்தப் பட்டுள்ள ஒரு நிதியிலிருந்து போதிய பாதுகாப்பு அளிக்கப்படும்.

### ஒரு சோதனை முயற்சி

தன்னுடைய பொருள்களை நல்ல விலையில் விற்பதற்கு கூட்டுறச் சங் கங்கள் துணை செய்கின்றன. ஐந் தாண்டுகளுக்குள் எல்லாக் கடன்களை யும் விவசாயி செலுத்திவிடுவதால், அவருடைய ஆண்டு வருமானம் ரூ. 1,800 ஆகிறது. தொகையை முழு வதுமாக அவர் செலுத்திவிடுவதால் கறவை மாடுகள் அவருக்கே சொந் தமாகி விடுகின்றன.

இந்த திட்டத்தை ஒரு சோதனை முயற்சியாக ஒரே ஒரு வட்டாரத்தில் சென்ற ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இப்போது மேலும் ஐந்து வட்டாரங் கள் இத் திட்டத்தில் கொண்டுவரப் பட்டுள்ளன. நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் 100 வட்டாரங்களில் இதை நிறைவேற்றுவது மஹாராஷ்டிரா அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் செயல்படும் வட்டாரத் தில் 90 பேர்களுக்கு கோழி வளர்ப் பில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. 22 கோழி வளர்ப்புப் பண்ணைகள் துவக்கப்பட்டுள்ளன. 101 உயர் ரக கறவைப் பசுக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வரப்புகட்டும் வேலை நான்கு கிராமங்களில் மும்முர மாக நடந்து வருகிறது. இந்த ஆண்டு முடிவிற்குள்,4,700 ஏக்கர்களில் சோள மும், 1,560 ஏக்கர்களில் வர்த்தகப் பயிர்களும் தீவிர விவசாயத் திட்டத் தின்கீழ் கொண்டுவரப்பட்டுவிடும். கட்டப்படவேண்டிய 12 கிடங்குகளில், 5 கட்டப்பட்டு வருகின்றன.

இந்த ஓராண்டு அனுபவமே ஒரு ஒரு தூண்டுகோல் என்று எண்ணிப் பார்க்கும்போது, மஹாராஷ்டிரா அர சாங்கம் ஒரு பெரிய பிரச்னைக்கு நல்ல தீர்வு கண்டிருக்கிறது என்றே கூறலாம்.

சாமிசெட்டிப்பாளையம்

# பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு சமையலறை

திரு என். சண்முகம்

தமிழ்நாட்டில் அநேகமாக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருவது ஒருபுறமிருக்க மாணவர்களின் ஆரோக்கியமும் நல்ல நிலைமையிலிருந்து வருகிறது. மாநில அரசாங்கம், பஞ்சாயத்துக்கள், பொது நிறுவனங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மதிய உணவுக்காகும் செலவை ஏற்றுக் கொள்கின்றன.

ஆனால் இவ்வாறு திரட்டப்பட்ட பணமெல்லாம் மதிய உணவுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது. இத்தொகையைக் கொண்டு ஒரு சமையல்காரரை நியமிப்பது என்பது எளிதானதல்ல. எனவே உணவு தயாரிக்கும் பொறுப்பு பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டு விடுவது இப்போது ஒரு வழக்கமாகி விட்டது. இந்த ஆசிரியர், உயர் வகுப்புகளில் படிக்கும் சில மாணவர்களை சேர்த்துக்கொண்டு அவர்களின் உதவியால் உணவைத் தயாரிக்கிறார். இதனால் தங்கள் குழந்தையின் மதிப்பி முடியாத நேரம் வீணாக்கப்படுவதாக சில பெற்றோர்கள் கருதுகின்றனர். "எங்கள் குழந்தைகளைக் கல்வி கற்கத்தான் அனுப்பினோமன்றி, சமையல் செய்ய அல்ல" என்றும் சில பெற்றோர்கள் கூற ஆரம்பித்து விட்டனர்.

## திறந்த வெளியில் மதிய உணவுச் சமையல்

இந்த உணர்ச்சியானது, பெரிய நாயக்கன்பாளையம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள சாமிசெட்டிபாளையம் கிராமத்தில் மிகுந்து காணப்பட்டது. இக்கிராமத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் 300 குழந்தைகள் படிக்கின்றனர். அவர்களில் 80 குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. கிராமத்திலுள்ள திறந்த வெளியில், ஒரு கிராமவாசியின் உதவியினால், மதிய உணவு பல நாட்களாக இங்கு தயாரிக்கப்பட்டு வருகிறது. ஒரு நல்ல 'ஷெட்' (shed) அல்லது கொட்டகை, ஒரு அறை இருந்தால், மதிய உணவு சிரமமில்லாமல் தயாரிக்கப்படும். மண் சுவர்களும், ஓடு போட்ட கூரையும் கொண்டு ஒரு சாதாரண 'ஷெட்' கட்டுவதற்குக் கூட ரூ. 100 செலவாகும்.

இத்தொகையை எப்படியாவது சமாளித்து சேகரித்து விடவேண்டுமென்று எண்ணிய பள்ளித் தலைமையாசிரியர், கிராமவாசிகளை ஒரு கூட்டத்திற்கு அழைத்தார். இத்தொகையை அளிப்பதற்கு கிராமவாசிகள் தயங்கினர். பஞ்சாயத்து, அல்லது பஞ்சாயத்து யூனியன்தான் இந்த 'ஷெட்'டைக் கட்ட வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணமாக இருந்தது.

## பள்ளிக்கூடத்தில் 'கம்போஸ்ட்' குழி

ஆனால் பிறரது உதவியை எதிர்பாராமலேயே இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று தலைமையாசிரியர் கிராமவாசிகளைக் கேட்டுக் கொண்டார். இதற்கு ஆரம்பமாக, பள்ளிக்கூட "காம்பௌண்டி"லேயே ஒரு கம்போஸ்ட் குழியை வெட்டலாம் என்று அவர் யோசனை கூறினார். அதை அப்பொழுதிலிருந்து நிரப்பிக்கொண்டு வந்தால், அடுத்த கல்வியாண்டில் அக்குழி தோண்டுவதற்குத் தயாராகி விடும் என்றும் தலைமையாசிரியர் விளக்கினார். ஒரு

கம்போஸ்ட் குழியிலுள்ள உரமானது 10 வண்டி இருக்குமெனவும், அதை ரூ. 60-க்கு விற்க முடியும் என்றும் அவர்களுக்கு தலைமையாசிரியர் எடுத்துரைத்தார். எவரும் கம்போஸ்ட் உரத்தை வாங்க தயங்க மாட்டார் அல்லவா? இந்த யோசனைக்கு எல்லோரும் உடன்பட்டனர். கம்போஸ்ட்டைத் தானே வாங்கிக்கொள்வதாக ஒரு கிராமவாசி அந்த இடத்திலேயே ஒத்துக்கொண்டார்.

### குழந்தைகள் நிரப்பிய கம்போஸ்ட் குழி

கம்போஸ்ட் குழியை நிரப்பியாக வேண்டுமே ! எப்படி? ஆசிரியர்கள் கூட்டத்தில் இப்பிரச்னை விவாதிக்கப்பட்டது. அக்கூட்டத்தில், ஒவ்வொரு மாணவனும் காலையில், அல்லது மதிய உணவுக்குப் பிறகு, பசும் இலைகள் கொண்ட கட்டு ஒன்றைக் கொண்டுவரவேண்டுமென்று யோசனை பிறந்தது. இதை மாணவர்களுக்குத் தெரிவித்தபோது, அதை அவர்கள் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டனர். பள்ளிக்கூடத்திற்கு வரும்போது ஒரு கட்டு இலையை இழுத்துக்கொண்டே வருவது குழந்தைகளுக்கு ஒரு நல்ல வேடிக்கையாக இருந்தது. காலப் போக்கில் குழியும் நிரம்பிவிட்டது.

### 'கம்போஸ்ட்' விற்று சமையலறை

கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம் திறக்கப்பட்டவுடன், உணவு தயாரிக்கும் பிரச்னையும் கூடவே கிளம்பி விட்டது. அக்கிராமத்தில் பயிற்சி பெற்று வரும் சமூகக்கல்வி அமைப்பாளர்கள், இப்பிரச்னை குறித்து தலைமையாசிரியருடன் விவாதித்தனர். அதன் பேரில் பெற்றோர்கள் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. வசதியுள்ள பெற்றோர்கள் ஒவ்வொருவரும் 25 பைசா நன்கொடை அளிக்கவேண்டுமென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதனால் 20 ரூபாய் கிடைத்தது. ஏற்கனவே கம்போஸ்ட்டை விற்றதனால் ரூ. 60 கை வசமிருந்தது. எனவே சமையலறையைக் கட்டுவது இப்போது ஒரு பிரச்னையே யல்ல.

தலைமையாசிரியரின் உழைப்பும், ஆற்றலும், பள்ளிக்குழந்தைகளின் உற்சாகமும், கிராமவாசிகளின் தாராள மனப்பான்மையும் ஒன்று சேர்ந்து, குழந்தைகளுக்கான சுத்தமான சமையலறை ஒன்றைத் தேடித்தந்தது.

---

## ஆதிவாசிகளுக்கு பால்பண்ணை

மஹாராஷ்டிராவிலுள்ள தானா மாவட்டத்தில் 5 கோடி ரூபாய் செலவில் ஒரு பால் பண்ணை உருவாக விருக்கிறது. ஆதிவாசிகளுக்கு நன்மையளிக்கும் வகையில் இத்திட்டம் உருவாகி வருகிறது. ஆதிவாசிகள் வசிக்கும் வங்காஸ், தப்சாரி என்ற கிராமங்களில் இப் பால் பண்ணை துவக்கப்படும்.

பம்பாய் நகரிலுள்ள கால் நடைகள், இக் கிராமத்திலுள்ள பசுமையான புல்வெளிகளுக்கு கொண்டு செல்லப்படும். பால் பண்ணை நடத்துவதிலும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாலைத் தயாரித்து விற்பதிலும், தேவையான பயிற்சியை, ஆதிவாசிகளுக்கு அளிக்க மஹாராஷ்டிரா அரசாங்கம் முன்வந்துள்ளது. "ஆதிவாசிகள் பண்ணை" துவக்கப்பட்டு, அப்பண்ணைக்கு வேண்டிய நிலம் நீர்ப்பாசனம், பண்ணைக்குரிய வீடு, தொழுவம், தொழில் நுட்ப உதவி, கால் நடைகளுக்குரிய மருத்துவம் போன்ற வசதிகள் அதற்கு அளிக்கப்படும். எனவே அவர்களே நிலங்களை பயிரிட்டு, கால் நடைகளை கவனித்து, பாலைத் தயாரித்து, கூட்டுறவு மூலம் பாலை விற்பனை செய்து, தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளவேண்டும், பால் பண்ணைக்கு அருகில் பாயும் விரோலி நதிக்கு குறுக்கே ஒரு அணையைக் கட்டி, பண்ணைக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரப்படும்.

---

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 25 முதல் 32 வரை.

**Articles reproduced from "Panchayati Raj" on pages: 25 to 32.**

கிராமதனம் பகுதி 2 GRAMATHANAM PART 2

# பஞ்சாயத்து அரசிதழ்

## PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.)

———— o ————

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் - பஞ்சாயத்து வளர்ச்சி - மீனளத் திட்டங்களை நிறைவேற்றுதல் - உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

### Fourth Five Year Plan - Panchayat Development - Implementation of Fishery Schemes Instructions - Issued.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பஞ்சாயத்து வளர்ச்சிக்கான திட்டமிட்ட நிதி ஒதுக்கீட்டில் (Third Five Year Plan Panchayat Development Schematic Budget) விவசாய மானியத்தைக்கொண்டு, விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீனளத் திட்டங்களின் பேரில் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செலவு செய்வதற்கு வேண்டிய உத்தரவுகள், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2460-ல் பிறப்பிக்கப்பட்டன. விவசாய மானியத்தின் கீழ் வரும் திட்டங்களெல்லாம், எதிர்பார்த்த அளவு அவ்வளவு வெற்றிகரமாக நிறைவேற்றப்படவில்லை என்பது கடந்த சில ஆண்டுகளின் அனுபவமாகும். எனவே திட்டங்களெல்லாம் தீவிரமாக செயல்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீனளம் ஆகியவற்றில் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் நோக்கத்தில், உடனடியாக தேவைப்படும் திட்டங்கள், மற்றும் வெற்றிகரமாக செயல்படுத்தக்கூடும் திட்டங்களைத் தீட்டுமாறு, மன்றங்களுக்கு, அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்தது— கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 158605-ஐப் பார்க்கவும். அவ்வாறே மீனளம் முதற்கொண்டு பல்வேறு திட்டங்களையும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தயாரித்தன. பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தயாரித்த திட்டங்களெல்லாம் மீனளத்துறை நெறியாளர், கிராம வளர்ச்சி நெறியாளரால் பரிசீலனை செய்யப்பட்டது. மீனள வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலைகளையும், தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்களைக் கருத்தில் கொண்டும், வட்டாரங்கள் எல்லாம் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்களுடன், அவற்றிற்குரிய நிதி ஒதுக்கீடு பற்றிய தகவலும் சேர்க்கப்பட்டு, அவை இவ்வாணையின் பிற்சேர்க்கை I-ல் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இனவாரியாக பிரிக்கப்பட்டுள்ள வட்டாரங்களின் பட்டியலும் இவ்வாணையின் பிற்சேர்க்கை III-ல் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தப் பாகுபாடுகளின் படியே, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் திட்டத்தை நிறைவேற்ற, உத்தரவுகள் பிறப்பிக்குமாறு, மீனளத்துறை நெறியாளர், அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார். மீனளத்துறை நெறியாளரின் கோரிக்கைகளின் பேரில், கிராம வளர்ச்சி நெறியாளரும் சிபாரிசுகள் செய்துள்ளார்.

(2) மீனளத்துறை நெறியாளர், கிராம வளர்ச்சி நெறியாளர், ஆகியோரின் கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப, இவ்வாணையின் பிற்சேர்க்கை I-ல் விவரிக்கப்பட்டுள்ள திட்டங்களெல்லாம், இவ்வாணையின் பிற்சேர்க்கை III-ல் கொடுக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்களின் பாகுபாடுகளின்படி 1966—67 முதல், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களால் நிறைவேற்றப்பட வேண்டுமென்று, அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பிக்கிறது.

(3) இவ்வாணையின் பிற்சேர்க்கை I-ல் விவரிக்கப்பட்டுள்ள திட்டங்களெல்லாம். விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீனளம் அடங்கிய விவசாய மானியத் திட்டங்களில் ஒரு பகுதியே என்பதையும், அவற்றிற்காக 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் முதல் துவங்கும் ஐந்தாண்டு காலத்திற்கு, ஒவ்வொரு யூனியனுக்கும், ரூபாய் இரண்டு லட்சத்தை மானியமாக அரசாங்கம் அளிக்கும் என்பதையும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இத்தொகைக்கு ஈடாக ரூ. 50,000-ஐ நன்கொடை மூலம் பஞ்சாயத்து யூனியன்கள் ஈடுசெய்தல் வேண்டும். அப்போது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீனளத்திட்டங்களை நிறைவேற்ற, மொத்தமாக ரூ. 2,50,000 கிடைக்கும். விவசாயம், விலங்கின வளர்ச்சி ஆகிய துறைகளில் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களின் பட்டியலும், நான்காவது திட்ட காலத்தில்,

பஞ்சாயத்து யூனியன் உற்பத்தித் திட்டத்தைத் தொகுப்பதில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை விதிகளும் ஏற்கனவேயே அனுப்பப்பட்டு விட்டன. (அவற்றை சென்ற இதழ் "கிராம நலம்" பகுதி II-ல் காண்க.) இதற்கிடையில், இவ்வாணையின் பிற்சேர்க்கை II-ல் கொடுக்கப்பட்டுள்ள விதி முறைகளை அனுசரித்து, அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களை, இவற்றிற்குரிய வரவு-செலவு நிதி ஏற்பாட்டுக்கும், ஒவ்வொரு திட்டத்திற்கும் உச்ச வரம்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கு உட்பட்டு திட்டங்களை நிறைவேற்றிய பின், நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு செலவுத் தொகையைப் பெற்றுக்கொள்ளவும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

4. 1966—67-ம் ஆண்டில், விவசாய மானியத்தின் கீழ், மீனளத்திட்டத்திற்காக, மாநில வரவு செலவு நிதித் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| ஒவ்வொரு யூனியனுக்கும் | அரசாங்க மானியம் |
|---|---|
| | ரூ |
| முதல் நிலை | 1,500 |
| இரண்டாம் நிலை | 2,000 |
| மூன்றும் நிலை | 1,100 |
| நான்காம் நிலை | இல்லை. |

5. இந்தத் தொகையைப் பயனுள்ள முறையில், 1966–67-ம் ஆண்டில் செலவழிப்பதற்காக, "மீன் வளர்ப்பதற்குரிய குளங்களை தூர் வாரி புதுப்பித்தல்", "மீன் வளர்ப்புப் பண்ணைகளைக் காத்து, நிர்வகித்தல்" "மீன் குஞ்சுகளை வழங்குதல், விநியோகித்தல்" ஆகிய திட்டங்களை மட்டுமே மேற்கொண்டு, செயல்படுத்த வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு யோசனை கூறப்படுகிறது. "மீன் மார்க்கெட்டுகள் அபிவிருத்தி" திட்டத்தை வருவாய் தரும் ஒரு திட்டமாக எடுத்துக்கொள்ளக்கூடாதா என்பது பற்றியும் பரிசீலனை செய்யுமாறு மன்றங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

6. மீனளத்தின் கீழ் வரும் பல்வேறு திட்டங்களின் பேரில் ஏற்படும் செலவினங்களெல்லாம்,

"31. விவசாயம்-மீனளம் - ஓ. வளர்ச்சித்திட்டங்கள்-(ii) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வேலைத் திட்டங்கள்-xv பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியங்கள்."

என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும். எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு முன்னேயே தனிப்பட்டவர்கள், மற்றும் தல நிர்வாகங்களிடமிருந்து வர வேண்டிய நன்கொடைத் தொகைகளை வசூலித்து விட வேண்டும். தொகையை திரும்ப அளிக்க அனுமதியளிக்கும்போது, ஒவ்வொரு திட்டத்திலும் அரசாங்க மானியத்தின் நிதி உச்சவரம்பு மேற்பட்டு விடாமலிருப்பதை, வருவாய்க்கோட்ட அதிகாரிகள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

7. மீனளத் திட்டங்கள் சம்பந்தப்பட்டவற்றில் கணக்குகளை நிர்வகிப்பது பற்றிய விதிமுறைகளையும், திட்டங்களை நிறைவேற்றுவதில் பின் பற்ற வேண்டிய வழிமுறைகளையும், மீனளத்துறை நெறியாளருடன் கலந்தாலோசித்து, தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்குமாறு, கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

## பிற்சேர்க்கை I

**பஞ்சாயத்து யூனியன் மீனள வளர்ச்சித் திட்டங்கள்—ஒவ்வொரு வட்டாரத்திற்கும், திட்ட காலத்தில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்.**

அ. இன்றியமையாத் திட்டங்கள் .. இல்லை.

ஆ. விருப்பத் திட்டங்கள்—

| வரிசை எண்ணும் வேலைத் திட்டத்தின் பெயரும். | | அரசாங்க மானியம் (வட்டார பாகுபாடுகளுடன்) | செலவின உச்ச வரம்பு. (அரசாங்க மானியம், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்களின் நன்கொடை—பொருத்தத்திற்கு ஏற்றவாறு.) | குறிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. | |
| 1. தனிப்பட்டவர்களுக்கு நைலான், தெப்பங்கள் போன்றவற்றை வழங்குதல். | I | 15,000 | 15,000 | அடக்க விலையில் 75 சதவிகித குறைந்த விலையில் வழங்குவதற்காக. |
| | II | 1,750 | 1,750 | ,, |
| | III | 500 | 500 | ,, |
| | IV | இல்லை | இல்லை | ,, |
| 2. மீன் மார்க்கெட்டுகள் அபிவிருத்தி. | I | 6,500 | 13,000 | |
| | II | 6,500 | 13,000 | |
| | III | 2,500 | 5,000 | |
| | IV | இல்லை | இல்லை | |

| வரிசை எண்ணும் வேலைத் திட்டத்தின் பெயரும். | அரசாங்க மானியம் (வட்டார பாகுபாடுகளுடன்). | | செலவின் உச்ச வரம்பு: (அரசாங்க மானியம், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்களின் நன்கொடை—பொருத்தத்திற்கு ஏற்றவாறு). | குறிப்பு. |
|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 |
| | | ரூ. | ரூ | |
| 3. மீன் வளர்ப்பு பண்ணைக் குளங்களை தூர்வாரிப் புதுப்பித்தல். | I | 5,000 | 7,500 | |
| | II | 10,000 | 15,000 | |
| | III | 5,000 | 7,500 | |
| | IV | இல்லை. | இல்லை. | |
| 4. மீன் வளர்ப்பு பண்ணைகளை நிறுவுதல். | I | 4,000 | 6,000 | |
| | II | 8,000 | 12,000 | |
| | III | 4,000 | 6,000 | |
| | IV | இல்லை. | இல்லை. | |
| 5. மீன் வளர்ப்புப் பண்ணைகளை காத்து நிர்வகித்தல். | I | 1,500 | 2,250 | |
| | II | 2,500 | 3,750 | |
| | III | 1,500 | 2,250 | |
| | IV | இல்லை. | இல்லை. | |
| 6. மீன்குஞ்சுகளை அளித்தல், வழங்குதல். | I | 1,000 | 1,000 | அடக்க விலையில் 50 சதவிகிதத்தில் வழங்குதல். |
| | II | 1,500 | 1,500 | |
| | III | 1,000 | 1,000 | |
| | IV | 100 | 100 | |

கூடுதல் (எல்லா திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால்)
ஒவ்வொரு வட்டாரத்திற்கும்

| வட்டார நிலை. (1) | அரசாங்க மானியம். (2) | கூடுதல். (3) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| I. கரையோர வட்டாரங்கள். | 33,000 | 44,750 |
| II. மீன் வளர்ப்புக்கு அதிக வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள். | 30,250 | 47,000 |
| III. மீன் வளர்ப்புக்கு குறுகிய வாய்ப்புள்ள, உள்நாட்டு வட்டாரங்கள். | 14,500 | 22,250 |
| IV. மீன் வளர்ப்புக்கு மிகக் குறைந்த வாய்ப்புள்ள வட்டாரங்கள். | 100 | 100 |

## பிற்சேர்க்கை II

### மீனளத் திட்டத்திற்கு விளக்கக் குறிப்புகள்

**இனம் I**

**தனிப்பட்டோருக்கு நைலான், தெப்பங்கள் போன்றவற்றை வழங்குதல் :** அடக்க விலையில் 25 சதவிகிதத்திற்கு மட்டுமே அரசாங்க மானியம் கிடைக்கும். எஞ்சிய 75 சதவிகிதத்தை பயனடைவோர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். நைலான் வழங்குவதற்கான எந்த ஒரு சிறப்புத் திட்டமும் அமுலில் இல்லாத கிராமங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**இனம் II**

**மீன் மார்க்கெட்டுகள் அபிவிருத்தி :** திட்டச் செலவில் 50 சதவிகிதத்திற்கு மட்டுமே அரசாங்க மானியம் கிடைக்கும். எஞ்சிய 50 சதவிகிதத்தை பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். மீன்மார்க்கெட் அமைப்புப்

பற்றிய வரைப்படமானது, மீனளத்துறை உதவி நெறியாளரால் அங்கீகரிக்கப்படவேண்டும். இரண்டு வெவ்வேறு பஞ்சாயத்துக்களில், குறைந்தது இரண்டு மீன் மார்க்கட்டுகளாவது, இந்த தொகையைப் பயன்படுத்தி கட்டவேண்டுமென்று, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு யோசனை கூறப்படுகிறது.

**இனம் III**

**மீன் வளர்ப்பு குளங்களை தூர்வாரி புதுப்பித்தல் :** செலவில் 2/3-க்குத்தான் அரசாங்க மானியம் உண்டு. குறைந்த செலவில் அதிகபடியாக குளங்களை புதுப்பிக்க ஆவன செய்யவேண்டும். குளங்களை தேர்ந்தெடுத்தல் அவற்றின் அபிவிருத்தி பற்றிய தன்மை ஆகியவற்றைப் பற்றி, மீனளத்துறை உதவி நெறியாளரின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**இனம் IV**

**மீன்பண்ணைகளை நிர்மாணித்தல் :** செலவில் 2/3-க்குத்தான் அரசாங்க மானியம் உண்டு. செலவில் எஞ்சிய 1/3 பாகத்தை பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**இனம் V**

**மீன் பண்ணைகளை காத்து, நிர்வகித்தல் :** செலவில் 2/3-க்குத்தான் அரசாங்க மானியம் உண்டு. செலவில் எஞ்சிய 1/3 பாகத்தை பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். மீன் வளர்ப்புக் குட்டைகளை சாதாரணமான முறையில் செம்மைபடுத்தல், உரமிடுதல், உணவளிக்கும் கருவிகள், போக்குவரத்து போன்றவை இவ்வினத்தில் அடங்குபவை. ஒரு மீன் வளர்ப்புப் பண்ணைக்கு, ஆண்டுச் செலவு ரூ. 125-க்கு மேல் ஆகக் கூடாது.

**இனம் VI**

**மீன் குஞ்சுகள் அளித்தல், வினியோகித்தல் :** செலவில் 50 சதவீதத்திற்கு அரசாங்க மானியம் உண்டு. எஞ்சியதை, நன்கொடை மூலம் சரிக்கட்டிக் கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்களுக்கும், தனிப்பட்ட முறையில் மீன் வளர்ப்பவர்களுக்கும் மீன் குஞ்சுகளை வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

## பிற்சேர்க்கை III

**பஞ்சாயத்துக்களிலுள்ள மீனள வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு, அதன் அடிப்படையில் நான்காவது திட்டத்தில் பாகுபாடு செய்யப்பட்டுள்ள வட்டாரங்களின் பட்டியல்**

### செங்கல்பட்டு மாவட்டம்

| கரையோர வட்டாரங்கள். நிலை I (1) | மீன் வளர்ப்புக்கு அதிக வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள். நிலை II (2) | மீன் வளர்ப்புக்கு குறுகிய வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள். நிலை III (3) | மீன் வளர்ப்புக்கு மிகக் குறைந்த வாய்ப்புள்ள பிற வட்டாரங்கள். நிலை IV (4) |
|---|---|---|---|
| மீஞ்சூர், கும்மிடிபூண்டி, மாதவரம், செயிண்ட் தாமஸ் மவுண்ட், திருப்போரூர், திருக்கழுக்குன்றம், லத்தூர், சித்தாமூர். | ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, குன்னத்தூர், காட்டாங்கொளத்தூர், அச்சரப்பாக்கம், பூண்டி, காஞ்சீபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம். | ஊத்துக்கோட்டை, வில்லிவாக்கம், சோழவரம், திருவள்ளூர். | பள்ளிப்பட்டு, திருத்தணி, இராமகிருஷ்ணராஜு பேட்டை, திருவாலங்காடு, வாலாஜாபாத், கடம்பத்தூர். |

### வட ஆர்க்காடு மாவட்டம்

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| இல்லை. | போளூர், வாலாஜா, கலசப்பாக்கம், காவேரிப்பாக்கம், திருப்பத்தூர், வேம்பாக்கம் பெரணமல்லூர், செய்யாறு, ஆரணி, திருவண்ணாமலை, திமிரி, நெமிலி, காட்பாடி. | சோளிங்கபுரம், செங்கம், துரிஞ்சாபுரம், கீழ்ப்பெண்ணாத்தூர், ஆர்க்காடு, அரக்கோணம், மாதனூர், கணியம்பாடி, பேரணாம்பட்டு, கே. வி. குப்பம்: கந்திலி, வந்தவாசி, அனக்காவூர், கஸ்தம்பாடி, புதுப்பாளையம், தெள்ளாறு, தண்டராம்பட்டு, குடியாத்தம், நாட்டறம்பள்ளி, அணைக்கட்டு, ஆலங்காயம், வேலூர், சேத்துப்பட்டு. | இல்லை. |

| கரையோர வட்டாரங்கள். நிலை I (1) | மீன் வளர்ப்புக்கு அதிக வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள். நிலை II (2) | மீன் வளர்ப்புக்கு குறுகிய வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள். நிலை III (3) | மீன் வளர்ப்புக்கு மிகக் குறைந்த வாய்ப்புள்ள பிற வட்டாரங்கள். நிலை IV (4) |
|---|---|---|---|
| **தென் ஆர்க்காடு மாவட்டம்** | | | |
| மரக்காணம், வானூர், கடலூர், குறிஞ்சிப்பாடி, பரங்கிப்பேட்டை. | கீரப்பாளையம், மேல்புவனகிரி, கள்ளக்குறிச்சி, தியாகதுர்க்கம், திருநாவலூர், மங்களூர், திருவெண்ணெய் நல்லூர், காணை, முகையூர், திருக்கோயிலூர், விருத்தாசலம், வல்லம், நெல்லிக்குப்பம், குமராட்சி, காட்டுமன்னார் கோயில், மயிலம். | சின்னசேலம், உளுந்தூர் பேட்டை, நல்லூர், மேல்மலையனூர், செஞ்சி, ஒலக்கூர், கோலியனூர், விக்கிரவாண்டி, கண்டமங்கலம், சங்கராபுரம், ரிஷிவந்தியம், கம்மாபுரம். | பண்ருட்டி. |
| **நீலகிரி மாவட்டம்** | | | |
| | | | உதகமண்டலம், குன்னூர், கூடலூர், கோத்தகிரி. |
| **சேலம் மாவட்டம்** | | | |
| இல்லை. | நங்கவல்லி, கொளத்தூர், மேச்சேரி, பரமத்தி, சங்ககிரி, இடைப்பாடி. | ஆத்தூர். மோகனூர், திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம், ஏர்க்காடு, பனைமரத்துப்பட்டி, கடையாம்பட்டி, வாழப்பாடி, வீரபாண்டி, நாமக்கல், தாரமங்கலம், கங்கவல்லி, தலைவாசல். | மல்லசமுத்திரம், சேலம், எருமைப்பட்டி, புதுச்சத்திரம், பெத்தநாயக்கன் பாளையம், சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, கபிலமலை, ஓமலூர், மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், இலச்சிபாளையம், கொல்லிமலை, காரிப்பட்டி, வெண்ணந்தூர், இராசிபுரம். |
| **கோயம்புத்தூர் மாவட்டம்** | | | |
| இல்லை. | கோபிசெட்டிபாளையம், துக்கநாயக்கன் பாளையம், ஈரோடு, தொண்டாமுத்தூர், மடாத்துகுளம், அம்மாபேட்டை, பவானி, தாளவாடி. | பெரியநாயக்கன் பாளையம். சத்தியமங்கலம், உடுமலைப் பேட்டை, அன்னூர், கொடுமுடி, பொள்ளாச்சி, மொடக்குறிச்சி, பவானி சாகர், பெருந்துறை, சுல்தான் பேட்டை, பல்லடம், கிணத்துக்கடவு, சூலூர், பொங்கலூர், ஆண்டியூர், காரமடை, மதுக்கரை, ஆனைமலை, ஊத்துக்குளி, குடிமங்கலம், நம்பியூர், சென்னிமலை, பேரூர். | தாராபுரம். மூலனூர், குண்டடம், வெள்ளக்கோயில், காங்கயம், சர்க்கார் சாமக்குளம், அவிநாசி, திருப்பூர். |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்** | | | |
| இல்லை. | குளித்தலை, துறையூர், முசிறி, தொட்டியம், லால்குடி, பெரம்பலூர். ஆண்டிமடம், திருமானூர், மணிகண்டம், வையம்பாடி, திருவரங்குளம், அரிமளம், டி. பாலூர், புல்லம்பாடி, மணச்சநல்லூர், திருவெறும்பூர், அந்தநல்லூர், கிருஷ்ணராஜபுரம், மருங்காபுரி, திருமயம், மணப்பாறை, அன்னவாசல். | தாத்தையங்கார் பேட்டை, உப்பிலி பாளையம், வேப்பந்தட்டை, அரியலூர், கரம்பக்குடி, கீரனூர், கடவூர், ஜயங்கொண்டம், செந்துறை, கரூர், விராலிமலை, பொன்னமராவதி. | கே. பரமத்தி, அரவக்குறிச்சி, தாந்தோணி, ஆலத்தூர், வேப்பூர். |

## இராமநாதபுரம் மாவட்டம்

| கரையோர வட்டாரங்கள். நிலை I (1) | மீன் வளர்ப்புக்கு அதிக வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள். நிலை II (2) | மீன் வளர்ப்புக்கு குறுகிய வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள். நிலை III (3) | மீன் வளர்ப்புக்கு மிகக் குறைந்த வாய்ப்புள்ள பிற வட்டாரங்கள். நிலை IV (4) |
|---|---|---|---|
| **இராமநாதபுரம் மாவட்டம்** | | | |
| திருவாடானை, ஆர். எஸ். மங்கலம், இராமநாதபுரம், மண்டபம், திருப்புல்லாணி, கடலாடி. | சிவகங்கை, இராஜபாளையம், காளையார்கோயில், தேவகோட்டை, பரமக்குடி, மானாமதுரை, சாக்கோட்டை, வத்ராயிருப்பு, கண்ணங்குடி, திருப்புவனம், திருப்பத்தூர். | ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, கமுதி, விருதுநகர், முதுகுளத்தூர், போகலூர், அருப்புக்கோட்டை, வெம்பக்கோட்டை, திருச்சுழி. | கல்லல், இளையான்குடி, சாத்தூர், கரியாப்பட்டி, நரிக்குடி, சிங்கம்புணரி. |
| **தர்மபுரி மாவட்டம்** | | | |
| இல்லை. | ஓசூர், கிருஷ்ணகிரி, பாலக்கோடு, காவேரிப்பட்டிணம், தளி, நல்லம்பள்ளி. | மொரப்பூர். | வேப்பனப்பள்ளி, ஊத்தங்கரை, பெண்ணாகரம். கெலமங்கலம், பாப்பிரெட்டிபட்டி, தர்மபுரி, சூளகிரி, அரூர், பர்கூர். |
| **மதுரை மாவட்டம்** | | | |
| இல்லை. | மதுரை கிழக்கு, மேலூர் வடக்கு, நத்தம், மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், டி. கல்லுப்பட்டி, பெரியகுளம், உசிலம்பட்டி, போடிநாயக்கனூர், அலங்காநல்லூர், வாடிப்பட்டி, நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, ஆத்தூர், சின்னமனூர், பழனி, கொடைக்கானல், உத்தமபாளையம், மேலூர் தெற்கு, திருமங்கலம். | கள்ளிக்குடி, சேடப்பட்டி, செல்லம்பட்டி, ஆண்டிப்பட்டி, கம்பம், திண்டுக்கல், ரெட்டியார்ச் சத்திரம், வேடசந்தூர், தொப்பம்பட்டி, வட மதுரை, பாளையம், தேனி. | ஒட்டன் சத்திரம், சாணார்ப்பட்டி. |
| **தஞ்சாவூர் மாவட்டம்** | | | |
| கொள்ளிடம், சீர்காழி, நாகப்பட்டிணம், செம்பனார் கோயில், தலைஞாயர், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், அறந்தாங்கி, ஆவுடையார் கோயில். | பாபநாசம், அம்மா பேட்டை, வலங்கிமான், கும்பகோணம், திருப்பனந்தாள், திருவிடைமருதூர். குற்றாலம், மாயூரம், கொடவாசல், கொரடாச்சேரி, கீவளூர், கோட்டூர், பூதலூர், திருவையாறு, ஒரத்தநாடு, தஞ்சாவூர், மதுக்கூர், பேராவூரணி, மன்னார்குடி, திருவாரூர், திருமருகல், நன்னிலம், நீடாமங்கலம், திருவோணம். | | |
| **திருநெல்வேலி மாவட்டம்** | | | |
| விளாத்திக்குளம், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, ஆழ்வார் திருநகரி, ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், உடன்குடி, சாத்தான்குளம், இராதாபுரம், வள்ளியூர். | கருங்குளம், புதூர், தென்காசி, கீளப்பாவூர், சேரன்மாதேவி, கடயம், நாங்குனேரி, களக்காடு, அம்பாசமுத்திரம், கடையநல்லூர், செங்கோட்டை. | வாசுதேவநல்லூர், ஆலங்குளம், பாளையங்கோட்டை, கோயில்பட்டி, பாப்பாக்குடி, சங்கரன் கோயில், மேலநீலிதநல்லூர், மானூர், கயத்தாறு. | குருவிகுளம். |
| **கன்னியாகுமரி மாவட்டம்** | | | |
| அகஸ்தீஸ்வரம், இராஜக்கமங்கலம், கிள்ளியூர், முஞ்சிறை, குருந்தங்கோடு. | தோவாளை, திருவட்டார், மேல்புரம், தக்கலை. | | |

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2115)

## தமிழ் வளர்ச்சி— தமிழில் பயனுள்ள நூல்களை வெளியிடுவதற்கு நிதி யுதவி அளித்தல்— விதிகள்—வெளியிடப்படுகின்றன.

## Tamil Development— Grant of Financial assistance for publication of valuable books in Tamil— Rules—Issued.

தமிழில் பயனுள்ள நூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவி அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்தது—பொதுத் (தமிழ் வளர்ச்சி—I) துறையின் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1985. அவ்வாறு நிதி உதவி அளிக்கவேண்டியவற்றைப் பரிசீலனை செய்து, அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்வதற்காக வல்லுநர்கள் அடங்கிய ஒரு நிலைக்குழு ஏற்படுத்தப்படவேண்டும் என்று, பொதுத் (தமிழ் வளர்ச்சி—I) துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2460-ல் அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்தது. தமிழில் பயனுள்ள நூல்களை வெளியிடுவதற்கு, நிதியுதவி அளிப்பதற்காக விதிகளை இயற்றுமாறு மேற்கண்ட குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறே அக் குழுவால் இயற்றப்பட்ட விதிகளை அரசாங்கம் பரிசீலனை செய்தது. அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அவ் விதிகளின் நகல் ஒன்று, இவ் வாணையின் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது.

* * *

### பிற்சேர்க்கை

### தமிழில் பயனுள்ள நூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவி அளிப்பதற்கான விதிகள்.

விதி 1—

தமிழில் நிலைத்த பயனுள்ள நூல்களை வெளியிடுவதற்கு தனிப்பட்ட நூல் ஆசிரியர்களுக்கு(Author) ஊக்கமளிப்பதற்காக, அரசாங்கம் நிதி உதவி அளிக்கக் கூடும்.

விதி 2—

இதுவரை போதுமான அளவிலும், திருப்திகரமான முறையிலும் எழுதப்படாதிருக்கும் பொருள்கள் பற்றியனவாக இந்நூல்களெல்லாம் இருத்தல் வேண்டும்.

விதி 3—

இத் திட்டத்தின் கீழ், அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக, தமிழில் நூல்களை தேர்ந்தெடுத்தல், நல்ல நிலைத்த பயனுள்ள நூல்களைப் பாகுபாடு செய்தல் ஆகிய விஷயத்தில், வல்லுநர்கள் குழுவானது அரசாங்கத்திற்குப் பொதுவான கருத்துரை வழங்கும்.

விதி 4—

கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ள நூல்களுக்கு நிதியுதவி கிடைக்கும்.

(1) பழம்பொருள் ஆராய்ச்சி பற்றிய நூல்கள்.

(2) கல்வெட்டுகளைப்பற்றிய நூல்கள்.

(3) மொழி, இலக்கியம் பற்றிய நூல்கள்.

(4) திருவிழாக்கள் முதற்கொண்டு தமிழர்களின் பழக்க வழக்கங்கள் பற்றிய நூல்கள்.

(5) தமிழ்நாட்டின் நுண்கலைகள் பற்றிய நூல்கள்—ஆராய்ச்சியையும் சேர்த்து.

(6) நவீன விஞ்ஞானம் பற்றிய நூல்கள்—பாடப் புத்தகங்கள் நீங்கலாக.

(7) மேற் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களில், இதுவரை பிரசுரிக்கப்படாத இலக்கியப் படைப்புகள்.

(8) அரிதான பயனுள்ள இலக்கியங்களைத் திரும்ப பிரசுரித்தல் ; மற்றும்

(9) தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பெயர்கள் பற்றிய அறிவுக் களஞ்சியம்.

விதி 5—

இத் திட்டத்தின்கீழ் கதைப் புத்தகங்கள், நாவல்கள், நாடகங்கள், மத சம்பந்தப்பட்ட புத்தகங்களுக்கு நிதியுதவி கிடையாது.

விதி 6—

பயனுள்ள புத்தகங்களை வெளியிடுவதற்கு, நிதியுதவி கோரி, பிரசுரகர்த்தர்களிடமிருந்து எந்த விண்ணப்பங்களும் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விதி 7—

இத் திட்டத்தின்படி நிதியுதவி கோரும் நூல் ஆசிரியர்கள் இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில்,அவர்களின் விண்ணப்பங்களும் கையெழுத்து ஏடுகளையும் சேர்த்து, அவற்றையெல்லாம் தமிழ் வளர்ச்சித் துறை நெறியாளர், சென்னை–9 என்ற விலாசத்திற்கு முன்னதாகவே அனுப்பிவைக்க வேண்டும்.

விதி 8—

ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவியானது கீழ்க்கண்டவாறு இரு இனங்களாக அமையும்.

**இனம் 1 :** கையெழுத்து ஏடுகள் ஏற்றுக்கொள்ளப் படின், அவற்றிற்குரிய நூல் ஆசிரியர்களுக்கு தகுந்தவாறு ஊதியம் அளிக்கப்பட்ட பிறகு, அவை அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ள தமிழ் வெளியீட்டுக் கழகம் (Bureau of Tamil Publications) மூலமாக பிரசுரிக்கப்படும்.

**இனம் 2 :** ஏற்றுக்கொள்ளப்பட்ட கையெழுத்த ஏடுகளை அவர்களின் சொந்த ஏற்பாட்டிலேயே பிரசுரம் செய்துகொள்வதற்கு, நூல் ஆசிரியர்களுக்கு மானியம் அளிக்கப்படும்.

**விதி 9—**

மேற்கண்ட விதி 8-ல், இனம் 1-ல் அடங்கும் கையெழுத்து ஏடுகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவி பின்வருமாறு :—

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கையெழுத்து ஏடுகளின் தகுதி நிர்ணயிக்கப்பட்டு, அவை மூன்று பிரிவில் வைக்கப்பட்டு, கீழ்க்கண்ட அடிப்படையில் நூல் ஆசிரியர் களுக்கு மானியம் வழங்கப்படும்.

பிரிவு (அ)—ரூபாய் 10—நிலையான "டெமி" அளவில் —அதாவது $17\frac{1}{2}'' \times 22\frac{1}{2}''$—அச்சடிக்கப்பட்ட ஒரு பக்கத்திற்கு.

பிரிவு (ஆ)—ரூபாய் 8—நிலையான "டெமி" அளவில் அச்சடிக்கப்பட்ட ஒரு பக்கத்திற்கு.

பிரிவு (இ)—ரூபாய் 6—நிலையான "டெமி" அளவில் அச்சடிக்கப்பட்ட ஒரு பக்கத்திற்கு.

(ஆ) மதிப்பீட்டில் 75 சத வீதம் முன்னதாகவே அளிக்கப்படும்; எஞ்சிய 25சத வீதம், புத்தகம் பிரசுரிக்கப் பட்டவுடனே அளிக்கப்படும்.

(இ) பதிப்புரிமை அரசாங்கத்தைச் சார்ந்தது.

**விதி 10—**

மேற்கண்ட விதி 8, இனம் 2-ல் அடங்கும் கையெழுத்து ஏடுகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவி பின்வருமாறு :—

(அ) கீழ்க்கண்ட துணை-விதி(ii)-ல் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பிற்கு உட்பட்டு, நூல்களைப் பிரசுரிக்க ஆகும் செலவில், 50 சத வீதத்திற்கு மட்டுமே, உச்ச வரம்பாக மானியம் கிடைக்கும்.

(ஆ) ஒவ்வொரு நூல் விஷயத்திலும் அதிகஅளவாக அளிக்கப்படக்கூடிய மானியம் ரூ. 5,000 ஆக இருக்கும். சில விலக்கான சந்தர்ப்பங்களில், மேற்குறிப்பிடப் பட்டுள்ள தொகை, மற்றும் சத வீதத்திற்கு மேலாகவும், தகுந்தபடி மானியம் அளிப்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யக்கூடும்.

(இ) அச்சடிக்கப்பட வேண்டிய நூல்களின் (அதாவது ஒரு நூலின் பிரதிகளை) பிரதி பொதுவாக 1,000 ஆகும். சில விலக்கான சந்தர்ப்பங்களில், பிரதிகளின் எண்ணிக்கையை அரசாங்கம் உயர்த்தக்கூடும்.

(ஈ) இந்த விதியின்படி மானியத்தைப் பெறும் ஒருவர், அவர் அச்சடிக்கவிருக்கும் புத்தகத்தின் எண்ணிக்கையில், பத்தில் ஒரு பங்கை அரசாங்கத்திற்கு அளித்துவிடவேண்டும்.

(உ) பதிப்புரிமை ஆசிரியரைச் சார்ந்ததே.

(ஊ)கையெழுத்து ஏடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், அக் கையெழுத்து ஏடுகள் அச்சடிக்கப்படுவதற்காக அச்சகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்று அச்சகத்திடமிருந்து சான்றிதழைப்பெற்று, அதை அரசாங்கத்திடம் கொடுத்த பின்பு, 50 சத வீத மானியம் அளிக்கப்படும்; எஞ்சிய ஐம்பது சத வீத மானியமானது, அச்சடிக்கப்பட்ட புத்தகத்தின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கை அரசாங்கத்திடம் கொடுத்த பின்பு, அளிக்கப்படும்.

**விதி 11—**

இத் திட்டத்தை செயல்படுத்துவது சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் அரசாங்கத்தின் தீர்மானமே முடிவானதாக இருக்கும்; அதை எந்த முறையிலும், எவ்வகையிலும் நீதி மன்றங்களிலாவது, வேறு வகையிலாவது வாதத்திற்குரியது அல்ல.

## இணைப்பு

**தமிழ் வளர்ச்சி நெறியாளர் அலுவலகம், சென்னை-9.**

தமிழில் பயனுள்ள நூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவி கோரும் விண்ணப்பம்: பொதுத் (தமிழ் வளர்ச்சி) துறையின் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1985, மற்றும் பொதுத் (தமிழ் வளர்ச்சி) துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1617 ஆகியவற்றைப் பார்க்கவும்.)

1. நூல் ஆசிரியரின் பெயரும், விலாசமும்;
2. பிரசுரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புத்தகத்தின் பெயரும், பொருளும்.
3. அச்சடிக்க உத்தேசிக்கப் பட்டுள்ள நகல்களின் எண்ணிக்கை.
4. உற்பத்தி செலவின் மதிப்பீடு.
5. அச்சடிப்பவர்களின் பெயரும் விலாசமும் (இவை தீர்மானிக்கப் பட்டிருந்தால்).
6. பிற வழிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி யுதவி, வாக்களிக்கப் பட்ட அல்லது கிடைக்கக்கூடிய நிதி உதவி பற்றிய தகவல்கள்.
7. அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கும் நிதி யுதவியின் அளவு.
8. இதர குறிப்பிடத் தக்க தகவல்கள்.

விண்ணப்பம் செய்பவரின்
கையெழுத்து,
தேதியுடன்.

## உறுதிமொழி

பொதுத் (தமிழ் வளர்ச்சி) துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1617-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ள இத் திட்டத்தின் விதிகளை—அவ்வப்போது ஏற்படும் திருத்தங்களுக்கு உட்பட்டு—படித்து அறிந்து கொண்டேன் என்று நான் உறுதியளிப்பதுடன், இந்த விண்ணப்பம் சம்பந்தப்பட்டவற்றில் அவ் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என்பதற்கும் நான் உடன்படுகிறேன்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களெல்லாம் எனக்கு தெரிந்த வரையில் உண்மையே என்று நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பம் செய்பவரின்
கையெழுத்து,

தேதியுடன்.

(பொதுத் (தமிழ் வளர்ச்சி—1) துறையின் 3—8—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1617—ன் சுருக்கம்.)

---

## கிராமப் பஞ்சாயத்துக்கள் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துதல்—நடைமுறையில் மாற்றம்

## Panchayats—Village Panchayats—Payment of Electricity charges to the Madras State Electricity Board and Private licencees who supply electric energy—Revised Procedure - Orders issued.

ஒரு பஞ்சாயத்து யூனியனிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களும் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணங்களைக் குறித்து ஒரு மொத்தமான பட்டியலை, தமிழ்நாடு மின் சார போர்டு அதிகாரிகள் அல்லது கும்பகோணம் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன் போன்ற தனிப்பட்ட கம்பெனிகளின் அலுவலர்கள் தயாரித்து, அதை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு அனுப்பவேண்டும் என்பதும், அந்தப் பட்டியலைப் பெற்றவுடனே, அதில் உள்ள தொகையை அளிக்க, தல நிதி வைப்புக் கணக்கு (Local Fund Deposit Account No. I)-லிருந்து, மேற்பார்வை பொறியாளர்/தலைமை கணக்காளர் (Superintending Engineer/Chief Accountant) அல்லது தனிப்பட்ட கம்பெனிகளிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரியின் பெயருக்கு ஒரு 'செக்' (Cheque)கை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் அளிக்கவேண்டும் என்பதும், அதன் பிறகு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களிடமிருந்து, அவர்களின் பஞ்சாயத்துக்கள் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணத்திற்கு, தன்னுடைய பெயரில் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் 'கொடுப்பு ஆணை' (Pay Order)களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும், கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1563, மற்றும் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 114714 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளாகும். (இவ்வுத்தரவுகளின் தமிழாக்கங்களை முறையே "கிராம நலம்" இதழ்கள் ஆகஸ்ட் 1965, பகுதி II-லிலும், அக்டோபர் 1965, பகுதி II-லிலும் காணலாம்.)

(2) ஒரு பஞ்சாயத்து யூனியனிலுள்ள எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களும் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணங்களைப் பொறுத்து, ஒரு முழுமையான பட்டியலைத் தயாரித்து, அதை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு அனுப்புவதற்குப் பதிலாக, ஒவ்வொரு பஞ்சாயத்தும் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணத்திற்குரிய பட்டியலுடன், எல்லாப் பஞ்சாயத்துக்களும் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணங்கள், மற்றும் இதர கட்டணங்கள் போன்றவற்றை காட்டக்கூடிய ஒரு முழுமையான பட்டியலையும் சேர்த்து, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு அனுப்பக்கூடும் என்ற ஒரு வரம்பிற்குட்பட்டு (மேற்கண்ட பத்தி 1-ல் கூறப்பட்டுள்ளவாறு) கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1563-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை, தமிழ்நாடு மின்சார போர்டு ஏற்றுக்கொள்கிறது என்று கிராம வளர்ச்சி நெறியாளர் கூறியுள்ளார். அரசாங்க ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், தலைமை கணக்காளர்கள் அல்லது மேற்பார்வை பொறியாளருக்கு "செக்"குகளை அனுப்புவதற்குப் பதிலாக, மின்சாரக் கட்டணங்கள் பற்றிய கணக்குகளை அளிக்கும் மின்சார வருவாய்ப் பிரிவைச் (Revenue Units) சார்ந்த, துணை தலைமை கணக்காளரின் (Deputy Chief Accountant) பெயருக்கு "செக்"குகள் வழங்கப்படவேண்டும் என்று மின்சார போர்டு கூறியுள்ளது. மின்சார போர்டின் மேற்கண்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கிராம வளர்ச்சி நெறியாளர் சிபாரிசு செய்திருப்பதுடன், வானொலி பராமரிப்பு கட்டணங்களைச் செலுத்துவது போலவே மின்சாரப் பட்டியல்களுக்கு பணம் செலுத்துவதற்கும், ஒவ்வொரு பஞ்சாயத்திடமிருந்து நிலையான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு, அக்கட்டணங்களைச் செலுத்தலாம் என்று கூறியுள்ளார்.

3. மேற்கண்ட கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்து, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1563, மற்றும் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ந் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 114717 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளுக்கு மாற்றங்களாக, கிராமப் பஞ்சாயத்துக்கள் மின்சாரக்

கட்டணங்களைச் செலுத்துவதில், கீழ்க்கண்ட திருத்தப் பட்ட நடைமுறையைப் பின்பற்றப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரின் ஆட்சி வரம்பிலுள்ள பல்வேறு கிராமப் பஞ்சாயத்துக்களும் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணங்களுக்குரிய பட்டியல்களுடன், பஞ்சாயத்துக்கள் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணங்கள், மற்றும் இதர கட்டணங்கள் போன்றவற்றை காட்டக்கூடிய ஒரு பட்டியலையும் சேர்த்து அவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு தமிழ்நாடு மின்சார போர்டைச் சார்ந்த அதிகாரிகள் அனுப்பிவைக்க வேண்டும். ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தின் கணக்கிலும் மாதந்தோறும் அவற்றின் மின்சாரக் கட்டணத் தொகையை பற்றுவைப்பதற்கு ஏற்ற வகையில், தன்னுடைய ஆட்சி வரம்பிலுள்ள ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திடமிருந்தும், நிலையான அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிலையான அதிகாரத்தை ஒரு "கொடுப்பு ஆணை" (Pay Order)யாகக் கொள்ளலாம். அந்த அதிகாரத்தின்பேரில், கருவூலத்திலுள்ள தல நிதி வைப்புக் கணக்கின் பேரில் ஒரு "செக்"கை துணைத் தலைமை கணக்காளர் பெயருக்கு (ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள தலைமை கணக்காளர் அல்லது மேற்பார்வை பொறியாளருக்குப் பதிலாக) பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் அளிக்கவேண்டும்.

(4) தனிப்பட்ட கம்பெனிகள், பஞ்சாயத்துக்களுக்கு மின்சாரம் விநியோகித்ததை யொட்டி அனுப்பும் பட்டியல்களுக்கு பணம் செலுத்துவதிலும்கூட, மேற்கண்ட பத்தி 3—ல் கூறப்பட்ட நடைமுறை பின்பற்றப்படவேண்டும்.

(5) இந்த ஆணையிலுள்ளவற்றை எல்லாக் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்றும் எல்லாப் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், இதில் உள்ள உத்தரவுகள் சரிவரப் பின்பற்றப்படுவதைக் கவனித்துக் கொள்ளும்படி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் (சென்னை, கன்னியாகுமரி நீங்கலாக) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல தல-நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-5ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1514)

---

## விவசாய உற்பத்தித் திட்டங்கள்—விவசாய உற்பத்தி ஒருங்கிணைப்புக் குழு—மீண்டும் அமைக்கப்படுகிறது

## Agriculture—Agricultural Production Programme—Co-ordination Committee for Agricultural Production—Reconstitution—Ordered.

அரசாங்கச் செயலக (Secretariat)த்திலுள்ள உணவு, விவசாயத் துறையானது, உணவுத் துறை, விவசாயத் துறை என்று இரண்டாக பிரிக்கப்பட்டுவிட்டதாலும், அதன் பிறகு ஏற்பட்டுள்ள இதர மாறுதல்கள் காரணமாகவும், 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் தேதியிட்ட உணவு, விவசாயத் துறையின் அரசாங்க ஆணை எண் 425-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை தள்ளி வைக்கும் முறையில், விவசாய உற்பத்தி ஒருங்கிணைப்புக் குழுவானது, பின்கண்டவர்களைக் கொண்டு மீண்டும் அமைக்கப்படுகிறது என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

1. அரசாங்கத் தலைமைச் செயலாளர் (தலைவர்).

2. உணவு உற்பத்தி கமிஷனர் (உறுப்பினர்).

3. அரசாங்கச் செயலாளர், விவசாயத் துறை (உறுப்பினர்).

4. அரசாங்கச் செயலாளர், கிராம நல தல நிர்வாகத் துறை (உறுப்பினர்).

5. அரசாங்கச் செயலாளர், தொழில், தொழிலாளர் நலம், வீட்டு வசதித் துறை (உறுப்பினர்).

6. அரசாங்கச் செயலாளர், கல்வி, பொதுச்சுகாதாரத் துறை (உறுப்பினர்).

7. அரசாங்கச் செயலாளர், பொதுப்பணித் துறை (உறுப்பினர்).

8. அரசாங்கச் செயலாளர், உணவுத் துறை (உறுப்பினர்).

9. விவசாய நெறியாளர், சென்னை (உறுப்பினர்).

10. விலங்கின வளர்ச்சி நெறியாளர் (உறுப்பினர்).

11. தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்), சென்னை (உறுப்பினர்).

12. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர், சென்னை (உறுப்பினர்).

13. கிராம வளர்ச்சி நெறியாளர், சென்னை (உறுப்பினர்).

(2) அரசாங்கச் செயலாளர், விவசாயத் துறை, இக்குழுவின் கூட்டுநர் (Convenor) ஆகவும், துணைச் செயலாளர், (உணவு உற்பத்தி) விவசாயத் துறை, இக்குழுவின் செயலாளராகவும் இருப்பார்கள். இக்குழுவின் கடமைகளாவன.—(1) விவசாய உற்பத்தி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையும், திட்டங்களையும் விவாதித்து, அரசாங்கத்தின் அனுமதியைப் பெறுவதற்காக, திட்ட வட்டமான தீர்மானங்களைச் செய்தல். (2) சம்பந்தப்பட்ட துறைகளினிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை பரிசீலனை செய்து, துறைகளிடையே ஏற்படும் கடிதப் போக்கு வரத்துக்களை நீக்கி, சிபாரிசுகளை செய்தல். இக்குழு பொதுவாக ஆறு மாதங்களுக்கு ஒரு முறை (அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஜூன், டிசம்பர் மாதங்களில்) கூடும்.

(விவசாயத் துறையின் 22—6—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2109-ன் சுருக்கம்.)

## பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடங்கள், வட்டார அலுவலர்கள் குடியிருப்புக்களின் பராமரிப்புச் செலவுகள் பற்றிய விளக்கம்.

## Buildings—Panchayat Union Office buildings and Block staff quarters—Incurring expenditure on the maintenance of these buildings—Instructions issued.

கிராம நல தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3348-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளின்படி, பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடங்கள், மற்றும் அலுவலர்களின் குடியிருப்புக்களெல்லாம் நெடுஞ்சாலை, கிராம வேலைகள் துறையின் பராமரிப்பில் இருப்பது மட்டுமின்றி அத்துறையினராலேயே, இக்கட்டிடங்களெல்லாம் பராமரிக்கப்பட்டுவரும். இக்கட்டிடங்களின் பராமரிப்பை யொட்டி, சில பஞ்சாயத்து யூனியன்கள், அவற்றின் பொது நிதிகளிலிருந்து பணச் செலவு செய்துவருகின்றன என்ற விஷயம் இப்போது அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது ; இவ்வாறு செலவு செய்வது பெரிதும் ஒழுங்கற்றதாகும்.

(2) எனவே பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடங்கள், மற்றும் அலுவலகக் குடியிருப்புக்களைப் பராமரிப்பதற்காக, தங்களின் பொது நிதிகளிலிருந்து எந்தச் செலவையும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செய்யக் கூடாது என்று பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்குமாறு, எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களும் (சென்னை நீங்கலாக) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 20—4—1966 தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 22249)

---

## பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிலுள்ள எழுத்தர்கள், தலைமை எழுத்தர்கள், துறைத் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுதல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Establishment—Clerks and Head Clerks of Panchayats and Panchayat Union Councils—Eligibility for admission to the Departmental Tests—Orders issued.

கிராம வளர்ச்சி நெறியாளர்—

(1) பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து ஊதியம் அளிக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் பணிபுரியும் தலைமை எழுத்தர்கள், எழுத்தர்கள், நகர பஞ்சாயத்துக்கள், நகராட்சி அலுவலகங்களிலுள்ள எழுத்தர்கள் ஆகியோர் பல்வேறு துறைத் தேர்வுகளிலும் ஆஜராகலாமா என்றும்,

(2) பஞ்சாயத்து வளர்ச்சிக் கணக்குத் தேர்வு (Panchayat Development Account Test) மற்றும் பஞ்சாயத்து வளர்ச்சித்துறை அதிகாரிகளுக்குரிய துறைத் தேர்வு (Departmental Test for Officers of the Panchayat Development Department) ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவது, பதவி உயர்விற்கு ஒரு அவசியமான தகுதியென ஆக்கப்படுவது நன்மையளிக்காதா என்றும்—

விளக்கங்கள் கோரியுள்ளார்.

இவை பரிசீலனை செய்யப்பட்டு, கிராம வளர்ச்சி நெறியாளருக்கு கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது :

**மேற்கண்ட பத்தி (1)** : பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள தலைமை எழுத்தர்கள், நகராட்சி அலுவலகங்களிலுள்ள எழுத்தர்கள், முதல் தர நிர்வாகி அதிகாரி ஆகியோரை நேரடியாகத் தேர்வு செய்துக்கொள்ள விதிகள் இடமளிக்கின்றன ; ஆனல் கிராம சேவக்குகளுக்கான துறைத் தேர்வில் இவர்கள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்பது, இதற்காக வகுக்கப்பட்டுள்ள அம்சங்களில் ஒன்று. மற்ற இரு தேர்வுகளைப் பொருத்த வரையில்,—அதாவது துறைத் தேர்வுகள், வளர்ச்சித்துறை கணக்குத் தேர்வு—முதல்தர நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட, அவர்கள் தேர்ச்சி பெறவேண்டிய அவசியமில்லை. ஆனல் பஞ்சாயத்து வளர்ச்சி பிரிவில் (Panchayat Development Unit), மேலும் பதவி உயர்வு பெறுவதற்கு, அவர்கள் இந்த தேர்வுகளில், தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகும். இத் தேர்வுகளுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள புத்தகங்களைப் படித்துணர்வதானது, பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் பஞ்சாயத்து வளர்ச்சி வேலைகளை கவனிக்க பெரிதும் உதவும். மேலும் இளவயதிலேயே, இத் தேர்வுகளிலெல்லாம் வெற்றி பெறுவது அவர்களுக்கு மிகவும் எளிதான காரியமும்கூட. ஆகவே இவர்களெல்லாம் தேர்வுகளுக்குரிய கட்டணங்களைச் செலுத்தி, தேர்வுகளில் அனுமதிக்கப்படலாம் என்று அரசாங்கம் கருதுகிறது.

பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குச் தேர்வு சம்பந்தப்பட்ட வரையில், இத் தேர்வில் வெற்றியடைந்தால், அது பஞ்சாயத்து அலுவலர்கள், கணக்குகள் சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடும் போது பெரிதும் பயன்படக்கூடும். எனவே பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்விற்கும்—கட்டணங்களைச் செலுத்தியதன் பேரில்—இவர்கள் அனுமதிக்கப்படலாம்.

**மேற்கண்ட பத்தி (2)** : முதல்தர நிர்வாக அதிகாரியின் பதவிக்கு உயர்வு பெற, பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்வு (Panchayat Development Account Test) மற்றும் பஞ்சாயத்து வளர்ச்சித்துறை அதிகாரிகளுக்கான துறைத் தேர்வு (Departmental Test for Officers of the Panchayat Development Department) ஆகியவற்றில் முன்னதாகவே தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும் என்பதை அவசியமாக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை. பஞ்சாயத்து வளர்ச்சிப் பிரிவில், பதவி உயர்வு பெற இத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டுமென்று இப்போதுள்ள ஏற்பாடே போதுமானதாகும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 241148-ன் சுருக்கம்.)

## பஞ்சாயத்து வளர்ச்சி ஆலோசனைக் குழு

**5-வது கூட்டம்**

பஞ்சாயத்து வளர்ச்சி ஆலோசனைக் குழுவின் 5-வது கூட்டம், சென்னையில், 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24, 25 தேதிகளில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில், ரூ. 6,000 உத்தேச மதிப்பில், அலுவலகக் கட்டிடம் கட்டிக்கொள்ள பஞ்சாயத்துக்கள் ஊக்குவிக்கப்படவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப் பட்டது. அதற்கு அரசாங்க மானியம் கிடைக்குமென்றும், உள்ளூர் நன்கொடைகள் கிடைப்பதை ஒட்டி, படிப் படியான செயல் திட்டமாக இதை மேற்கொள்ளலாம் என்றும் முதலமைச்சர் யோசனை கூறினுர்.

விவசாய பம்பு செட்டுகளுக்கு இப்போதுள்ள கட்டுப் பாடுகள் (மின்சார உபயோக நெரிசல் உள்ள நேரங் களில் தவிர) நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதை அனைவரும் கரகோஷத்துடன வரவேற்றனர்.

(கூட்ட நிகழ்ச்சி பற்றிய முழு விவரம் அடுத்த இதழில்)

## "கிராம நலம்" சந்தாதாரர்களுக்கு :

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய " கிராம நலம் " சந்தாதாரர்களின் ஆண்டு சந்தா 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. " கிராம நலம் " இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இந்தச் சந்தா எண்களுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, ஆண்டுச் சந்தா ரூ. 2 வீதம், சந்தாத் தொகையை " கிராம வளர்ச்சி நெறியாளர், செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை–9 " என்ற முகவரிக்கு, மணியார்டர் மூலம் அனுப்பக் கோரப்படுகிறுர்கள். சந்தா எண் " கிராம நலம் " இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் சந்தாதாரரின் முகவரிக்குமேல் பொறிக்கப்பட்டிருக்கிறது.

### சந்தா எண்கள்

19279

19285

26856

28965 முதல் 28971 வரை

28973 முதல் 28982 வரை

28984 முதல் 28989 வரை

28991 முதல் 29029 வரை

29031 முதல் 29240 வரை

29242 முதல் 29280 வரை

29993

---

## இந்த இதழில்


| | பக்கம். |
|---|---|
| நமது திட்டங்களைக் குறை கூறுவோரின் கவனத்திற்கு | 2 |
| சமுதாய மாற்றத்திற்கு காந்தி வழி | 7 |
| கிராம மறுமலர்ச்சி | 11 |
| வையமதை வாழவைப்பாய் | 12 |
| பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத் திட்டம் | 15 |
| கிராம வளர்ச்சிக்குப் பணிபுரியும் ஆர்வம் தழைக்க.. | 17 |


## அடுத்த இதழில்...

பஞ்சாயத்து வளர்ச்சி ஆலோசனைக் குழு—
5-வது கூட்டம் (முழு விவரம்–படங்களுடன்)

நரிக்குறவர்களின் நல்வாழ்வு (சிறப்புக் கட்டுரை)

மரங்களின் பாதுகாப்பு—பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புகள்—திரு S. சுப்பையன் (சிறப்புக் கட்டுரை)

முன் வினை முந்திவர.. (சிறு கதை)

மற்றும் பல விசேஷ அம்சங்கள் ....

---


வெளியிடுபவர் :
திரு. கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.

ஆசிரியர் :
திரு. எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.


Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras.
Wrapper printed at Screen Designs, Madras-2.



பொருள் வளம் பெற-
திறமைமிக்க கிராமக் கைத்தொழில்கள் வளர்ப்போம்

EGD. No.M.7277
©
ழ்நாடு-அரசாங்கம். 1966

**கிராமங்களுக்கு மின்சாரம்-**
**தமிழ்நாட்டின் சிறந்த சாதனை.**
**பாசனத்தோடு, மின்சார உற்பத்தியையும் பெருக்கி,**
**உணவு உற்பத்திக்கு உதவ புதிய முயற்சி.**



மேட்டூர் அணைக்கருகே
அண்மையில் உருவாகியுள்ள 'குடவரை மின் நிலையம்'
(METTUR TUNNEL POWER-HOUSE)
இந்திய-சோவியத் (INDIA-USSR)